

இந்தியாவின் ஸேவைக்காக நமது இயந்திர வேலை நிபுணர்கள்

யுத்தமானது நமக்குவேண்டிய முக்கிய ஸாமான்களையும், இயந்திரங்களையும், இயந்திரங்களுக்கு வேண்டிய பாகங்களையும் அயல் நாடுகளிலிருந்து வருத்துவதை தடுத்துவிட்டது. ஆனல், நம் இயந்திரவேலை நிபுணர்கள் இவைகளைப்பற்றி முன்னமேயே திட்டம் பண்ணிவிட்டார்கள். அவர்கள் நமக்கு வேண்டிய ஸாமானகளுக்கு நம் நாட்டில் கிடைக்கும் ஸாதன பொருள்களை உபயோகப்படுத்த வழிகண்டு பிடித்து நம் தொழிற்சாலைகளிலேயே இயந்திரங்களையும் இதர கருவிகளையும் செய்து விட்டார்கள்.

ஆகையால் ஸமாதான காலங்களிலிருக்கும் எங்கள் ஸாமான்களின் உயர்தர ரகத்தைக் குறைக்காமல் தேசத்திற்கு வேண்டிய ஸாமான்களை தயாரித்து கொடுப்பதும், நாட்டிலெங்கும் நம்முடைய ஸாமான்கள் யாதொரு தடங்கலின்றி கிடைக்கச் செய்வதுமே எங்களுடைய திடமான நோக்கம்.

நீங்கள் உங்களாலான உதவியை எங்களுக்குச் செய்யாவிடில் நாங்கள் எங்கள் கடைமையை பூராக செய்ய முடியாது. ஏராளமான ஸாமான்கள் கிடைப்பதுடன் எங்கள் விற்பனையாட்கள் நாட்டிலுள்ள பெரிய வியாபாரிகளுக்கும், சிறிய வியாபாரிகளுக்கும் ஸாமான்களை ஸரிவர பங்கிடப்போவதாலும் நீங்கள் வேண்டியதற்கு மேல் வாங்கவேண்டியதில்லை.

ஸாமான்களை உபயோகிப்பவர்களின் நன்மைக்காக—டாடா ஆயில் மில்ஸ் கம்பெனியாரால் பிரசுரிக்கப் பட்டது.

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, ஜி. டி., மதராஸ்

மதனமஞ்சரி
மாத்திரைகள்

மலச்சிக்கல், ஸ்வப்பனஸ்கலிதம், பலஹீனம், தாதுகேடுகள் முதலியவற்றைநீக்கி, இரத்த புஷ்டியும், தாது விருத்தியு முண்டாகும். விலை ரூ. 1/.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோடு, மதராஸ்
கோயமுத்தூர்: ஏஜண்டு, மூர்த்தி பிரதர்ஸ 272, சுக்ரவார் பேட்டை

டோங்ரே பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு
விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

கர்ப்பத்தைத்தடுக்க 'ரஹாத்'

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாத்திரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங் மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay
Phone 21343.

பகவத் கீதை
விலை ரூ. 3.
மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
சென்னை.

அறிவிப்பு

எங்களுடைய கௌரவமுள்ள வாடிக்கைக்காரர்களின் வேண்டுகோளுக்கிணங்க எங்கள் வொர்க்ஷாப்பை மீண்டும் நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். ஆர்டர்களுக்கு மட்டும் நகைகள் தயாரிக்க நாங்கள் சந்தோஷத்துடன் சித்தமாக இருக்கிறோம். நாணய மார்க்கெட்டில் அசாதாரண நிலைமை இருந்து வருவதால் வாடிக்கைக்காரர்கள் தேவையான தங்கத்தையும், வெள்ளியையும் சப்ளை செய்யவோ அல்லது அதன் உத்தேச கிரயத்தை அட்வான்ஸாக எங்களுக்கு அனுப்பி வைக்கும்படியோ கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விக்கம்ஸி சபில்தாஸ் & சன்ஸ்,
நகைகள் செய்பவர்கள்: வைர வியாபாரிகள்,
112, சைனபஜார் ரோடு, சென்னை.

"அம்மா, நான் செத்து விடுவேனென்று யார் சொன்னது ?"

அன்பே, கோபம் கொள்ளாதே—என்றும், தெரியாத சிலபேர்கள் ஏதோ என்னமோ சொன்னார்களாம்.

ஜம்மியின் **லிவர் க்யூர்**

குழந்தைகளின் ஈரல், குலைகட்டி முதலிய நோய்களை அபரிமிதமாய் குணப்படுத்தும். எல்லாவிடங்களிலும் விற்கப்படுகின்றன.

ஜம்மி வெங்கிடரமணய்யா அண்டு சன்ஸ்—மைலாபூர், மதராஸ்.
சப் ஆபீஸ்:—கும்பகோணம். (S.I.R.)
பிராஞ்சுகள்:—பம்பாய், கல்கத்தா, லக்னோ, திருச்சினாப்பள்ளி, பெங்களூர், விஜயநகரம்.

Printed and Published by T. S. Visvanatha Iyer B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras, Editor, C. R. Srinivasan B.A.

சுதேசமித்திரன்

Vol. 14 No 1 7-2-43 வாரப்பதிப்பு Price 2 ANNAS

THE SWADESAMITRAN ILLUSTRATED WEEKLY

ஸ்ரீ சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு 7-2-'43

சென்ற வார நிகழ்ச்சிகள்

ஸ்ரீ சத்தியமூர்த்தி விடுதலை

பாதுகாப்புச் சட்டப்படி காவலில் வைக்கப்பட்டிருந்த ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி எம். எல். ஏ. சென்ற வாரம்

தேக அசௌக்கியம் காரணமாக விடுதலை செய்யப்பட்டார்.

* * * *

கூட்டு அபராத அவசரச் சட்டத்தை ரத்து செய்ய

மத்திய சட்ட சபை அங்கத்தினரான ஜனாப் முகம்மது ஆமத் காஸ்மி கூட்டு அபராத அவசரச் சட்டத்தை ரத்து செய்ய ஒரு மசோதா கொண்டுவரப் போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். இதைக் கொண்டுவர அவர் கவர்னர் ஜெனரலின் அநுமதியையும் கோரியிருப்பதாகத் தெரிகிறது.

* * * *

பங்களூர் சிறையில் தடியடி

அதிகாரத்திற்கு மீறி நடந்ததாக, பங்களூரில் காவல் கைதிகள் மீது ஜனவரி மாதம் 26-ந் தேதி இலேசாக தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதெனத் தெரிகிறது.

சிறைவாசிகளில் சிலர் பரபரப்புகொண்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உத்திரவை மீறி சிப் ஜெயிலரைத்தாக்க முயன்றதாக சொல்லப்படுகிறது. பலாத்காரம் நேராமல் தடுக்க முயன்றது பயனளியாததாலும் சிலர் பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டதாலும், அமைதிக்குப் பங்கம் விளைவிக்க முயன்றதாலும் இலேசாகத் தடியடிப்பிரயோகம் செய்யப்பட்டது. நிலைமை மிஞ்சாமல் கட்டுப்படுத்தப்பட்டது.

* * * *

மத்திய சர்க்கார் செலவு வரவுக்கு மிஞ்சிவிட்டது

மத்ய சர்க்கார் மாதா மாதம் தயாரிக்கும் கணக்குபடி இவ்வருஷம் முதல் எட்டு மாதங்களுக்கு வரவை விட 91-1/3 கோடி ரூபாய் அதிகமாகச் செலவாகியிருப்பதாகத் தெரிகிறது. சென்ற வருஷம் இந்தக் காலத்தில் 36-1/3 கோடிதான் அதிக செலவாகியிருந்தது. ராணுவச் செலவு 58¼ கோடியிலிருந்து 120¾ கோடியாக உயர்ந்திருக்கிறது.

* * * *

ஏழைகளுக்குத் துணி வசதி

பம்பாயில் நெசவாலைக்காரர்கள் நூற்றுக்கு 60 விதம் ஸ்டாண்டார்டு துணி உற்பத்தி செய்யவும் சப்ளை இலாகா உத்தரவுக்கேற்ப மற்ற உற்பத்தியைக் கவனிக்கவும் இணங்கியிருக்கிறார்கள்.

இந்தியா கவர்ன்மெண்டு வியாபார மெம்பர் கனம் என். ஆர். சர்க்கார் தலைமையில் நெசவுத் தொழில் ஆலோசனைக் கமிட்டிக் கூட்டம் சமீபத்தில் கூடியது. 1943-ம் வருஷம் ஏப்ரல் மாதத்துடன் முடியும் மூன்று மாதங்களுக்கு 5-கோடி கெஜம் ஸ்டாண்டார்டு துணி நெய்வதென்றும் அதற்கு மேல் அனுபவத்தைத் தெரிந்து கொண்டு அந்த உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதென்றும் முதலில் முடிவு செய்தனர். ஜவுளி உற்பத்தி விஷயமாகவும், வினியோக விஷயமாகவும் இதுவரை செய்யப்பட்டிருந்த தற்காலிக ஏற்பாடுகள் பலவும் பரிசீலனை செய்யப்பட்டு சர்க்கார் அமைத்த திட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

சப்ளை இலாகா ஏற்படுத்தியுள்ள பருத்தி ஜவுளி ஆலோசனை சபையைப் போல் ஸ்டாண்டார்டு துணி ஆலோசனை சபை ஒன்று அமைக்கப்படும். அதில் ஜவுளித் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களின் பிரதிநிதிகளும் சர்க்காரால் நியமிக்கப்படும் நால்வரும் ஸ்தானம் பெறுவர். இந்த சபையினர் ஸ்டாண்டார்டு துணி உற்பத்தி, சப்ளை விற்பனை விலை நிர்ணயம் முதலிய விஷயங்கள் குறித்துச் சர்க்காருக்கு யோசனை கூறுவார்கள். ஸ்டாண்டார்டு துணி கமிஷனர் ஒருவரும் பிரதம நிர்வாகியாக நியமிக்கப்படுவார். இவர் இந்தியாக் கவர்ன்மெண்டால் நியமிக்கப்படுவார். ஆங்காங்கு பிரதேசக் கமிஷனர்களும் நியமிக்கப்படுவர். மூன்று மாதத்துக்கு ஒரு முறை சர்க்கார் இந்த சபையுடன் கலந்து ஸ்டாண்டார்டு துணி விலையை நிர்ணயிப்பார்கள். மாகாணத்தில் இந்தத் துணி வினியோக விஷயத்தை ஆங்காங்கு ஏற்படும் ஆலோசனைக் கமிட்டிகளின் உதவியைக் கொண்டு மாகாண சர்க்கார் கவனிப்பார்கள். இந்த ஆலோசனைக் கமிட்டிகளில் உத்தியோகஸ்தரும் உத்தியோக பற்றற்றவர்களும் இருப்பார்கள். சமஸ்தானங்களின் ஆதரவும் இது விஷயமாக நாடப்படும். இன்னும் சில விவரங்கள் திட்டமானதும் இந்த ஏற்பாடு கூடிய சீக்கிரத்தில் அமுலுக்கு வரும்.

துருக்கியில் சர்ச்சில்

பிரதம மந்திரி சர்ச்சில்.



துருக்கித் தலைவர் இனேனு.

கஸபிளாங்கா மகாநாட்டுக்குப்பின் மிஸ்டர் சர்ச்சில் துருக்கி சென்று ஜனாதிபதி இனேனுவைச் சந்தித்த செய்தி விசேஷ பிரமிப்பு உண்டாக்கும். அதே சமயத்தில் பிரிட்டிஷ், துருக்கிப் படைத் தலைவர்களும் கலந்து பேசினர். துருக்கியின் பாதுகாப்பைப் பலப்படுத்த பிரிட்டனும், யுனைடெட் ஸ்டேட்ஸும் எந்த முறையில் உதவுவதென்ற விஷயத்தில் துருக்கிக்கும், நேசக் கட்சிக்கும் ஒரு ஒப்பந்தமேற்பட்டிருக்கிறது. இனி துருக்கி செல்லும் பிரிட்டிஷ், அமெரிக்க தளவாட சப்ளையின் அளவு பெருகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹிட்லருக்கு இப்போது எல்லா முனைகளிலும் சங்கடம். அவர் நிறுவியிருந்த திட்டங்கள் அனைத்தும் கோளாறாகப் போய் விட்டன. இங்கிலையில் அவர் துருக்கி வழியாகப் பாய்ந்து ருஷ்யரையும், எகிப்திலுள்ள பிரிட்டிஷ் படையையும் பின்புறத்தில் தாக்கத் துணியலாம். இதை எதிர்பார்த்தே சர்ச்சில் தமது ராணுவ ஆலோசகர்களுடன் துருக்கி சென்று அந்நாட்டினரை ஊக்கப்படுத்தியிருக்கவேண்டும்.

இந்த இதழில் இருப்பவை

	பக்கம்		பக்கம்
குண்டலகேசி (வ. வேணுகோபாலன்)	5	அற்புத சிருஷ்டி (தங்கம்மாள் பாரதி)	13
நாடோடிப் பாட்டுகள் (கி. வா. ஜகந்நாதன்)	7	யுத்தத்துக்குப் பின் (கே. ஸ்ரீனிவாஸன்)	14
கண்டுபிடித்தவர்கள் யார்?	8	மத்தியான ரகளை (சிறு கதை–கல்யாணி,	15
திட்டமான வாழ்க்கை (வ ரா.)	9	பரிசம் (பெண் விலை) (தி நா. சுப்ரமணியன்)	17
வேவும் எதிர்வேவும் (நியாயவாதி)	11	வறுமையும் நாணயமும் (சிறுவர் கதை-டி. பி. கே.)	19
நோயற்றவாழ்வு துரைசாமி ஐயங்கார்	12		

போர் போகும் போக்கு

★

ரஷ்யப் போர்முனை

ரஷ்யரது வெற்றி வெள்ளத்தை ஜெர்மனியர் தேக்க முடியவில்லை. ஸ்டாலின்கிராடிலிருந்த 3,30,000 நாஸித் துருப்புகளில் சுமார் 2,50,000 பேர் மாண்டு விட்டனர். எஞ்சியவர்களில் ஒரு பகுதி கைதியாயிருக்கின்றனர். அங்கிருந்த எதிரிப் படையின் சேனாதிபதி பீல்டு மார்ஷல் பாலஸும் சிறைப்பட்டுவிட்டார். அவர் கடுங்காயமடைந்திருப்பதாக ஜெர்மன் ரேடியோ அறிவிக்கிறது. அவருடன் வேறு பல ஜெர்மன் ஜெனரல்களும் சிறைபிடிக்கப்பட்டிருக்கின்றனர். ஸ்டாலின்கிராடில் நிர்மூலமான சேனை 6-வது நாஸிச் சேனை. யுத்த ஆரம்பத்தில் பெல்ஜியம் மீது வெற்றிகரமாகப் படையெடுத்த படை அதுதான்.

ஸ்டாலின்கிராடில் முன்போல் ரஷ்ய ஜனங்களின் நடமாட்டம் ஆரம்பமாகி விட்டது. நூற்றுக்கணக்கான ஸ்திரீகளும், குழந்தைகளும் திரும்பி வந்து, தங்கள் வீடுகள் இருந்த இடங்களில், உருப்படியான சாமான்கள் ஏதேனும் இருக்கின்றனவா என்று தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆங்காங்குக்குள் இன்றும் இரண்டொரு இடங்களில் சிறு ஜெர்மன் படைகள் எதிர்த்து வருகின்றன. அவர்களுக்கு விமான மூலம் உணவு முதலிய சப்ளை செய்ய வரும் நாஸி விமானிகள் இடந் தெரியாமல் ரஷ்யர் உள்ள ஸ்தலங்களில் சப்ளையை வீசுகின்றனர். அத்துடன் ஜெர்மன் விமானிகள் ரஷ்யரைத் தாக்குவதாக எண்ணிக்கொண்டு தங்களுடைய சகாக்கள்மீதே குண்டுகளைப் பொழிகிறார்கள்.

காகஸஸில் உள்ள நாஸிகள் கதி

காகஸஸில் உள்ள ஜெர்மன் படைகளுக்கும் ஆபத்து அதிகரித்துக் கொண்டிருக்கிறது. மெய்காப் எண்ணெய்ப் பிரதேசம் திரும்ப சோவியத் கைக்கு வந்து விட்டது. ரஷ்யர் கருங் கடல் துறைமுகமான நவரோஸிஸ்கை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ராஸ்டாவுக்கும் கியுபன் பகுதிக்கும் நடுவே உள்ள பல ரயில் பாதைகளை ரஷ்யர் துண்டித்துவிட்டனர். நவரோஸ்கை அவர்கள் கைப்பற்றிவிட்டால் குறைந்தது 20 ஜெர்மன் சேனைகளின் பாடு திண்டாட்டமாகிவிடும். அவை ஒன்று சரணடைய வேண்டும்; அல்லது கெர்ச் ஜலசந்தியைக் கடந்து கிரிமியாவுக்குச் செல்வதிலுள்ள அபாயத்தைச் சமாளித்தாகவேண்டும். கிராஸ்னடார் என்ற முக்கிய நகரையும் ரஷ்யர் பல திக்குகளிலிருந்து நெருங்கிக் கொண்டிருக்கிறார்கள். மாஸ்கோ—டகன்ராக் ரயில் பாதையிலுள்ள ஸ்வாடோவா என்ற முக்கிய ஸ்டேஷனை நாஸிகள் பறி கொடுத்துவிட்டனர். வாரனேஷுக்கு மேற்கே ரஷ்யவளையத்துக்குள் அகப்பட்ட ஜெர்மன் துருப்புகள் நிர்மூலமாக்கப்பட்டு வருகின்றன. அங்கு ரஷ்யருக்கும், கர்ஸ்குக்கும் இடையேயுள்ள தூரம் வேகமாகக் குறைந்து வருகிறது. இன்னொரு ரஷ்யப் படை ராஸ்டாவிலிருந்து முப்பது மைல் தூரத்துக்குள் சென்று விட்டது. லெனின்கிராட் அரங்கத்தில் சென்ற இரு வாரங்களாகக் கடும் போர் நடந்து கொண்டிருக்கிறது. நெருக்கடி அதிகரித்து வருவது கண்டு ஜெர்மன் அதிகாரிகள் நார்வே, பிரான்ஸ், பெல்ஜியம் இவ்விடங்களிலிருந்து பல நாஸிப்படைகளைத் துரிதமாக ரஷ்யமுனைக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.



வட ஆப்பிரிக்க அரங்கம்

ரோமலின் துருப்புகளைத் துரத்திச் சென்றுகொண்டிருக்கும் எட்டாவது பிரிட்டிஷ் படை டிரிபோலியைக் கைப்பற்றியபின், அதற்கு மேற்கே 60 மைல் தூரத்திலுள்ள ஸுவாரா துறைமுகத்தையும் இப்போது கைப்பற்றி விட்டது. பிரிட்டிஷ் படையினரில் ஒரு பகுதி டிரிபோலிடானியா எல்லையைக் கடந்து டியுனிஸியாவுக்குள் பிரவேசித்து விட்டதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

டியுனிஸியாவில் மத்தியமுனையில் எதிரித் துருப்புகள் முன்னேறித் தாக்க முயன்று வருகின்றன. கடற்கரையோரமாகச் சென்று டியுனிஸ் பகுதியிலுள்ள அச்சுப்படைகளுடன் சேர எண்ணியிருக்கும் ரோமலின் துருப்புகளுக்குத் தடை ஏற்படாதவாறு செய்வதே இதன் கருத்தாகும். ஆனால் யு. எஸ். படைகள் ஜெர்மன் நிலையங்களைத் தீவிரமாகத் திருப்பி வருகின்றன.

உற்சாகமற்ற பேச்சு

நாஸித் தலைவர்கள் எளிதாக வெற்றியடைந்து விடலாமென்று முன் போல் இப்போது எண்ணவில்லை. அந்த நம்பிக்கை நீடித்திருக்குமாயின், தாங்கள் அதிகாரத்திற்கு வந்த தினத்தின் பத்தாவது ஆண்டு விழாவை அவர்கள் கொண்டாடிய வகை வேறாக இருந்திருக்கும்.

மீண்டும் இதோ வெற்றி என்றால் பலிக்காதெனக் கண்ட ஹிட்லர் இம்முறை உறுதிகூறத் துணியவில்லை. "நம்மாலான வரை உயிரைப் பலிகொடுத்துக் கொண்டிருந்தால் என்றாவது ஒரு நாள் விடிமோட்சம் வந்தே தீரும்" என்ற தோரணையில் அவர் பேசியிருக்கிறார். இப்பேச்சைக் கேட்டு, ஜெர்மன் மக்களின் உள்ளம் இடியாமல் என்ன செய்யும்? அவர்களுக்கு அவீர் ஆறுதல் கூறும் முறை விநோதமானது. 'போல்ஷ்விக் காட்டு மிராண்டி வெள்ளம் கரை புரண்டு வந்து ஐரோப்பா கண்டத்தை மூழ்கடித்திருந்தால், நம் கதியாதாகியிருக்கும்' என்று அவர் கேட்கிறார்.

* * * *

வாஷிங்டனில் மறியல்

ஜனவரி மாதம் 26-ந்தேதி இந்தியா சுயேச்சை தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு வாஷிங்டனில் இந்திய சுயேச்சைக் கமிட்டி மெம்பர்களும் வேறு மூன்று கோஷ்டியினரும் பிரிட்டிஷ் ஸ்தானிகர் ஆபீஸர் முன்பு மறியல் செய்தனர். ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாக சில யுவர்களும் 8 யுவதிகளும் கைது செய்யப்பட்டனர்.

* * * *

தலைவர்களுடன் பேசுவதற்குத் தடை

ராஜீய விஷயங்களைப்பற்றிக் காங்கிரஸ் தலைவர்களும் காங்கிரஸ்காரரல்லாதவர்களது பிரதிநிதிகளும் சேர்ந்து பேசுவதற்குள்ள தடையை நீக்கும்படி காமன்ஸில் சோரன்ஸன் கேட்ட கேள்விக்கு இந்தியா மந்திரி அமெரி இவ்விஷயத்தில் முடிவுசெய்வது இந்தியா கவர்ன்மெண்டார்தான். அவர்களை இம்முடிவைப் புனராலோசனை செய்யும்படி கேட்கக் காரணமெதுவுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை என்று சொல்லிவிட்டார்.

* * * *

பிரிட்டிஷ் தொழிற்கக்ஷி தாக்கீது

இந்தியா விஷயமாகத் தொழிற் கட்சியின் கொள்கைகளை அனுசரிக்காத இந்தியர்கள் கூட்டங்களுக்கு தொழிற்கட்சி மெம்பர்கள் ஆதரவளிக்கக் கூடாதென்று தொழிற் கட்சி தலைமைக் காரியாலயத்திலிருந்து அறிக்கை வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது.

பார்லிமெண்டிலிருக்கும் தொழிற் கட்சியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் காங்கிரஸுக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையை ஆதரித்து பிரசங்கங்கள் செய்யக் கூடாதென்று அறிவிக்கப்பட்டிருப்பதாக ஜியார்ஜ் ஷெப்பர்ட் கூறினார்.

* * * *

அடுத்த வருஷம் நேச தேச வெற்றி

ஜெனரல் கிராட் தாம் 30 லக்ஷம் பேர் கொண்ட படையைத் திரட்டப்போவதாகவும், இப்படை ஐரோப்பாவில் போர் புரியும் என்றும், இதற்குத் தேவையான யுத்த சாதனங்களை அளிக்க மிஸ்டர் ரூஸ்வெல்ட் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் வெளியிட்டார்.

"1944-ல் நேச தேசங்களுக்கு வெற்றி கிடைக்கும், அவ்வருஷம் நாம் ஜெர்மனிக்குள் புகுந்து அதைத் தாக்குவோம்" எனவும் அவர் கூறியதாக ஆல்ஜியர்ஸிலிருந்து ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

ஸாலமன் தீவில் 27 நிமிஷ நேரத்துக்குள் 6 ஜப்பானியக் கப்பல்களை மூழ்கடித்த யு. எஸ் க்ரூஸரின் தளகர்த்தர் காப்டன் எட் வர்ட ஜே. மோரான்.

2

மாலையில் மலர்ந்த நோய்

★

வ. வேணுகோபாலன்

இந்திரவிழாக் கொண்டாட்டத்தின் இடையே ஒரு நாள் அந்திப்பொழுதின் காட்சி எழுதவொண்ணு ஓவியம் என விளங்கியது. வானம் செக்கச் செவேலென்த் தோன்றியது. செக்கர் வானின் செந்நிற ஒளியால், காவிரிப்பூம்பட்டினம் பொன்னுலியன்ற நகர் எனப் பொலிந்தது. தீப்பிழம்பாய் விளங்கிய சூரியனைக் கண்டு அஞ்சி இருள் பரவாமல் ஒளித்திருந்தது. அப்போது புதிய சோபையுடன்தோற்றும் நகரின் காட்சியையும், கடற்காட்சியையும், காவிரிக் காட்சியையும் சோலை, கோயில் முதலியவற்றின் காட்சியையும் கண்டு ஆடவரும் மகளிரும் களித்திருந்தனர்.

முத்துச் சிவிகைமுன்

அரசர் வீதி தொடங்கி அடிமைகள் வாழும் வீதி இறுதியாக எல்லா வீதிகளிலும் எள் விழற்கு இடமில்லாமல் மக்கள் இயங்கிக்கொண்டிருந்தனர். பெருஞ்செல்வர்களாகிய வணிகர்கள், தம் பெருமைக்கு ஏற்ப குதிரை, தேர், சிவிகை வண்டி முதலியவற்றில் ஏறிக்கொண்டு நகர்க்காட்சிகளைக்காண வெளிக்கிளம்பினர். அப்போது அவ்வீதியின் நடுவில் உள்ள உன்னதமான மாளிகை ஒன்றின் வாயிலில் முத்து சிவிகை ஒன்று வைக்கப் பெற்றிருந்தது. மெல்லிய பட்டுத்துணியால் அது மூடப்பெற்றிருந்தது. பலவகைச் சித்திர வேலைப்பாடுகள் அமைந்த அச்சிவிகை பார்ப்பவர் கண்களைப் பறித்தது. சிவிகையின் ஒரு புறத்தில் அதைத் தூக்கிச் செல்லும் மல்லர்களும், காவல் வீரர்களாகிய யவனர்களும் நின்றுகொண்டிருந்தனர். வீதியில் செல்பவர், அந்தச் சிவிகையைப் பார்த்த வண்ணம் போய்க்கொண்டிருந்தனர். இந்நிலையில், அம்மாளிகையின் ஒரு புறத்திலிருந்து இரண்டு யுவதிகள், விரைவாக வெளிவந்து சிவிகையின் பக்கம் சென்றனர். முதலில் வந்த யுவதி விரைவாகச் சிவிகையின் திரையை அகற்றினாள் அந்தத் தன்மையால், பின்னே நின்ற யுவதிக்கு, அவள் தோழி என்பது தெரிந்தது. ஆடையாபரணங்களாலும். அழகு தோற்றம் முதலியவற்றாலும், திரையை அகற்றிய யுவதி, ஏவல் புரியும் பெண் என்பது அறிய முடிந்தது. பின்னே நின்ற யுவதி, குனிந்த தலையுடன், கடைக்கண்களால் வீதியை நோக்கினாள். அப்போது அவள் கண்களில் புதிய ஒளி உண்டாயிற்று. உடனே, மீண்டும் தன் கூரிய விழிகளால் நோக்கிய இடத்தை நோக்கினாள். அப்போது அவள் தலை தானாகவே நிமிர்ந்து விட்டது. சிவிகையை விட்டுச் சிறிது பின்னே நகர்ந்து நின்று நோக்கினாள். அந்த யுவதியின் கரியவிழிகளுக்குத் தப்பிப் போக அவ்விளைஞனால் முடியவில்லை. வீதிவழியே செல்லும் அந்த யுவகன் சிறிது தயங்கி நின்றான். அவ்விருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கி. மதம் கொண்ட, களிறும், பிடியும் மயங்கி, பாகர்களுக்கு அடங்காமல் ஒன்றை ஒன்று உற்று நோக்கி, இன்புற்றால் போல இன்புற்றனர். ஒருவருள்ளத்தில் ஒருவர் மாறிப் புகுந்து நின்றனர்.

யுவனின் அழகு

யுவகனுக்கு இருபத்திரெண்டு வயது இருக்கும். பெருஞ் செல்வம் படைத்த ஒரு வணிகனின் புதல்வன். நல்ல உயரமும் உயரத்திற்கு ஏற்ற பருமனும் உடையவன். இந்திரநீலமொத்து இருண்டதலைமயிருடையவன், தலையில் பொன் கயிறு ஒன்று கட்டியிருந்தான். விசாலமான நெற்றி; பரந்த முகம்; விரிந்த மார்பு; உருண்டு, திரண்டு உயர்ந்த தோள்கள்; கூரிய மூக்கு; கருடன்போன்றபார்வை; முழங்கால் அளவாகத்தரிக்கும் காற்சட்டை ஒன்றை அணிந்திருந்தான். இடையில் செருகிய வாள், 'பள பள' வென்று ஒளி வீசியது.



அவனுடைய முகப் பொலிவும், ஆழ்ந்த பார்வையும் பார்ப்பவரைக் கவர்ச்சி கொள்ளும் தன்மையவாய் அமைந்திருந்தன. இத்தகைய வடிவத்துடன், உயர்ந்த சாதிக் குதிரை யொன்றின் மேல் அமர்ந்திருந்த அவன், ஓர், அரசிளங்குமரன் போல் விளங்கினான்.

யுவதிக்குப் பதினேழு வயது இருக்கும். செல்வம் மிக்க ஒரு வணிகன் புதல்வி. அவளுடைய அங்கலாவண்யத்தையும், பொன்னின் சோதியையும் பூவின் நறுமணத்தையும் கொண்ட அவள் மேனியின் மேன்மையையும், கண்களின் மருட்சியையும், பார்ப்பவரைப் பரிகசிக்கும் புன்னகையையும் நடையின் அழகையும் அளவு செய்து உவமை காட்டல் இயலா. ஒரு கட்டழகி, அவள். ஆபரணங்களுக்கு ஒளியையும் அழகையும் கொடுப்பது அவள் மேனியழகு என்றால் வேறு கூறவும் வேண்டுமா? அழகுக்கு அழகாக விளங்கிய அந்த யுவதியின் நோக்கத்தால், யுவகன் மயங்கித் தயங்கியது ஓர் ஆச்சரியம் அல்ல. குலம், அழகு, செல்வம், இளமை முதலியவற்றால், ஒத்த பெருமையையும் ஒப்புமையையும் பெற்ற இருவரும் எதிர்பாராதபடி சந்தித்து மனம் ஒன்றியதுதான் ஆச்சரியம். இதை ஊழ்வினை என்று கூறுவதல்லாமல் வேறு என்ன வென்று சொல்லுவது?

தோழியின் குறும்பு

யுவகனுடைய கம்பீரமான பார்வையால், உள்ளம் நெகிழ்ந்த நங்கை, நாணித் தலை குனிந்து நிலத்தை நோக்கினாள். இளைஞனின் மேனியழகைக் காண உள்ளம் மிக்குஎழுதலால், மீண்டும் அவன் நோக்கிற்கு எதிராக நோக்கினாள். யுவகனும் யுவதியும் காதலால் உள்ளம் சேர்ந்தனர். இருவரும் பழைய நிலையை அடைவதற்குச் சிறிது நேரம் ஆயிற்று. தங்கள், நிலைமையை யாராவது காண்பரோ என்ற நாணத்துடன் இருவரும் முகத்தைச் சிறிது திருப்பிக் கொண்டனர். அப்போது, களுக்கென்று யாரோ சிரிக்கும் ஒலி கேட்டது. உடனே திடுக்குற்றுச் சரே

லெனத் தலை நிமிர்ந்து பார்த்தாள் யுவதி.

"ஏன், திரையை அப்போதே அகற்றி விட்டேனே, நாழிகை ஆகவில்லையா?" என்று புன்முறுவலுடன் கூறினாள் அருகிலிருந்த தோழி-யுவதி. அவள் கண்களில் குறும்புத்தன்மையும், புன் முறுவலில் பரிகாசமும் புலப்பட்டன. தோழியின் வார்த்தைகளைக் கேட்ட யுவதி, தன் கூறிய விழிகளால், குத்திவிடுவாள் போலக் கோபமுடன் அவளைப் பார்த்தாள். சரேலென நகர்ந்து அன்புகனிய, யுவகனை நோக்கி விட்டுப் பல்லக்கில் புகுந்து உட்கார்ந்து கொண்டாள். தோழியும், புன் முறுவலுடன் யுவகனைப் பார்த்த வண்ணம், சிறிது நின்றாள். பின்னர், சிவிகையில் புகுந்து திரையைப் போட்டு விட்டு உட்கார்ந்து கொண்டாள்.

மீண்டும் சந்திப்பு

"காமன் கோட்டத்திற்குச் செல்லுங்கள்; விரைவில் திரும்ப வேண்டும்" என்று மல்லர்களுக்குக் கட்டளையிட்டாள் தோழி. உடனே மல்லர்கள், கனைத்துக் கொண்டு சிவிகையைத் தாங்கிக் கொண்டு சென்றனர். வாளை ஏந்திக் காவல் செய்து சென்றனர் யவன வீரர்கள். சிவிகை செல்வதைக் கண்ட யுவகன், கடிவாளத்தை இழுத்துப் பிடித்துக் குதிரையை மிக வேகமாகச் செலுத்தினான். மல்லர்கள், ஓட்டமும், நடையுமாகச் சென்றனர். சிவிகை சிறிது தூரம் செல்வதற்குள் யுவகனின் குதிரை அதை அணுகி விட்டது. ஆட்கள் தூக்கிச் செல்லும் சிவிகைக்கும், குதிரையின் வேகத்திற்கும் ஒத்து வருமா? சிவிகையின் பக்கம் குதிரை சென்றதும் கடிவாளத்தைச் சிறிது உதறி இழுத்தான். குதிரை சிறிதுநேரம் முன்னங் கால்களைத் தூக்கி நின்றது. குதிரையின் காலடிச் சப்தத்தைக் கேட்டுத் திரையை ஒரு புறம் விலக்கி வெளியே நோக்கினாள் யுவதி. யுவகன் அதைப் பார்த்ததும் பார்க்காததுமாகக் குதிரையைத் தட்டி ஓட்டினான். மிகவேகமுடன் குதிரை சென்று விட்டது.

சிவிகையிலிருந்தபடி, சாளரத்தின் வழியாக, குதிரை மறையும் வரையில் பார்த்துக் கொண்டே இருந்தாள் யுவதி. நகைத்துக் கொண்டே சில வார்த்தைகளைக் கூறினாள் தோழி. கோபத்துடன் மறுமொழி கூறினாள் யுவதி.

வழியில் யவனத் தச்சன் ஒருவனுடன் பேசிக்கொண்டிருந்தான் குதிரையில் வந்த யுவகன் அதைக் கவனித்துக் கொண்டே சென்றாள் சிவிகையில் செல்லும் யுவதி. யுவகன் சிவிகையை உற்றுப்பார்த்தான். அவள் முகம் அவ்வளவு நன்றாகத் தெரியவில்லை. இரண்டு யுவதிகளும் ஒருவருக்கொருவர் கோபமாகவும், பரிகாசமாகவும் பேசிக்கொள்வதுமட்டும் அவன் காதில் விழுந்தது. 'என்னபேசுகிறார்கள்?" என்று ஆலோசிப்பதற்குள் சிவிகை சென்றுவிட்டது.

காமன் கோட்டத்தைச் சிவிகை அடைந்தது. அதற்கு அருகில் உள்ள சோலையில் சிவிகையை வைத்தனர் மல்லர்கள். இந்திரவிழா தொடங்கப்பெற்ற நாள் முதல் சிவிகை, அந்த இடத்தில் தான் இறங்குவது வழக்கம். சிவிகையிறங்கிய இடத்தில் ஒரு பெரிய புன்னை மரம் விரிந்த கிளைகளுடன் குளிர்ச்சியைத் தந்து விளங்கியது. யுவதியின் தோழி, சிவிகையிலிருந்து, கழிகளையும் கரிய நிறமுள்ள பெரிய திரைத்துணியையும் எடுத்து யவனர்கள் கையில் கொடுத்தாள். யவனவீரர்கள் கழிகளை நட்டு அதனைச் சுற்றி மரத்தை அளாவ, திரையையும் போர்த்திக்கட்டினர்.

கூடார அமைப்பு

கூடாரம்போட்டபின் சிவிகையிலிருந்து வெளிவந்தாள் யுவதி. காற்றோட்டத்திற்காகக் கூடாரத்தின் ஒருபுறத்தில் திரையைச் சிறிது தள்ளிவைத்தாள் தோழி. புன்னை மரத்தின் கீழ், இருவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். கூடாரத்திற்கு வெளியில் இருந்து யவனவீரர்கள் காவல் செய்தனர். சோலையின் எல்லா இடங்களிலும் அங்கங்கே சில கூடாரங்கள் அமைக்கப்பெற்றிருந்தன. பெரும்பாலும் அந்தக் கூடாரங்களில் உள்ளவர்கள் மகளிர்களே. அவர்களில் கன்னி மகளிரே அதிகம் இருந்தனர். கன்னி மகளிர் பலரும் அங்கங்கே உலாவிக்கொண்டிருந்தனர். கணவரைப் பிரிந்த மங்கையரும், கன்னிமகளிரிற் பலரும் காமன் கோட்டத்திற்குச் சென்று காமதேவனை வணங்கிச்சென்று கொண்டிருந்தனர். பலர் வணங்கச்சென்று கொண்டிருந்தனர். அருகில் காவிரி கடலுடன் கலக்கும் துறையில் பலர் மூழ்கிக்கொண்டிருந்தனர். மரங்களில் கட்டிய ஊஞ்சலில் இருந்து பூச்சூடி விளையாடினர். கணவரும் மகளிருமாகச் சேர்ந்து, நாவாய்களில் அமர்ந்து கடலில் சிறிது தூரம் ஊர்ந்து யாத்திரை செய்தனர். காவிரிச் சங்கமத்திற்கு அருகில் உள்ள, சோம குண்டம், சூரிய குண்டம் என்ற தெய்வப் பொய்கைகளில் மூழ்கிப் பக்தியுடன் காமதேவனை வணங்கினர் பலர். காமன் கோட்டத்தைச் சுற்றிலும் இவ்வாறு கூட்டம் கூட்டமாய் மகளிர் குதூகலித்துத் திரிந்தனர். சிறுபான்மை ஆடவர்களும் அங்கங்கே உலாவிக்கொண்டிருந்தனர். கடற்கரைச்சோலையில், அம், மாலைக் காலத்தில் நெய்தல் மலரின் நறு மணத்தை நுகர்ந்து யாவரும் இன்புற்றிருந்தனர். பலநிற ஆடைகளையும், ஆபரணங்களையும், பல நிறப் பூக்களையும் அணிந்து அங்கங்கே ஆடி விளையாடுகின்ற மகளிர் அழகைக் கண்டு, அங்கு உலாவும் ஆடவர் மனம் மயங்கினர்.

திரை மறைவில் சம்பாஷணை

கருநிறத் திரையால் போட்ட கூடாரத்தில் களிப்புடன் பேசிக்கொண்டிருந்தனர் அந்த இரண்டு யுவதிகளும். ஒருவருக்கொருவர் பரிகசித்து உடல் குலுங்க நகைத்துக்கொண்டிருந்தனர். அவர்கள் சம்பாஷணையை எவரும் கவனிக்கவில்லை. திரைக்கு வெளியில் காவல் காத்து இருந்த யவன வீரர்கள் தமக்குள் ஏதோ யவன பாஷையில் பேசிக்கொண்டிருந்தனர். சிவிகைத் தூக்கி வந்த மல்லர்கள் சிரமம் நீங்கக் களைப்பாறிக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம், இரண்டு யுவதிகளும் கூடாரத்தை விட்டு வெளி வந்தனர். பூக்களையும், வாசனைப் பொருள்களையும் ஏந்திக்கொண்டு யுவதியின் பின் தோழி சென்றாள். முன்னே சென்ற யுவதி கூடாரத்திற்கு வெளியே சிறிது நின்று சுற்றிலும் பார்த்தாள். அவள் கண்களில் உள்ள கருமணிப் பாவை யாரையோ தேடியது. மணியை இழந்த நாகம் போல் அவள் கலங்கி நின்றாள். நிமிர்ந்த தலையுடன் ஒரு பெருமூச்சு விட்டாள். உடனே தலை குனிந்து காமன் கோட்டத்தை நோக்கி நடந்தாள். விரைவாக இருவரும் காமன் கோட்டத்தை அடைந்தனர். அன்னங்கள் இரண்டு அசைந்து நடந்தாற்போல் காமன் கோயிலுக்குள் சென்றனர். காமதேவனை வழிபட்டனர்.

தோழியின் கையிலிருந்த பூக்களாலும், ஆபரணங்களாலும், வாசனைப் பொருள்களாலும் காமதேவனை அலங்கரித்தாள் அந்த யுவதி. அவளுடைய மேன்மையையும மேனி யழகையும் கண்ட மற்ற மகளிரும் மனமயங்கினர். அந்த யுவதி மன ஒருமையுடன் காமதேவனை வணங்கலானாள். காமனுடைய பிரதிமைக்கு முன்னர், மண்டியிட்டுக் கைகுவித்துத் தொழுதாள். தன் உள்ளக் கவலையை அகற்றி அருளுமாறு மனத்தால் வேண்டிக்கொண்டாள். வாயிலிருந்து சொற்கள் வெளிவரவில்லை. அவள் உள்ளக் கிடக்கையை வெளியிடுவன போல் கண்களில் நீர் பெருகியது. முத்துக்கள் உதிர்வன போல், கண்களின் மையோடு கலந்து நீர்த் துளிகள் மார்பில் விழுந்து சிதறின. திருமாலைக் குறித்து மெய்மறந்து தவம் செய்யும் வேகவதி யென்னும் கன்னியைப்போல் அசைவற்று இருந்தாள் அவள். அவள் தோளிலிருந்து மேலாடை நழுவி விழுந்ததை அருகிலிருந்த தோழி எடுத்துப் போர்த்தினாள். அப்போதுதான் யுவதி தன் நிலையை உணர்ந்துகொண்டாள். அவள் தன்மையைக் கண்ட தோழியும், மனம் இரங்கி வாய்பேசாதிருந்தாள்.

யுவதியின் மனோ நிலை

பின்னர் யுவதி, தோழியுடன் அவ்விடம் விட்டுக் காமன் கோட்டத்தை வலம் வந்தாள். சோர்வு கொண்ட மனத்துடன் காமன் கோட்டத்தை விட்டுப் புறப்பட்டாள். கோயிலைவிட்டு வெளிவந்ததும் மனத்தைச் சிறிது திடப்படுத்திக்கொண்டாள். அருகிலிருந்த தோழி அங்கங்கே நடக்கும் விநோதங்களையும் விளையாட்டுக்களையும் சுட்டிக் காட்டி யுவதியின் மனதிற்கு ஆறுதலைச் செய்தாள்.

அங்குள்ள காட்சிகளிலெல்லாம் யுவதியின் மனம் செல்லவில்லை. அவள் யாரையோ தேடினாள்! ஆடவர்க்கு இடம் கொடாத உள்ளமுடையவளும், ஈன்ற தந்தையையும் எதிர்நோக்காத மனத் திண்மையுடையவளுமாகிய அந்த யுவதியின் மனத்தில் புகுந்து அவளது நிறை என்னும் அரிய காவலைத் தகர்த்தெறிந்த அந்த யுவகனைத்தான் தேடினாள். யுவதியின் நிலையையும் அவள் குறிப்பையும் தோழி நன்கு உணர்ந்தாள். கன்னிமாடத்தில் இரவும் பகலும் இடைவிடாமல் உடனிருந்து வரும் அவள் யுவதியின் மனப் போக்கை அறியாளா?

"பத்திரை அதோ, நம் கூடாரத்திற்கு அருகில் உள்ள மஞ்சத்தில் உட்காருவோம்; வா," என்றாள் தோழி. யுவதி-பத்திரையின் மனத்தை மாற்றும் பொருட்டு தோழி, அவ்வாறு கூறினாள்.

"எனக்கும், களைப்பாகவே இருக்கிறது; காரணம் தெரியவில்லை" என்று கூறிக் கொண்டே நடந்தாள். இருவரும், கூடாரத்துக்கு அருகில் உள்ள மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டனர். காவிரிப்பூம்பட்டினத்தின் பெருமையைப்பற்றியும், அங்குள்ள பலவகை மதத்தினரைப்பற்றியும் எடுத்துக் கூறினாள் தோழி. பத்திரையின் மனம் சிறிதும் மாறவில்லை.

"பத்திரை, இந்தக் காவிரிப் பூம்பட்டினத்தில் உள்ள மகளிர் யாவரும் கற்பு நெறி தவறாதவர்கள். கற்புடைய மங்கையராலேயே இந் நகருக்குப் பெருமை வந்தது. அவர்கள் வரலாறுகளை உனக்கு நான் எடுத்துக் கூற வேண்டியதில்லை........." என்று கூறி முறுவல் செய்தாள் தோழி.

உள்ளங் கவர்ந்த யுவன்

"வசந்தி, இந் நகரத்தைப் பற்றி நான் அறியாததும் உண்டா? கற்பின் பெருமையைப்பற்றி, நீ எடுத்துக் கூற வேண்டுமா? மீண்டும் என் மனத்தைப் புண் செய்யாதே. கலந்த உள்ளத்தைப் பிரிக்க முடியாது!" என்றாள் பத்திரை. அவள் வார்த்தைகளில் உள்ளத் தெளிவும், கபடற்ற தன்மையும், அவளுக்குள்ள மன உறுதியும் பிரதிபலித்தன. பத்திரையின், மன நிலையை, தோழி-வசந்தி நன்கு உணர்ந்தாள். 'இனி, கூறுவதில் பயனில்லை' என்று எண்ணினாள்.

"பத்திரை, நான் கூறியதற்கு வருந்தாதே; விளையாட்டாகப் பேசினேன்" என்றாள். உடனே பத்திரைக்குச் சிறிது உள்ளம் குளிர்ந்தது. நாணம் மறைந்தது.

"வசந்தி, அவரை, நீ எப்போதாவது பார்த்ததுண்டா?"

"ஆம், நம் வீதியிலேயே பார்த்ததாக ஞாபகம் வருகிறது. ஏன், பலமுறை பார்த்திருக்கிறேன்."

"யார் என்று தெரியுமா?"

"தெரியாது; அவரைப்பற்றி வேறு விவரம் எனக்கு எப்படித் தெரியும்?"

"வசந்தி, நான் கூறுவதைக் கேள். இன்று வரையில், ஈன்ற

(16-ம் பக்கம்)

சீவக சிந்தாமணி - 9.

கடும் நட்புப் பகை காட்டும்

★

—வ. வேணுகோபாலன் எழுதியது

முனிவரது களங்கமற்ற மனத்தைப்போல ஆகாயம் தூய்மையுடன் விளங்கியது. முடிவில்லாது பரந்து தோன்றிய அவ்வானிலே செல்லும் சூரியன் இளவேனிற் பருவத்தை உண்டாக்கினான். அவ்விளவேனிற் பருவத்தே இராசமாபுரத்தின் பூஞ்சோலை கண் கொள்ளாக் காட்சியுடன் விளங்கியது. மலரும் தளிரும் தழைத்த அந்தப் பூஞ்சோலையில் வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டு கூட்டம் கூட்டமாய் பறந்து சென்றன. பூக்களைச் சூடிய மகளிரை ஆடவர் தழுவுவதுபோல், மலர்கள் நிறைந்த பூங்கொடிகளை வண்டுகள் அணைந்திருந்தன. சோலையின் நடுவே உள்ள தடாகங்கள், அலைகளாகிய கைகளினால் பூந்தொட்டிலில் பலவகைப் பறவைகளைத் தாலாட்டிக் கொண்டு விளங்கின. காற்று மெல்லென வீசிக்கொண்டிருந்தது.

பூக்கொய்து விளையாடுவதற்கும், புனலாடுதற்கும் விரும்பிய ஆடவரும் மகளிரும் அந்தப் பூஞ்சோலையில் உலாவிக்கொண்டிருந்தனர். வண்டிகளிலும், சிவிகையிலும், தேர்களிலும், யானை, குதிரை முதலிய வாகனங்களின் மீதும் பலர் சோலையில் வந்துஇறங்கினர். இராசமாபுரத்து வணிகர் தலைவனான குபேர மித்திரன் மகள் குணமாலையும் குபேரதத்தன் மகள் சுரமஞ்சரியும் சேடியருடன் சிவிகையினின்றும் இறங்கினர். அங்கே திரை போட்டு மறைவு செய்த இடத்தில் குணமாலையும் சுரமஞ்சரியும் சேடியருடன் சென்று தங்கினர். குணமாலையும் சுரமஞ்சரியும் பொழுது போக்கிற்காகத்தாம் கொணர்ந்திருந்த கிளியையும் பூவை யென்னும் பேசும் பறவையையும் ஒன்றோடொன்று பேச வைத்துப் பழக்கிக்கொண்டிருந்தனர். கிளியும் பூவையும் பேசுவதைக் கேட்டு இருவரும் சிரித்துக்கொண்டிருந்தனர். அப்போது நீர் விளையாட்டிற்குக் குணமாலை கொண்டு வந்திருந்து வாசனைப் பொடியை மாலை என்ற அவள் சேடி, சுரமஞ்சரியிடம் காட்டி, "அம்மா! இந்த வாசனைப் பொடி, வாசனை நன்றாக வீசுகிறது பாருங்கள்!" என்று புன்னகையுடன் சொன்னாள்.

சுரமஞ்சரி, குணமாலையின் சேடி மொழிந்ததைக் கேட்டவுடன் முகம் வேறு பட்டாள். அவளுடைய உருண்டு திரண்ட கண்களில் கோபமும குறும்புச் சிரிப்பும் கொந்தளித்தன. தலையை அசைத்துக் கொண்டே குணமாலையின் வாசனைப் பொடியைப் பார்த்தாள்.

"குணமாலை! உன்னுடைய சந்தோஷத்தைப் போக்கி வருத்தத்தைக் கொடுக்கக்கூடியது இந்த வாசனைப் பொடி. யான் சொல்லுகிறேனென்று கோபம்கொள்ளாதே. என் வாசனைப் பொடியைப் பார்!" என்று கூறித் தன் வாசனைப் பொடியையும் குணமாலையிடம் காட்டி ஏளனம் செய்தாள் சுரமஞ்சரி.

சுரமஞ்சரியின் ஏளனத்தைக் கொண்ட வார்த்தை குணமாலையின் உள்ளத்தே வேலைப் போன்று சுருக்கெனப் பாய்ந்தது. ஆனாலும், தன் வருத்தத்தைச்சிறிது அடக்கிக்கொண்டாள்; "சுரமஞ்சரி, என் வாசனைப் பொடிக்கு ஒப்பானது தேவருலகிலேயே தான் உள்ளது. இவ்வுலகத்தே உண்டென்று அறிஞர் சொன்னால் உன் வாசனைப்பொடியும் இதை ஒக்கும் என்று கூறுவேன்" என்று அடக்கமாக குணமாலை மறுமொழி கூறினாள்.

அதைக்கேட்ட சுரமஞ்சரியின் கண்கள் கோவைப்பழம் போல் சிவந்தன.

"குணமாலை! அவ்விதமானால், இவ்வாசனைப் பொடிகளைப் பரீக்ஷிப்போம். இந்தச் சோலையில் பல அறிஞர்களும் பெரியோர்களும் வந்துள்ளனர். நம் வாசனைப் பொடிகள் இரண்டையும் சேடியரிடம் கொடுத்தனுப்பி, உயர்ந்த பொடி எது என்பதை அறிஞரிடம் காட்டி அறிந்து வரச் செய்வோம். யான் தோற்றால், புனலாடாமல் கன்னி மாடம் செல்வேன். வென்றால் கோடி பொன் அருகதேவனுக்குக் காணிக்கை அளிப்பேன்" என்று சுரமஞ்சரி வஞ்சினம் பேசினாள்.

அவள் பேச்சின் கடுமையையும், கோபத்தையும் கண்ட குணமாலை சாந்தமாக, "யானும் அவ்விதமே செய்ய விரும்புகிறேன்" என்று சொன்னாள்.

இணைபிரியாத நட்புடனிருந்த குணமாலையும் சுரமஞ்சரியும் வாசனைப் பொடி காரணமாக மனம் வேறுபட்டு, கடும் பகை கொண்டனர். பின்னர் குணமாலையின் வாசனைப்பொடியை அவள் சேடியான, மாலை என்பவள், ஒரு தட்டில்வைத்து மூடி எடுத்துக்கொண்டாள். சுரமஞ்சரியின் வாசனைப் பொடியை அவள் சேடியான கனகபதாகை என்பவள் ஒரு தட்டில் வைத்து மூடி எடுத்துக் கொண்டாள். குணமாலை, சுரமஞ்சரி இருவருடைய விருப்பப்படி, சேடியரிருவரும் பூஞ்சோலையில் நீர் விளையாட்டிற்கு வந்துள்ள ஆடவரெல்லாரிடமும் வாசனைப் பொடிகளைக்காட்டி, "இவ்வாசனைப் பொடிகளில் உயர்ந்தது எது" என்று கேட்டனர். வாசனைப் பொடிகளின் வாசனையை அறிந்த எல்லாரும், "இரண்டும் நல்ல வாசனையுள்ளவையே" என்று கூறிவிட்டனர். சேடியரிருவரும் மனம் சோர்ந்தவராய், ஓரிடத்தில் கூடியிருந்த இளங் குமரரைக் கண்டு, "இவ்வாசனைப் பொடிகளில் உயர்ந்தது எது" என்று கேட்டனர்.

"இரண்டும் நல்ல வாசனையை உடையனவே. ஆனால் அந்த மரத்தடியில் இருக்கும் சீவகனிடம் காட்டினால் வேறுபாடு கூறி விளக்குவான்" என்று அந்த இளங் குமரர் சொல்லினர்.

சோலையில் நடக்கும் விளையாட்டுக்களையும் காட்சிகளையும் பார்த்துத் தன் தோழருடன் அளவளாவிக்கொண்டு அசோக மரத்தின் நிழலில் அமர்ந்திருந்தான் சீவகன். சேடியரிருவரும் அங்கு வந்து சீவகனை வணங்கி நின்றனர். "எங்கு வந்தீர்கள்?" என்று அவர்களை வியப்புடன் சீவகன் கேட்டான்.

"ஐய! எம் தலைவியரான குணமாலை, சுரமஞ்சரி என்பவருடைய வாசனைப்பொடிகள் இவை. இவ்வாசனைப் பொடிகளில் உயர்ந்ததை அறியவேண்டுவது அவர்கள் விருப்பம்" என்று சேடியர் மொழிந்தனர். சீவகன் அவற்றைப் பார்த்த மாத்திரத்தில் குணமாலை சுண்ணத்தை "இவை நல்லவை" என்று உற்று நோக்கிக் கூறினான்.

சீவகன் எண்ணத்தை அறியாத சேடியர், "ஐய! இரண்டிற்கும் வேறுபாடு கூறாமல் 'இவை நல்லவை தான்' என்று சொல்லுவதில் பயன் என்ன? இவ்விதமே அறிஞரெல்லாரும் கூறுகின்றனர். இவற்றின் வேறுபாட்டை அறியவே தங்களிடம்வந்தோம்" என்று மறுமொழி சொல்லினர்.

சீவகன் சேடியரைப்பார்த்து புன்னகை செய்து "பெண்களே, கோடைக்காலத்து இடித்துச் செய்தமையால், இந்த வாசனைப் பொடி உயர்ந்தவை. மாரி காலத்து இடித்துச் செய்தமையால், இந்த வாசனைப் பொடி சிறிது தாழ்ந்தவை" என்று குணமாலை வாசனைப் பொடியை உயர்த்தியும் சுரமஞ்சரி வாசனைப்பொடியைத் தாழ்த்தியும் கூறினான் சீவகன். குணமாலையின் வாசனைப்பொடியை உயர்ந்ததென்று சீவகன் சொன்னவுடன், "ஐய! ஒருவரை விரும்பிய காலத்து அவர் செய்யும் தீய காரியமும் நல்லனவாகும். விரும்பாத காலத்து அவர் செய்யும் நல்ல காரியமும் தீயனவாகும். இது உலகஇயல்புதான். ஆதலால் தாங்கள் கூறியப்படி இப்பொடிகளின் உயர்வு தாழ்வைக் காரணத்துடன் எனக்கு விளங்கக் கூறவேண்டும்" என்று சுரமஞ்சரியின் சேடி கனகபதாகை மொழிந்தாள்.

"நங்காய்! அவ்விதமாயின், இவ்வாசனைப் பொடிகளின் உயர்வு தாழ்வை சாட்சியால் உணர்த்துகிறேன்" என்று சீவகன் சொன்னான்.

"ஐய! தேவரிலும் மக்களிலும் உனக்குக் கட்டுப்படாதவர் இல்லையாதலால், பறவை முதலிய இவற்றின் உயர்வு தாழ்வை உணர்த்துமானால் உடன்படுவேன்" என்று கனகபதாகை கூறினாள்.

"நங்காய்! இந்தச் சோலையில் நான்கு வகை வண்டுகள் உள்ளன. அவற்றைக்கொண்டு உணர்த்துகிறேன்" என்று சீவகன் மொழிந்தான். கனகபதாகை அதற்கு உடன்பட்டாள்.

சீவகன் அங்குள்ள ஓரிடத்திற்குச் சேடியரை அழைத்துச் சென்று, எறும்பின் பாஷையை அறிந்த விக்கிரமாதித்தன் போல, "வண்டுகாள், தேன்காள்! சுரும்புகாள்! ஞிமிறுகாள்! என்று வண்டுகளைக் கூப்பிட்டான். ஒலியறிதற் கேற்ற செவிகளையுடைய வண்டுகள், உடனே அங்கு பறந்து வந்து கூடின. சீவகன் உவகையுடன். இரு சேடியருடைய வாசனைப் பொடிகளையும் தன் இரண்டு கைகளால் அள்ளி ஆகாயத்தே தூவி, "இவற்றில், மிக நல்லவற்றை உண்ணுங்கள்" என்று கூறினான். சுரமஞ்சரியின் வாசனைப் பொடியை உண்ணப் பறந்த சுரும்பும் ஞிமிறும் அவற்றைத் தீயவை யென்று அறிந்து உண்ணாமல் திரும்பின. குணமாலையின் வாசனைப் பொடியை நல்லவை யென்றறிந்த வண்டும் தேனும் அவற்றை உண்டு விட்டன. வண்டுகள் உண்ணாத சுரமஞ்சரியின் வாசனைப் பொடி கீழே உதிர்ந்து கிடந்தன. அவற்றைச் சீவகன் கனகபதாகைக்குக் காட்டி, "நங்காய்! இப்பொழுது அறிந்தாயா?" என்று கூறினான்.

"ஐய! அறிந்தேன். தாங்கள் செய்த முடிவை என் தலைவி சுரமஞ்சரியிடம் அறிவிப்பேன்" என்று கூறி, மாலையுடன் கனகபதாகை சென்றாள்.

இரு சேடியரும், நிகழ்ந்ததைக் குணமாலையிடமும், சுரமஞ்சரியிடமும் சொல்லினர். சேடியர் மொழியைக் கேட்ட குணமாலை உடல் குலுங்கச் சிரித்து, "சுரமஞ்சரி! முன்பு போல் என்னுடன் நகைத்து விளையாடவேண்டும்" என்று சொன்னாள். குணமாலையின்

(அடுத்த பக்கம் பார்க்க)

பாட்டிக் கதையும் பாட்டும்

★

(ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன்)

ஒரு மட மங்கை, எல்லா நலமும் வளமும் நிரம்பியவள் ஓர் அழகிய மஞ்சத்தில் படுத்துக் கிடக்கிறாள். அடிக்கடி பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறாள். அவளுக்கு நோய் ஒன்றும் இல்லை. ஆயினும் அவ்வாறு சோர்ந்து கிடப்பதற்குக் காரணம் என்ன? அருகே ஒரு தோழி சைத்தியோபசாரம் செய்து கொண்டு நிற்கிறாள். அவளருகில் ஒரு கிழவி அமர்ந்து கொண்டிருக்கிறாள். நங்கையின் எழில் ததும்பும் மேனியிலே வாட்டமும், ஒளி துளும்பும் முகத்திலே கவலைக் குறியும், குயிலினிமை கொண்ட குரலிலே துயரத் தொனியும் மேலோங்கி நிற்கின்றன.

"வந்துவிடுவார்: கவலைப் படாதே" என்று அந்தக் கிழவி ஆறுதல் சொல்கிறாள்.

"வந்துவிடுவாரா?...எங்கே இன்னும் வரக்காணேனே!... சிறிது பேசாமல் இருங்கள்... அது என்ன சத்தம்?...தோழி ஓடிப் போய்ப் பார்: அவர் தேர் வருகிறதா என்று பார்த்து வா" என்று அடிக்கடி நங்கை சொல்லுகிறாள். தோழியும் அவளைத் திருப்தி செய்வதற்காகப் போய்ப் பார்த்துவிட்டு வருகிறாள். 'அவர் தேர் வரவில்லை' என்பதைத் தான் திருப்பித் திருப்பிச் சொல்லும் நிலையில் இருக்கிறாள் தோழி. பாவம்! ஆவலோடு எதிர் பார்க்கும் நாயகிக்கு ஏமாற்றம் உண்டாகிறது.

அந்த நாயகியின் நாயகன் வெளி நாட்டுக்குப் போயிருக்கிறான். தன்னுடைய அரசன் செய்யும் போருக்குத் துணையாகவோ, தானே ஒரு படைக்குத் தலைமை வகித்தோ, வேறு ஏதோ முக்கியமான காரியத்தை மேற்கொண்டோ, என்றும் பிரியாத தன் அருமைக் காதலியைப் பிரிந்து போயிருக்கிறான்.

கணமேனும் அவனைப் பிரிந்தறியாத காதலி இந்தப் பிரிவினால் அளவற்ற துயரத்துக்கு உள்ளாகிறாள். அவன் வந்து விடுவான் என்ற நம்பிக்கையால் உயிர் வாழ்கிறாள். ஒரு நாள் கழிவது ஒரு யுகமாக இருக்கிறது. உணவு செல்லவில்லை. அவளுக்கு விருப்பமான பொருள்களெல்லாம் இப்போது வெறுப்பைத் தருகின்றன. மலரணிந்து ஆடை புனைந்து அணிகளைப் பூட்டி எழிலுருவாகத் திகழ்ந்த அவள் இப்போது அவற்றை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

இப்படி எத்தனை நாள் இருப்பது? அவளுடைய உயிர்த்தோழி, நாயகன் தன் கடமையைச் செய்யப் போயிருக்கிறானென்பதையும் விரைவில் வந்துவிடுவானென்பதையும், தக்க காரணங்களைக் கூறி வற்புறுத்துகிறாள். அதெல்லாம் நாயகியின் காதில் விழுகிறதா, என்ன?

அந்தக் கிழவி இருக்கிறாளே, அவள்தான் நாயகியின் செவிலித்தாய்; அத்தலைவியை இளம்பருவ முதல் தாலாட்டிச் சீராட்டி வளர்த்தவள். தன்னுடைய கண்மணியைப் போன்ற தலைவி வாடிய பசுங் கொடிபோலத் துவண்டு கிடப்பதைப் பார்த்து அவளுடைய மனம் மறுகுகிறது. "அவர் வந்து விடுவார்" என்று சொல்வதனால் அவ்விளநங்கைக்குத் துக்கம் அதிகமாகிறதே ஒழியக் குறைவதாகக் காணவில்லை. 'இவளுக்கு அவரைப்பற்றிய ஞாபகத்தை மூட்டுவதே பிசகு போலும்!' என்று அநுபவத்தில் தேர்ந்த அவள் கண்டு பிடிக்கிறாள். 'இவள் மனத்தை அந்த எண்ணத்திலிருந்து மீட்க என்ன வழி?' என்று யோசிக்கிறாள் கிழவிப் பாட்டி.

பாட்டி கதை சொல்லுவதிலும் குழந்தைகள் மனத்தையும் கவரும் பாட்டுக்களைச் சொல்லுவதிலும் மிகவும் தேர்ந்தவள். தமிழ் நாட்டுப் பாட்டிகள் யாவரும் அப்படித்தான் இருந்தார்கள்.

கிழவி கதை சொல்ல ஆரம்பிக்கிறாள். "ஒரே ஒரு காட்டிலே ஒரே ஒரு யானை. அது மனம் போனபடி திரிந்து கொண்டிருந்தது. ஓர் ஊருக்குப் பக்கத்திலே வந்தது. அப்போது ஒரே ஒரு குருவியாம். அந்தக் குருவி வந்து ஆனைமேலே உட்கார்ந்ததாம், 'என்னடா இது குறுகுறு என்கிறதே' என்று ஆனை தும்பிக்கையாலே தடவிப் பார்த்தது. குருவி அதன் கைக்குப் படாமலே இருந்தது. ஆனையால் ஒன்றும் செய்ய முடியவில்லை. 'யாரப்பா நீ?' என்று கோபத்தோடு கேட்டது. 'நான்தான் சிட்டுக்குருவி; ஆனை மாமாவைப் பார்க்க வந்தேன். சௌக்கியந் தானே? உங்கள் ஊரில் எல்லோரும் சுகமா?' என்று தைரியமாகக் குருவி பேசியது."

என்ன ஆச்சரியம்! இந்தக் குருவிக் கதை பிரிவுத் தீயிலே வதங்கிக் கிடக்கும் அந்த மட மங்கையின் கவனத்தைத் திருப்புகிறதே! கிழவி, ஆனையும் குருவியும் சிநேகம் பண்ணிக்கொண்டு எங்கெங்கேயோ போய் என்ன என்னவோ பண்ணினவென்று கதை சொல்கிறாள். தலைவி முதலில் அசட்டையாகக் கேட்டாள். பிறகு கொஞ்சம் கூர்ந்து கவனித்தாள். அப்பால் அதிலே ஈடுபட்டுவிட்டாள்.

கிழவி மிகவும் தந்திரக்காரி; தலைவி கதையைக் கவனிக்கிறாளா, இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள எண்ணி, சுவாரஸ்யமான இடத்தில் கொஞ்சம் மௌனம் சாதிக்கிறாள்.

தலைவி படபடப்போடே, "அப்புறம்?" என்று கேட்கிறாள்.

கிழவி தன் தந்திரம் பலித்துவிட்டதென்று எண்ணி மகிழ்கிறாள். பிறகு கதை, வர்ணனைகளோடும் தொனி பேதங்களோடும் சம்பாஷணை நயங்களோடும் படர்கிறது.

ஒவ்வொரு நாளும் வெவ்வேறு கதைகளைச் சொல்லி அந்தப் பாட்டி பொழுதைப் போக்குகிறாள். நடுநடுவிலே தலைவிக்கு நாயகனது நினைவு வந்து துன்புறுத்தினாலும் கதையைக் கேட்பதிலே அவள் உற்சாகம் அடைகிறாள்.

பாட்டி கதையோடு நின்று விடுகிறாளா? இல்லை, இல்லை. ஒரே மாதிரியான சரக்கையே வெளியிட்டால் சலிப்பு ஏற்பட்டு மறுபடியும் வேதாளம் முருக்க மரம் ஏறிக்கொள்ளுமென்பதை அவள் நன்றாக அறிவாள். சிரிக்கச் சிரிக்கச் சில கதைகளைச் சொல்கிறாள். மன நோயினால் மெலிந்து கிடந்த தலைவி களுக்கென்று சிரித்து விடுகிறாள்.

தலைவியின் மூளைக்கு வேலை கொடுத்து அவளுடைய யோசனையைத் திருப்பி விடுவதற்கு மற்றோர் உபாயத்தைச் செய்யத் தொடங்குகிறாள் செவிலித்தாய். புதிர் போடுகிறாள். "பிறையைக் கவ்வி, மலை நடக்கிறது" என்று விடுகதை போடுகிறாள்; தலைவி யோசனையில் ஆழ்கிறாள்; "யானை" என்று அதை விடுவிக்கிறாள்.

"நீரில் முழுகமாட்டான் நீறு பூசும் பிராம்மணன். செக்கச் சிவந்திருப்பான்; சிவப்பு ரத்னம் போலிருப்பான். நீரிலே முழுகிவிட்டால் ஊரில் வரும் காக்கை யாவான்—இது என்ன?" பாட்டிபோட்ட புதிர் லேசில் விடுவிக்கமுடியவில்லை. உடன் இருக்கும் தோழியும் இதில் சேர்ந்து கொள்கிறாள். தலைவியும் யோசிக்கிறாள். அவள் தோன்றியதை எல்லாம் சொல்கிறாள். கிழவி "இல்லை, இல்லை" என்று மறுத்து வருகிறாள். "நீதான் சொல், பாட்டி, எங்களுக்குத் தெரியவில்லை" என்று தலைவி தோல்வியை ஒப்புக்கொள்கிறாள்.

"நெருப்பு" என்று பாட்டி கதையை விடுவிக்கிறாள்.

"பூ! இது தானா?" என்று தலைவி சொல்லிவிட்டு 'இது தெரியவில்லையே!' என்று அங்கலாய்க்கிறாள். ரோசம் மூளுகிறது. "வேறு ஒன்று சொல்; நான் விடுவிக்காவிட்டால் பார்" என்று வீறு பேசுகிறாள் தலைவி. பாட்டி இந்தத்தடவை சிறிது சுலபமாக புதிர் போடுகிறாள்; அதைத் தலைவி விடுவித்துவிட்டு வெற்றிபெற்ற வீரன் அடையும் சந்தோஷத்தை அடைகிறாள். இந்த விளையாட்டிலே பொழுது போவதே தெரியவில்லை.

பாட்டியிடம் இன்னும் புதிய சரக்கு இருக்கிறது. கதைகள், விடுகதைகள் சொல்லி அலுத்துப் போனால், அவள் ஆரம்பிக்கிறாள் பாட்டை. என்ன பாட்டுத், தெரியுமா? புஸ்தகத்திலே இல்லாத பாட்டு. வாய்மொழியாகப் பாட்டிகளின் பரம்பரையிலே வந்த பாட்டு அது. ஓடப் பாட்டு, மோதிரப் பாட்டு முதலிய நாடோடிப் பாட்டுக்களைப் பாட்டி ராகத்தோடும் அபிநயத்தோடும் சொல்லுகிறாள். தலைவி சொக்கிப் போகிறாள்.

* * * *

இந்தக் காட்சிகளை எங்கோ நாடகத்தில் கண்டதாக எண்ண வேண்டாம். தொல்காப்பியத்தில், தமிழில் உள்ள இலக்கிய இலக்கணங்களின் வகைகளைச் சொல்லும் பகுதியில், தலைவனைப் பிரிந்த தலைவிக்கு ஆறுதல் கூறும் செவிலித்தாய் உபயோகப்படுத்தும் இலக்கியங்கள் இன்னவை என்ற விஷயம் சில சூத்திரங்களில் சொல்லப்படுகின்றன. அவற்றிலும், அவற்றின் உரைகளிலும் உள்ள செய்திகளை ஊன்றிக் கவனிக்கும்போது மேலே சொன்ன காட்சிகளை நம் அகக்கண்ணில் காண்கிறோம். ஆனைக் கதை போன்ற கதைகளுக்கு, 'பொருள் மரபில்லாப் பொய்ம் மொழி' என்றும், சிரிப்பூட்டும் கதைகளுக்கு, 'பொருளொடு புணர்ந்த நகை மொழி' என்றும், விடு கதைகளுக்கு, 'பிசி' என்றும், நாடோடிப் பாட்டுக்களுக்கு, 'பண்ணத்தி' என்றும் பெயர்கள் பழங்காலத்தில் வழங்கினவென்று தெரிகிறது. 'தலைமகளை வற்புறுத்தும் செவிலியர் உரைத்து நகுவித்துப் பொழுது போக்குதற்குரிய'வை இவை என்று உரையாசிரியர் எழுதுகிறார்.

பண்ணத்தி யென்பது பாட்டும் உரையும் போல இருக்குமென்றும், எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புக்களை உடையதென்றும் இலக்கணம் அமைத்திருக்கிறார்கள். வஞ்சிப்பாட்டு, மோதிரப்பாட்டு, கடகண்டு என்று மூன்று பாட்டுகளைப் பேராசிரியர் என்ற உரைகாரர் உதாரணங்களாகக் காட்டுகிறார். இவற்றையெல்லாம் இக்காலத்தார் 'பாமர இலக்கியம்' (Folk-lore) என்று சொல்லுகிறார்கள்.

இயற்கைப் பாட்டாகிய நாடோடிப் பாட்டை இலக்கிய வகையில் ஒருவகையாகச் சேர்த்து எண்ணினர். பண்டைக்காலத்து ஆசிரியர்கள் என்ற உண்மையைத் தொல்காப்பியத்திலிருந்து நாம் அறிகிறோம். இப்போது உள்ள தமிழ் நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியம்; மிகப்புதுமையானது பாரதியார் பாட்டு. தொல்காப்பியர் இலக்கணம் அமைத்த அந்தப்பாட்டைக் கவிபரம்பரையினரும் பாராட்டினார்கள்; பாரதியார் வரையில் அந்தப் பாராட்டு வந்து கொண்டே இருக்கிறது. அவற்றை நாம் மறப்பது தர்மமா? சேகரித்துப் போற்றிப் பாதுகாத்து இன்புற வேண்டாமா?

கண்டு பிடித்தவர்கள் யார்?

எக்ஸ்ரே

★

காச நோயால் பாதிக்கப்பட்டால் சுவாசப் பை எப்படி இருக்கிறது என்று பார்க்க டாக்டர்கள் "எக்ஸ்ரே" படம் எடுக்கவேண்டுமென்கிறார்கள். எலும்பு முறிந்திருந்தாலும் சரிதான்; இன்னும் வயிற்றில் ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டாலும் சரிதான். உடனே 'எக்ஸ்ரே' படம் எடுக்கவேண்டுமென்கிறார்கள். ஆனால் வைத்திய உலகத்துக்கு மிகவும் முக்கியமான வசதியைக் கண்டு பிடித்தவர் யாரென்பதும் எப்பொழுது என்பதும் தெரியுமா?

★

புகைப் படம்

★

ஒரு ரூபாய் கொடுத்தால் 12 படம்! அதில் ஒரு பெரிய படமும் கூடக் கொடுக்கப்படும்! என்று விளம்பரம் செய்கிறார்கள். உட்காரவேண்டியது தான் தாமதம். 'க்ளிக்' என்ற சப்தம். அடுத்த 5-வது நிமிஷத்தில் உங்கள் கையில் படம் வந்துவிடுகிறது! ஆனால் இவ்வளவு சீக்கிரமாகப் படம் பிடித்துக் கொடுக்கக்கூடிய கலையைக் கண்டுபிடித்தவர் யார்? எந்த வருஷம்? என்ற தகவல்கள் நமக்குத் தெரிந்திருக்கவேண்டாமா?

★

பிலிம்

★

ஸினிமாக் காட்சிகள் எவ்வளவோ பார்த்திருக்கிறோம், பார்க்கிறோம். இன்னும் எவ்வளவோ பார்க்கவேண்டியிருக்கிறது. சலனப் படங்கள் தலைப்பட்டு இன்று எவ்வளவு வருஷங்களாகின்றன? இதைக கண்டு பிடித்தவர் யார்? என்ற விவரம் தெரியுமா? படத்தைப் பிடிப்பதற்காக எங்கும் தருவிக்கப்படும் பிலிம் யார் கண்டு பிடித்தது?

★

'க்ளோரோபாரம்'

★

பெரிய பெரிய ஆப்பரேஷன்கள் நடப்பதாயிருந்தால் நோயாளிக்கு மயக்கமுண்டாக்கி வலிதெரியாமலிருக்க டாக்டர்கள் "க்ளோரோ பாரம்" கொடுக்கிறார்கள். சிலமணிநேரம் கழித்த பின்பு தான் நோயாளிக்கு ஸ்மரணை வருகிறது. அதுவரையில் என்ன நடந்தது என்பதே தெரியாமல் செய்யக்கூடிய மேற்படி 'க்ளோரரபார'த்தை கண்டு பிடித்தவர் யார்? எப்பொழுது?

★

அறிவிப்பு

எங்களுடைய கௌரவமுள்ள வாடிக்கைக் காரர்களின் வேண்டுகோளுக்கிணங்க எங்கள் வொர்க்ஷாப்பை மீண்டும் நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். ஆர்டர்களுக்கு மட்டும் நகைகள் தயாரிக்க நாங்கள் சந்தோஷத்துடன் சித்தமாக இருக்கிறோம். நாணய மார்க்கெட்டில் அசாதாரண நிலைமை இருந்து வருவதால், வாடிக்கைக்காரர்கள் தேவையான தங்கத்தையும், வெள்ளியையும் சப்ளை செய்யவோ, அல்லது அதன் உத்தேச கிரயத்தை அட்வான்ஸாக எங்களுக்கு அனுப்பி வைக்கும்படியோ கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வீக்கம்ஸி சபில்தாஸ் & சன்ஸ்,

நகைகள் செய்பவர்கள்: வைர வியாபாரிகள்,

112, சைனுபஜார் ரோடு, சென்னை.

பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

திட்டமான வாழ்க்கை

★

(வ. ரா.)

எவ்வளவு வருத்தத்தோடு போனாலும், நண்பர் மூட்டும் திரும்பி வராமல் இருப்பதில்லை. நமது நாட்டார் நல்ல நிலைமையில் இருக்க வேண்டும் என்பது அவருடைய பிடிவாதமான ஆசை. அதற்குத்தான் வழியைக் காணும் என்று அவர் சதா ஜபித்துக்கொண்டிருப்பார். பல வைத்தியர்கள் கூடிக்கொண்டால், நோயாளியின் பாடு ஆபத்துத்தான் என்று சொல்லுவார்கள். இந்தியாவின் முன்னேற்றத்துக்கு பலர் பல வழிகளையும் திட்டங்களையும் குறிப்பாகவும் விரிவாகவும் உணர்த்துகிறார்கள்.

நம்மவர்களோ, பரம்பரை என்பதை, பிடிவாதமாகப் பிடித்து தொங்கிக்கொண்டிருப்பதால், அவர்கள் சரியாக யோசிப்பதில்லை. பல பேர், வெவ்வேறு விதமாக, வழிகளைச் சொல்லும்பொழுது, அவர்களுடைய மூளை குழம்பிப்போகிறது. அவர்கள் தியாகத்துக்குத் தயாராயிருக்கிறார்கள். ஆனால், எந்த திட்டத்தை அனுஷ்டானத்துக்கு கொண்டு வந்தால், இந்தியா முன்னேற முடியும் என்பதில் தான், அவர்களுக்கு அளவு கடந்த சந்தேகம். இந்த பெரும்பான்மையான கோஷ்டியைச் சேர்ந்தவர் நண்பர். எனவே, திட்டமான வாழ்க்கையைப்பற்றி, என்னோடு கலந்து யோசிக்க வேண்டும் என்ற ஆவல், அவருடைய உள்ளத்தில் வேர் ஊன்றத் தலைப்பட்டது.

சில விநோதங்கள்

நண்பர் வந்ததும், 'வ. ரா! திட்டமான வாழ்க்கையைப்பற்றி அலசிப் பார்த்துத் தான் ஆக வேண்டும்' என்றார். இந்தச் சேதியைக் கேட்டு, நான் பூரிப்பு அடைந்தேன். யோசனை என்பது பெரியவர்களின் வேலை என்று தட்டிக் கழிப்பது தான், இந்த நாட்டாரின் சம்பிரதாயம். மேலும் அநேகர் இந்த மாதிரியும் சொல்லக் கேட்டிருக்கிறேன். "என்ன வ. ரா! நாமெல்லாம் யோசிக்கிறதற்கு என்ன இருக்கிறது? நம்ம பெரியவாள், எவ்வளவோ காலத்துக்கு முந்தி, உப்பு முதல் கற்பூரம் வரையிலும், தோட்டி முதல் தொண்டமான் வரையிலும், வேதம் முதல் கலைகள் வரையிலும், எல்லாவற்றையும் பற்றி, யுக யுகாந்திரத்துக்கு தாங்கும்படியாக, யோசித்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். நாம் யோசிக்கவேண்டியது ஒன்றுமே இல்லை."

இவ்வாறு பேசக்கூடிய போலி பக்தர்களிடம், சோம்பேறிகளிடம் எதைப்பற்றிப் பேசினாலும், மேலே சொன்ன பதில் தான் வக்கணையாக வரும். இந்தக் கூட்டத்தார், நமது நாட்டில் மலிந்து கிடக்கின்றார்கள். புதிதாக ஒரு யோசனையை சொல்லப்போனால், 'பரம்பரைக்கு ஆபத்து' 'பெரியவாளுக்கு அமரியாதை' என்ற கூச்சலைக் கிளப்பி விட்டு, சாதாரண ஜனங்களுக்கு, விஷயமே தெரியாமல் செய்து விடுகிறார்கள். ஆனால், இந்த அசட்டுக் கூட்டத்தைச் சேர்ந்தவரல்ல நண்பர். ஆகவே, அவருடைய வருகை, எப்பொழுதும் எனக்கு இனிப்பைத் தந்தது. நான் பேச ஆரம்பித்தேன்.

நான்:—உயர்ந்த தத்துவமெல்லாம், நம்ம நாட்டில், ஏட்டிலேதான் இருந்தது.

நண்பர்:—அனுபவத்திலிருந்த் தத்துவம் என்ன என்கிறீர்கள்?

நான்:—'வாழ்வாவது மாயம். மண்ணுவது திண்ணம்'

இந்த தத்தக்துவம் தான் நம்மவர்களை நீண்டகாலமாக ஆட்டி வந்திருக்கும் பேயாகும். மேலும், 'ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப்பெற்ற பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல' என்று அடுக்கிக் கொண்டேபோகும் பாட்டுத்தான், நமது திண்ணை வேதாந்திகளின் சோம்பேறித் தத்துவமாக இருந்து வந்தது. இந்தப் பாட்டை, அவர்கள் கொட்டாவி விட்டுக்கொண்டே, பாடுவார்கள். வாழ்க்கையிலே பிடிப்பும் பொறுப்புமில்லாதவர்கள், சிறு காரியம் செய்யக்கூட மனங்கொள்ளார்கள்.

நண்பர்:—அந்த மாதிரி பிதற்றல் எல்லாம் இப்பொழுது மாறிக்கொண்டு வருகிறதல்லவா?

மாறி வருகிறது

நான்:—மாறிக்கொண்டு வருகிறது. ஆனால் வேகம் போதாது. மேலும் நம்மவர்கள் ஒன்றாகச் சேர்ந்து, பெரிய காரியத்தில் ஈடுபட்டு வெற்றியை, கண்ணில் கண்டதே இல்லை. ஆகவே, எதைத் துவக்கினாலும் அது பலிக்காது என்று துடுக்காகச் சொல்லுவார்கள். இந்த அபத்தமான சூலை மண்டையில் அடிப்பதற்காகத்தான், நமது நிகரற்ற, ஜனசமுதாய வைத்தியர் பாரதியார், நம்மவர்களின் நாடியைப் பிடித்துப் பார்த்து,

'ஜயமுண்டு, பயமில்லை'

என்று ஏக்கமடைந்து கிடக்கும் நம்மவர்களுக்கு தைரியம் ஊட்டுகின்றார்.

நண்பர்:—பாரதியாரைப் பற்றி, தமிழர்கள்கூட இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லையே! என்ன அவமானம்!

நான்:—விரைவில் தெரிந்து கொள்ளுவார்கள். தெரிந்து கொண்டதும் அவர்கள் ஆனந்தத்தால், துள்ளப் போகிறார்கள். அதிருக்கட்டும். ஜயத்தைக் கனவிலும் காணாமல், பயத்தை இஷ்ட தெய்வமாக ஆக்கிக்கொண்ட ஜனங்கள், ஜப்பானியன் கல்கத்தாவில் வெடிகுண்டு போட்டால் சென்னையில், ஏன் உடல் நடுக்கம் எடுக்கமாட்டார்கள்?

நண்பர்:—தனி மனிதன் பெரிய பதவிக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் இந்த நாட்டில் கிடையாது. ஆகவே, ஆசையை வைத்துக்கொண்டு இருப்பதால் பயனில்லை என்று நம்மவர்கள் பெரிய லக்ஷியத்தில் ஆசை வைப்பதை நிறுத்திக் கொண்டார்கள்.

நான்:-இதை, நல்லதன்மை போல நீர் பேசுகிறீர். அது தவறு. தோல்வி ஏற்பட்டால், எடுத்த காரியத்தை கை விடுவது என்பது பொறுப்பும் புத்தியும் தைரியமும் பிடிவாதமும் இல்லாதவன் செய்யக்கூடிய வேலையாகும். வெற்றிக்கான சாதனத்தைக் கொண்டு, எடுத்த காரியத்தில் வெற்றி அடையப் பார்ப்பதுதான், ரோஷமுள்ளவன் இயல்பாக செய்யக்கூடியதாகும். நாகரிகம் அறவே இல்லாத நாடுகள் எல்லாம் பிடிவாதத்தாலும் தக்க முயற்சியாலும் முன்னேறி வந்துவிட்டன. உலகத்துக்கே நாகரிகத்தைக் கொடுத்ததாக சொல்லிக்கொள்ளும் ஹிந்துஸ்தானம் சருக்கி விழுந்து கொண்டேயிருக்கிறது.

நண்பர்:—அதற்குக் காரணம் என்ன?

நான்:—ஏட்டு தத்துவத்துக்கும் அனுபவ தத்துவத்துக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதால்தான். மனிதன் கடவுளாகக்கூட ஆகலாம் என்று ஏட்டு தத்துவம் ஒரு இடத்தில் சொல்லுகிறது. மனிதன் மண்ணுவது நிச்சயம் என்று அனுபவத்தில் இருக்கிற தத்துவம் சொல்லுகிறது. மனிதன் மண்ணுவதை எல்லாரும் பார்த்திருக்கிறார்கள். மனிதன் கடவுளானதைப் பார்த்ததில்லை. ஆகவே எந்த தத்துவம் எடுபடும்?

ஏன் கேலி?

நண்பர்:—கேலி செய்கிறீர்களே!

நான்:—தலைமுறை தலைமுறையாக, மனிதன் மண்ணுவது திண்ணம் என்பதை மூட்டை தூக்கிக்கொண்டே வந்திருக்கும் பிருகஸ்பதிகளிடம் கோபித்து பிரயோசனம் இல்லை. கேலிதான் செய்யலாம். வாழ்வாவது மாயம் என்று வாயளவிலே சொல்லுகிறார்களே ஒழிய, இவர்கள் சாப்பாட்டில், காதலில், களியாட்டத்தில், திண்ணையள்வுகூட தங்கள் உற்சாகத்தை குறைப்பதில்லை. பொறுப்பும், வேலையும் வந்து விட்டால், வாழ்வாவது மாயம் என்று பண்டாரப் பாட்டு பாடத் துவக்கிவிடுகிறார்கள். ஏய்க்கிற வித்தை அல்ல; ஏய்த்துக் கொள்ளுகிற மாய வழி!

நண்பர்:—அப்புறம்!

நான்:—ஆணும் பெண்ணும் உற்சாகமாகக் கூடி வாழவேண்டிய இல்வாழ்க்கையை நம்மவர்கள் எப்படி நடத்தி வந்தார்கள், தெரியுமா?

நண்பர்:—சொல்லுங்கள்.

நான்:—'சேலை கட்டிய மாதரை, நம்பொணாது மெய்' என்று இன்னொரு பண்டாரப்பாட்டை, சுருதிசுகமில்லாமல் சத்தம் போட்டுக் கொண்டிருந்த கசடர்களுக்கு இல் வாழ்க்கை ஏது? இன்பமேது? இல்வாழ்க்கையினால் ஏற்படும் சக்தி எப்படி இவர்களுக்கு கிடைக்கும்?

நண்பர்:—இதெல்லாம் இப்பொழுது மறைந்து கொண்டு வருகிறதே!

நான்:—உண்மைதான். நம்மவர்களின் சீரழிவுக்கு அடிப்படையாக இருந்த இவைகள், சுமார் ஐம்பது வருஷத்து முன் வரையில், நமது நாட்டார்களின் வாழ்வை சின்னாபின்னப்படுத்தி, அவர்களை நடைப்பிணங்களாகச் செய்து விட்டன. ஆகவே, தர்மசாஸ்திரத்தில்கூட பற்று இல்லாமல், 'ராமன் ஆண்டால் என்ன? ராக்ஷஸன் ஆண்டால் என்ன?' என்று அசட்டுத்தனமாகப் புலம்ப ஆரம்பித்து விட்டார்கள். ராமன்தான் ஆளவேணும், ராக்ஷஸன் ஆளக்கூடாது என்ற பிடிவாதக் கொள்கையைக்கொண்டிருந்தவர்களின் (வயிற்றில்) வழித்தோன்றல்களாக, பிறந்தவர்களாக தற்போது வாழும் நம்மவர்களைக் கருத முடியுமா?

நண்பர்:--வாஸ்தவம்தான்! ராக்ஷஸன் ஆண்டால் என்ன என்று சொல்லக்கூடாது தான்.

நான்:—ராமன் என்ற மூர்த்தி, நல்லதுக்கெல்லாம், வீரத்துக்கெல்லாம், கடமைகளுக்கெல்லாம் இருப்பிடமாக இருந்தவர். ராக்ஷஸன் சகல தீயதன்மைகளுக்கும் உறைவிடம். வித்தியாசமில்லாமல், இரண்டு பேர்களையும் ஏற்றுக் கொள்ளலாம் என்ற மனோபாவம், ஒரு சமாஜத்தில் புகுந்து கொண்டால், அந்த சமாஜத்துக்கு தர்மசாஸ்திரமும் மனச்சாக்ஷியும் பகுத்தறிவும் கிடையாது என்று கூசாமல் சொல்லி விடலாம்.

நண்பர்:—இந்த மாதிரி, ஒரேயடியாக, நீங்கள் சாதிப்பதுதான் எனக்கு கவலையைத் தருகிறது.

நான்:—அழகுக்கும் அவலக்ஷணத்துக்கும் வித்தியாசத்தை காணமுடியாதவன் குருடனாகத் தான் இருக்க முடியும். சமதிருஷ்டி படைத்த கர்மயோகி என்று எவனாவது சொல்லிக்கொண்டால், அவன் ஆஷாடபூதி என்பதில் சந்தேகமில்லை. நல்லதைக் காக்கவும் அல்லதை அழிக்கவும் பொறுப்பைக் கொள்ளாத மனிதன் சாசுவத அடிமையாகத்தான் இருக்கமுடியும். யோசித்துப் பாருங்கள். மனச்சாக்ஷி இல்லாத மனிதனுக்கு ரோஷம் இருக்காது. பிறகு அவன் வெறும் சோற்றுக் கட்டிடமாக ஆகிவிடுகிறான். இப்படி ஒருவாறு ஆகிவிட்டார்கள் நம்மவர்கள்.

நண்பர்:—எப்பொழுது பார்த்தாலும், கடைசியில் ஒரு கொட்டு கொட்டி வைக்கிறீர்கள்.

மகாராஜா மரணம்

சென்ற 2-ந்தேதியன்று பம்பாயில பிகானிர் சம்ஸ்தான மகாராஜா காலமானார். இவருக்கு வயது 63.

அட்டைப் படத்தில் யார்?

★

ஷேக் முக்தாரும் ஸிதாராவும் 'ரோட்டி' என்ற ஹிந்திப் படத்தில் நடிக்கின்றனர்.

இந்தியாவின் சேவைக்கு

எங்களால் உபயோகிக்கக் கூடிய

எல்லாவித போக்கு வரவு ஸாதனங்கள்..

நீங்கள் எவ்வளவு தூரத்தில் இருந்தாலும் எங்களால் இயன்றவரையில் எங்கள் ஸாமான்களை தங்களுக்கு அதிக சீக்கிரத்திலும் யாதொரு தடங்கலில்லாமலும் மேன்மேலும் அனுப்ப ஏற்பாடுகளை உபயோகிக்கப்படுகிறது. ரயில்கள், கப்பல்கள், படகுகள் முதலான ஸாதனங்கள் அதிக தூரமான இடங்களுக்கு எங்கள் தொழில் சாலைகளிலிருந்து ஸாமான்கள் எடுத்து செல்லுகின்றன. அருகாமையிலிருக்கும் இடங்களுக்கு, மோட்டார் வண்டிகளும், படகுகளும் உபயோகப்படுகின்றன. முடிவிலே கை வண்டிகள் மூலமாயும் தங்களுக்கு சாமான்கள் விற்கப்படுகின்றன. தற்போதிய மிக நெருக்கடியான ஸமயத்தில் தங்களுக்கு உண்டாகும் அசௌகரியங்களை எங்களால் இயன்றவரையில் குறைக்கவேண்டுமென்பதே எங்கள் விருப்பம். ஆனால் உங்கள் நலத்திற்காகவே உங்கள் உதவியை கோருகிறோம்.

உங்களுக்கு வேண்டிய அளவிற்கு மேல் ஸாமான்களை வாங்காதீர்கள். அப்படி செய்தால் தாங்கள் எல்லோருக்கும் ஸரிஸமானமாயும் நியாயமான விலையோடும் எங்கள் ஸாமான்களை கொடுக்க ஸாத்தியமாகும். மேலும் நீங்கள் ஸாமான்களை வாங்கும்போது உங்களுக்கு வேண்டிய ஸாமான்களை ஸரியான விலைக்கு வாங்குவீர்கள்.

ஸாமான்களை உபயோகிப்பவர்களின் நன்மைக்காக

டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி

யாரால் பிரசுரிக்கப்பட்டது.



வேவும் எதிர்வேவும்

1

ஜெர்மனியுடன் பிரிட்டன் போர் தொடுத்த அடுத்த தினம் (அதாவது 1939-ம் வருடம் செப்டம்பர் மாதம் 4-ம் தேதியன்று) பிரசுரமான பத்திரிகைகளில் இங்கிலாந்தில் வசித்த 600 ஜெர்மானியர் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்களது நடவடிக்கைகளால் ராஜ்யத்துக்கு அபாயம் ஏற்படக்கூடும் என்ற காரணத்தால் அம்மாதிரி பந்தோபஸ்து எடுத்துக் கொள்ளப்பட்டது என்றும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள எப்படி அரசாங்கத்தால் இயன்றது என்பது யுத்தகால மர்மங்களில் ஒன்று. அதில் பொதிந்துள்ள அதிசயங்கள் மிகவும் விசித்திரமானவையென்று மட்டும் ஊகிக்கலாம்.

சென்ற மகா யுத்த ஆரம்பத்தில் இதே போன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது கவனிக்கத் தக்கது. போர் பிரகடனமான ஓரிரண்டு தினங்களுக்குள் இங்கிலாந்தில் வாசம் செய்த ஜெர்மானிய ஒற்றர்கள் நூற்றுக்கணக்கில் சிறைப்படுத்தப்பட்டனர். ஆங்கில இரகசிய வேவில் எதிர் வேவு இலாகாவில் உழைத்தவர்களது உழைப்பின் பயனுல்தான் இது சாத்தியமாயிருந்தது.

பிரிட்டனில் நடைபெற்று வந்த ஜெர்மன் வேவு ஸ்தாபனம் கண்டுபிடிக்கப்பட்டது ஒரு விந்தையான கதை. அது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஆங்கில மன்னர் ஏழாவது எட்வர்ட்டின் பிரேத அடக்கத்துக்கு அவரது மருமகனும் ஜெர்மன் சாம்பிராஜ்யாதிபதியுமான கெய்ஸர் வில்லியம் விஜயம் செய்திருந்தார். அச்சமயம் அவரது அந்தஸ்துக்கு உரிய மரியாதைகள் செய்யப்பட்டன. அவரது சௌகரியங்களை கவனிக்க கடமைப்பட்ட ராஜாங்க ஸ்தாபனங்களில் வேவு இலாகாவும் ஒன்று. அதன் உத்தியோகஸ்தர்களில் சிலருக்குக் காவல் புரியும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அவர்களில் ஒருவன் அவரது பரிவாரங்களுடன் வந்த ஒரு ஜெர்மன் கடல் இலாகா உத்தியோகஸ்தனை பார்த்துவிட்டான்.

அந்த ஜெர்மானியன் அன்னிய நாடுகளில் வேவு புரிந்தவன் என்பது அவனுக்குத் தெரியும். கெய்ஸருடன் அவன் வந்த போதிலும் அவன் சும்மாவரவில்லையென்றும் அவன் ஏதோ வேவுபுரியும் உத்தேசத்துடன் வந்திருக்க வேண்டும் என்ற சந்தேகம் ஆங்கில எதிர் வேவுகாரனுக்கு உண்டாகி விட்டது.

அந்த ஜெர்மானியன் மீது மேகுல் வைக்கப்பட்டதில் யாதொரு ஆச்சரியமுமில்லை. ஒரு நாள் அவன் மாறுவேடந்தரித்துச் செல்லுகையில் ஆங்கில எதிர்வேவுகாரர்களால் தொடரப்பட்டான். லண்டனில்

★

"நியாயவாதி"

ஏழ்மைத் தொழிலாளர்கள் வசிக்கும் வீதியிலுள்ள ஒரு நாவிதன் கடைக்குச் சென்று வெகு நேரம் கழித்துத் திரும்பியது அவனைப் பின் தொடர்ந்தவர்களுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அதன் பின்னர் ஆங்கில வேவு இலாகவின் நாட்டம் அந்த நாவிதன் மீது விழாமல் எப்படி இருக்கும்? அந்த நாவிதன்-அவன் பெயர் குஸ்டேல் எர்னஸ்ட்—பூர்வீகம் ஜெர்மனியன் என்பதையும் கண்டு பிடித்த பின் அவன் ஜெர்மனிக்காக லண்டனில் வேவு நடத்தினுன் என்பதை ஊகிப்பது எளிதன்றோ!

ஆம். அது உண்மைதான். அவன் இங்கிலாந்தில் உள்ள எல்லா ஜெர்மானிய வேவுகாரர்களுக்கும் ஒரு தபாலாபீஸைப் போல் இருந்தான். ஜெர்மன் வேவு இலாகாவால் இங்கிலாந்திலுள்ள தனது ஊழியர்களுக்கு அனுப்பப்பட்ட எல்லாக் கடிதங்களும் அந்த நாவிதனது விலாஸத்துக்கு அனுப்பப்பட்டன. அவன் அவற்றை எடுத்து தனித்தனியே ஒவ்வொரு விலாஸதாரனுக்கும் அனுப்பும் பொறுப்பை ஏற்று வந்தான். பிரிட்டிஷ் வேவு இலாகாவின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்காகவே இந்த ஏற்பாட்டை ஜெர்மனிய அதிகாரிகள் நடைமுதலுக்குக் கொண்டு வந்தனர்.

ஆனல் இந்த இரகசியத்தை உணர்ந்தபின் பிரிட்டிஷ் எதிர் வேவு இலாகா சும்மா இருக்குமா? ஜெர்மனிய வேவுகாரர்களுக்குத் "தபால்பெட்டியாக சேவைசெய்த குஸ்டேல் எர்னஸ்டின்மீது அதன் கவனம் பரிபூரணமாய் செலுத்தப் பட்டது. அவனுக்கு அனுப்பப்படும் கடிதங்களும் அவனல் அனுப்பப்படும் கடிதங்களும் தணிக்கை செய்யப்பட்டன. அதன் பயனுக இங்கிலாந்தில் நடத்தப்பட்ட ஜெர்மன் வேவின் அந்தரங்கள் எல்லாம் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு விளங்கலாயின.

யுத்த ஆரம்பத்தின் பொழுது பிரிட்டனில் வசித்தஜெர்மானிய வேவுகாரன் ஒவ்வொருவனது விலாஸத்தையும் பிரிட்டிஷ் எதிர் வேவு இலாகா அறியும் என்பதும் ஒருவர் விடாமல் பிரிட்டனிலுள்ள எல்லா ஜெர்மனிய ஒற்றர்களும் கைது செய்யப்பட்டனர் என்பதும் வியப்புக்குரிய விஷயங்களல்ல.

2

மேற் குறிப்பிடப்பட்ட விஷயங்களிலிருந்து எதிர் வேவு எத்தகையது என்பதும் ஒருவாறு விளங்கும். வேவு புரிவது எவ்வளவு முக்கியமோ அதே போல்தான் எதிர் வேவும். ஒரு ராஜாங்கத்தில் எதிர் வேவு புரியும் ஒற்றர்கள் அங்கு பிற நாட்டிலிருந்து வரும் ஒற்றர்களது நடவடிக்கைகளை கவனித்து அவற்றுல் ஏற்படக்கூடிய அபாயங்களை விலக்க முயலுவார்கள்.

இவ்வொற்றர்கள் துறைமுகங்களிலும் கடற்கரைகளிலும் இருப்பாதை முனைகளிலும் காவல் இருந்துகொண்டு அந்நிய நாடுகளிலிருந்து வருபவர்களைக் கவனிப்பார்கள். இந்த வேலைக்காகப் பிரத்தியேகமான பயிற்சியை பெற்றுள்ள அவர்களுக்கு தாங்கள் கவனிப்பவர்களில் யார் ஒற்றர்களாய் இருக்கக்கூடும் என்பதை அறிந்து கொள்வது சிரம சாத்தியமானதன்று.

வேவு புரிபவர்களுக்குத் தீக்ஷண்யமான கண்கள் வேண்டும் என்றுல் எதிர் வேவு புரிபவர்களுக்கு அதி தீக்ஷண்யமான கண்கள் வேண்டும். மனிதர்களையும் விஷயங்களையும் மறக்காத ஞாபக சக்தி அவர்களுக்கு அவசியம் இருக்க வேண்டும். யாரையேனும் ஒரு தடவை பார்த்துவிட்டால் அவரை எந்த சந்தர்ப்பத்திலும் எந்த இடத்திலும் அடையாளங் கண்டு பிடித்துக் கொள்ள வேண்டிய திறமை அவர்களுக்கு இருந்தாலன்றி அவர்களது வேவு பயன் பெருது.

ஜெர்மனியில் எதிர் வேவு புரிந்த ஒருவன் தன்னுடைய ஞாபக சக்தியையும் முகங்களை அடையாளங் கண்டு கொள்ளும் திறமையையும் எப்படி விருத்தி செய்தான் என்பதை கூறியுள்ளான். அவன் பிரிட்டனில் பிரசுரமாகும் ஒவ்வொரு பத்திரிகையிலுள்ள படங்களையும் கவனிப்பது வழக்கமாம். அதில் உள்ள புகைப்படங்கள் எல்லாம் அவன் மனக் கண்ணுக்கு என்றும் புலப்படும்படி அவ்வளவு கவனம் செலுத்துவது அவனது வழக்கமாம். இங்கிலாந்திலுள்ள ஒவ்வொரு பிரமுகருடைய முகமும் அவனது திருஷ்டிக்குப் பரிச்சயமான முகமேயன்றி வேறில்லை. யாரேனும் ஒரு பிரிட்டிஷ் பிரமுகன் ஜெர்மனிக்கு விஜயம் செய்தால் அவன் யாரென்பது அவனுக்கு உடனே தெரிந்து விடும். பின்னர் அவன் மீது மோகுல் செய்வது அவனுக்கு ஒரு பிரமாதமான காரியமில்லை.

இவ்விதம் நூற்றுக் கணக்கான ஒற்றர்கள் எதிர் வேவு புரிந்து அநேக ரகசியங்களை கண்டு பிடித்து தங்கள் அதிகாரிகளுக்குத் தெரிவிக்கின்றனர். சாதாரண காலத்திலும் சரி, யுத்த காலத்திலும் சரி, அவர்களது சேவை முக்கியமானது என்பதில் யாதொரு சந்தேகமும் இல்லை.

3

யுத்த காலத்தில் நடைபெறும் தபால் தணிக்கை முறை எதிர் வேவு இலாகாவின் பிரதான கடமைகளில் ஒன்றுகும். வெளி நாடுகளிலிருந்து வரும் தபால்களும், உள் நாட்டிலேயே அனுப்பப்படும் கடிதங்களும் எத்தனையோ தணிக்கை உத்தியோகஸ்தர்களால் பிரிக்கப்பட்டு படிக்கப்படுகின்றன. எத்தகைய ரகசிய பாஷையில் எழுதப்பட்டபோதிலும் அது கூறும் விஷயம் இன்ன தென்பதை கண்டு பிடிக்காமல் இந்த உத்தியோகஸ்தர்கள் தமது வேலை செய்ய மாட்டார்கள். கண்ணுக்குப் புலப்படாத மசியில் எழுதப்பட்டாலும் இவர்களது கண்களுக்கு அது புலப்படாமல் இருக்காது. அவ்வளவு உழைப்பு; அவ்வளவு சிரத்தை; அவ்வளவு திறமை, இவ்விலாகாவில் வேலை செய்பவர்களிடம் காணப்படுகின்றன.

எதிர்வேவு இலாகாவால் கையாளப்படும் தணிக்கைமுறைகளை விவரிக்க இங்கு இடமில்லை. வேவு நடத்தும் எதிரி ஒற்றர்களது முயற்சிகள் பயனடையாதவாறு செய்வது அதன் முக்கியமான நோக்கம். அப்படிச் செய்வதற்கு அதனிடம் ஒரு பலமான ஆயுதம் இருக்கிறது. அது என்னவெனில் தபால் பட்டுவாடாவைத் தாமதப்படுத்துவதே.

ஒரு உதாரணம். இங்கிலாந்தில் ஜெர்மன் தரப்பில் வேவு பார்க்கும் ஒரு ஒற்றன் இருக்கிறுன் என்று வைத்துக்கொள்ளுவோம். குறிப்பிட்ட தேதியன்று பிரிட்டிஷ் விமானப்படை பெர்லினைத் தாக்க உத்தேசித்திருக்கிறதை என்பதை அவன் எப்படியோ தெரிந்துகொள்ளுகிறுன் என்றும் வைத்துக் கொள்ளுவோம்.

அவன் அச்செய்தியை சர்வ்தேச பாஷையில் (Code) எழுதி நடுநிலைமை வகிக்கும் நாட்டிலுள்ள தனது கூட்டாளிக்கு அனுப்புகிறுன். அவன் எழுதும் கடிதமோ தந்தியோ பிரிட்டிஷ் தபால் இலாகாவில் தணிக்கை செய்யப்படுகிறது.

தணிக்கை செய்பவர் என்ன செய்வார் தெரியுமா? குறிப்பிட்ட தேதி பெர்லின் தாக்கப்பட்ட தேதிக்குப் பின் அந்த கடிதத்தையோ, தந்தியையோ செல்லும்படி அனுமதிப்பார். ஆனல் அதனல் என்ன பிரயோஜனம்? ஒற்றன் விடுத்த முன்னெச்சரிக்கை சரியான சமயத்தில் போய்ச் சேரவில்லையாதலால் அது யாதொரு பயனையும் அளிக்கவில்லை. அதனுல் யாதொரு அனுகூலமும் ஏற்படவில்லை. எதிர்வேவு இலாகாவின் தணிக்கையால் அவனது முயற்சி வியர்த்தமாய் முடிந்தது என்பது உண்மை.

4

நாஸிகளால் கையாளப்பட்ட முறைகளில் ஐந்தாம் படைப்பிரயோகம் நூதனமானது. யுத்தகளத்தில் அவர்கள் பெற்ற வெற்றிகளைவிட இந் நூதனமான ஆயுதம் துரிதமாயும் எளிதாயும் பல நாடுகளை அவர்களது வசத்தில் வீழ்த்தியது.

இவ்வைந்தாம் படையைச் சேர்ந்தவர்கள் அநேகர் மற்ற

(அடுத்த பக்கம்)

ஸாத்மியமும் அஸாத்மியமும்

அல்லது

பத்தியா பத்தியங்களின் தத்துவம்

நோயற்ற வாழ்வு

★

வைத்யரத்ன பண்டிட் எம். துரைசாமி ஐயங்கார்

ஆயுர்வேத சிகித்ஸா முறையில் ஔஷதங்களினும பத்தியக்கிரமமே மிகவும் முக்கியமானதென்று பலருக்குத் தெரிந்திருக்கும். ஆரோக்கிய நிலைமையில் உபயோகிக்கப்படும் ஆகாரங்கள் ரோக நிலைமையில் அதே மனிதனுக்கு அனுகூலமாயிருப்பதில்லை. ஆகவே ஆரோக்கிய நிலைமையையும் அநாரோக்கிய நிலைமையையும், வயதின் ஏற்றத் தாழ்வுகளையும், தேச-காலாதி பேதங்களையும் அனுஸரித்து ஆகாரக்கிரமம் மாறுபடுகிறது. இந்தியாவில் தென்னுட்டினருக்கு அரிசியும், வடநாட்டினருக்குக் கோதுமையும் ஏற்ற முக்கிய உணவுப் பொருள்கள். தென்னுட்டினரும் வட தேசத்தியவரும் அவரவருக்கு வழக்கமாயுள்ள உணவுகளைத் திடீரென்று மாற்றி உபயோகிக்க முடியாது; அவ்விதம் மாற்றியுபயோகிப்பது யுக்தமுமல்ல. இவ்விதம் அவரவருக்கு—ரோகிகளுட்பட—அனுகூலமாய் வழக்கத்திலிருந்து வரும், அல்லது பத்தியமென்று கருதியுபயோகிக்கப்படும் ஆகாரம் முதலியது "ஸாத்மியம்" என்று சாஸ்திரமறிந்த வைத்தியர்களால் வழங்கப்படும். அனுகூலமல்லாத, அல்லது வழக்கத்தில்லாத, அல்லது அபத்தியமென்று கருதப்படுகிற மற்றது "அஸாத்மியம்" என்று கூறப்படும்.

ஸாத்மியம், அஸாத்மியம் என்ற சாஸ்த்ரீய பரிபாஷைகளைக் கூறுவதற்குப் பதிலாக இவ்விஷயத்தைப் பொதுவாக விளங்கக் கூறுவோமானல் சிலருக்குச் சிலவற்றில் ஏற்படும் இயற்கை விருப்பத்தையும் வேறு சிலவற்றில் ஏற்படும் இயற்கை வெறுப்பையும் இவ்விஷயம் குறிப்பிடுவதாகக் கூறலாம். பத்தியம் என்றும் அபத்தியம் என்றும் சாதாரணமாக இவ்விரண்டிற்கும் முறையே வேறு பெயரிட்டுக் கூறுவதும் வழக்கம். மனிதருக்குள்ளேயே சிலருக்குச் சிலரிடம் விசேஷ நட்பும் வேறு சிலரிடம் விருப்பமின்மையும் உண்டாவதை நாம் நேரில் பார்த்து வருகிறோம். அவ்விதம் ஏற்படுகிற அன்புக்கும் அன்பின்மைக்கும் அவர்கள் பரஸ்பரம் செய்யும் உபகார-அபகாரங்களைக் காரணமாகக் கருதுவதற்கில்லை. காரணம் அறியமுடியாதபடி ஏற்படும் அந்யோந்நியமான அவ்வித அன்பை ஸம்ஸ்க்ருதமறிந்தவர் "தாரா மைத்ரீ" என்பார்கள். அவ்விதமே சில வஸ்துக்களில் சிலருக்கு ஏற்படும் இஷ்டத்தையும் அவை அவரது தேகத்திற்கு ஒத்துக்கொள்ளும் தன்மையையும் "ஸாத்மியம்" என்னும் பெயரால் சாஸ்திரமறிந்தவர் கூறுவர். இதை ஆங்கிலத்தில் "ஆண்டிபதி" எனக் கூறுவர்.

வியாதிக்ரஸ்தருக்கு ஔஷதங்களை உபயோகிக்கையிலும், பத்திய முறைகளை உபதேசிக்கையிலும் வைத்தியர்கள் இவ் விஷயத்தில் முக்கியமாகக் கவனம் செலுத்தவேண்டும். சிலருக்குச் சில வஸ்துக்கள் தான் பிரியமாகவும் அனுகூலமாகவும் இருக்கும்; அதாவது ஸாத்மியமாயிருக்கும்; அவ்வித ஸாத்மிய வஸ்துக்களையல்லாது, பிடிக்காத அதாவது அஸாத்மியமான பதார்த்தங்களை உபயோகிக்கச் செய்தால் அது அபத்தியமாய் விடும். அஸாத்மிய பதார்த்தங்களை உபயோகிப்பதால் பிணியாளிக்கு அநேகம் கெடுதிகள் உண்டாகும். உதாரணமாய் முருங்கக்காய் ஆரோக்கியத்திற்கு அனுகூலமான சிறந்த காய்களில் ஒன்று. அதைப் பத்திய முறையில் சில வைத்தியர்கள் சரியான யோசனையின்றி உபயோகிக்க வேண்டுமென்று கூறி விடலாம். ஆனல் அதன் குணம் எவ்விதமிருந்தபோதிலும் மணமும் சுவையும் சில பிணியாளருக்கு அருவருப்பைத் தரும். அங்ஙனமே பால் தேகபோஷணைக்கு மிகவும் ஏற்றதான ஆகாரமாயிருந்தும், அது சிலருக்கு எளிதில் ஜீர்ணமாவதில்லை. ஆகவேதான் "க்ஷீரேணுபி விரிச்சியதே" என்று கூறப்படுகிறது என்றுல் பாலானது சிலருக்கு ஜீர்ணமாகாமல் விளக்கெண்ணெயைப் போல் விரேசநம் (பேதி) உண்டு பண்ணும் என்று சாஸ்திரமும் அனுபவமும் அறிவிக்கின்றன. இதிலிருந்து பால் போஷணைக்குரிய சிறந்த ஆகாரமாயிருந்தும் அது சிலருக்கு ஸாத்மியமாகவும் வேறு சிலருக்கு அஸாத்மியமாகவும் ஆகிறது இவ்விதமே வேறு பல வஸ்துக்களும் ஒரு சாராருக்கு பத்தியமாகவும் (ஸாத்மியம்) மற்றொரு சாராருக்கு அபத்தியமாகவும் (அஸாத்மியம்) ஆகுமென்பதை யுணர்ந்து வைத்தியர்களும் மற்றவரும் மனித சுபாவங்களையும், நோய்களின் நிலைமைகளையும் உற்றுணர்ந்து பத்திய முறைகளைத் தெரிந்து உபயோகிக்க வேண்டும்

சில வஸ்துக்களைப் பார்க்கும் போதோ, அவற்றின் மணம் உணரும் போதோ, அவற்றைச் சுவைக்கும்போதோ, சிலர் அவற்றை இயற்கையாகவே விரும்பி யேற்பதும், அதே வஸ்துக்களை வேறு சிலர் வெறுத்துத் தள்ளுவதும் வழக்கம். சிறு குழந்தை முதல் இவ்வுண்மை ஒரே மாதிரியாகத்தான் இருந்து வரப் பார்க்கிறோம். சில குழந்தைகள் வெண்ணெயை வெகு ஆவலுடன் உண்ண, வேறு சில அதைச் சிறிதும் விரும்புவதில்லை. அவ்விதம் பிடிக்காத பதார்த்தங்களை எவ்விதமாயினும் மறைத்துக் கொடுத்தாலுங்கூட அவற்றைத் தெரிந்து மனமுவந்து உண்பதாலான குணங்களை அவை உண்டு பண்ணுவது அரிது. வியாதி நிவாரணத்திற்கு அவசியமான சில மருந்துகளை மாத்திரம், பிணியாளி அவற்றைப் பிரியத்துடன் உட்கொள்ள முடியாமலிருக்கையில் சுவையுள்ள வஸ்துக்களில மறைத்துக கொடுப்பதற்கு விதியுண்டு. "யாநியேஷாம் நரோசந்தே ருச்யைராவ்ருத்ய தாநிவை தேப்யோ தத்யா துபாயேந வ்யாதிஸாத்மியம் நிருபய்ந்". சில ஔஷதங்கள் பிணியாளிக்குப் பிடிக்காவிடில் அவற்றைச் சுவையுள்ள வேறு வஸ்துக்களினுள் மறைத்து உபயோகிக்க வேண்டும்; அது நிவாரணரூபமான அனுகூலத்தைச் செய்யும்; அதாவது பிணியாளிக்கு ஸாத்மியமாய் உபயோகப்படுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. இந்த முறையில்தான் இக்காலத்தில் கொய்னா முதலிய கசப்பான சரக்குகள் சர்க்கரை முதலிய கவசங்களில் மறைத்து உட்கொள்ளக் கொடுக்கப்படுகின்றன. அருவருப்பைத்தரும் ஔஷதங்களைப் பணியாரங்களினுள் வைத்து மறைத்தும் பிணியாளருக்குக் கொடுக்கலாம். "பக்ஷ்யாணு மந்த ரேப்யங்யாங் பதார்த்தாள் தாபயேத் பிஷக்" என்பது அம்முறையைத் தான் விளக்குகின்றது. விரேசனத்திற்கு (பேதிக்கு) உபயோகமான ஔஷதம் எவ்வளவு நன்ருயிருந்தாலும், அவ்வித ஔஷதம் பெரும்பான்மையோருக்கு வெறுப்புண்டுபண்ணுவது வழக்கம்; அத்தகையவருக்கு 'அபயாமோதகம்' போன்ற மருந்தைச் சுவையுள்ள பணியாரத்தில் கலந்தோ மறைத்தோ கொடுத்தல் நல்லது. சில கர்ப்பிணிகளுக்குச் சில ஸமயம் ஔஷதம் என்ற பெயர் கேட்டவுடனே குமட்டலும் வாந்தியும் தோன்றி அவர்கள் மிகத் துன்பமனுபவிப்பதுண்டு. அந்நிலைமையில் அவசியமான ஔஷதங்களைப் பிரியமான உணவுடன் கலந்தோ மறைத்தோ கொடுப்பது நலம் என்கிறுர் ஸுச்ருதர்.

நமது பழக்க வழக்கங்களால் ஸாத்மியமாயிருப்பது அஸாத்மியமாகவும், அவ்விதமே அஸாத்மியமாயிருப்பது ஸாத்மியமாகவும் மாறுபடுவதுண்டு. பல வருஷங்களுக்கு முன்பு தென்னிந்தியாவில் காலையில் எழுந்ததும் காபியென்னும் பானம் வழக்கத்திலிருந்ததில்லை. நீரிலும் கஞ்சியிலும் இரவில் ஊற வைத்த அன்னமான "பழையது" என்பதை பலர் உண்டு வந்தார்கள். எனக்கும் பழையது உண்ணும் பழக்கம் சிறு பிராயத்திலிருந்தது. அது நமக்கு ஸாத்மியமா

(18-ம் பக்கம்)

(முன் பக்கத் தொடர்ச்சி)

பரதேசிகளுடன் இங்கிலாந்துக்கு வந்தனர். ஹாலந்து, பெல்ஜியம் பிரான்ஸ் முதலிய நாடுகள் வீழ்ச்சியுற்றபின் அவர்கள் உண்ண உணவின்றி நிற்க நிழலின்றி வருந்தும் அநாதைகளைப் போல் நடித்து இங்கிலாந்தில் இடவசதிபெற முயன்றனர்.

அச்சமயம் பிரிட்டிஷ் எதிர் வேவு இலாகா அதிகாரிகள் மிகவும் சாமர்த்தியமாயும் சாதுர்யமாயும் நடந்து கொண்டனர் என்றே சொல்ல வேண்டும். ஒவ்வொரு இடத்திலும் இந்தப் பரதேசிகளை விசாரித்து அவர்களுக்கு தகுந்தபடி உதவி செய்ய ஒரு விசாரணை சபையை அவர்கள் நிறுவினர்.

அவ்விசாரணை சபை முன் ஒவ்வொரு பரதேசியும் தனது பூர்வோத்திரத்தைப் பற்றி கூற வேண்டும் என்றும் அவன் சொல்வதில் ஏதேனும் சந்தேகம் இருந்தால் 'அவனை சிறையில் வைக்க வேண்டும் என்றும் விதிகள் செய்யப்பட்டிருந்தன.

விசாரணை சபை முன் ஒரு ஜெர்மானியன் தனது பூர்வோத்திரத்தைக் கூறினுன். தான் தீவிரமான சுதந்திரவாதியென்றும் நாஸிகள் கொடுமைக்குப் பயந்து ஓடி வந்த தாயும் அவன் வாக்கு மூலம் கொடுத்தான்.

அவனைக் கவனித்த அன்னிய அநாதைகளில் ஒருவன் சரேலென்று விசாரணை சபை முன் வந்து தான் ஒரு முக்கியமான விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும், என்று விண்ணப்பித்துக் கொண்டான். அவனுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

நாஸிகளது கொடுமையிலிருந்து ஓடிவந்ததாகக் கூறிக் கொள்ளும் மனிதன் உண்மையில் ஒரு ஒற்றனே என்பதையும் அவன் உண்மைப்பெயர் விலாசம் எவை என்பதையும் அவன் தெரிவித்து விட்டான். அதன் பின் அந்த ஐந்தாம் படையைச் சேர்ந்தவனுக்கு—இங்கிலாந்தில் வேவு புரிய வந்த நாஸி ஒற்றனுக்கு—சிறைவாஸம் அனுபவிக்க நேர்ந்தது.

ஓர் நாடகம்

அற்புத சிருஷ்டி

★

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

[இடம் சத்தியலோகம். பிரம்மா-தனியே ஏதோ ஆராய்ச்சியிலீடுபட்டிருக்கிருர்.—சரஸ்வதி வருகிருள்.]

சரஸ்வதி:—ஸ்வாமி இன்று என்ன சிருஷ்டி செய்யப் போகிறீர்கள்? நமக்கு அந்த சிருஷ்டியினுல் கௌரவம் ஏற்படுமாறு செய்ய வேண்டும்.

பிரம்மா:-அன்பே! என்ன? இன்று உன் சகல வித கலைகளையும் அவற்றைப்பற்றிய ஆராய்ச்சியையும் கூட விட்டு விட்டு இங்கு வந்தனே! என் வேலையைப் பரீக்ஷிக்கவா?

சரஸ்வதி:—நாதா! தங்களைப் பரீக்ஷிக்கவா? அதுவும் நானு! யமவாதனையின் அற்புதங்களை சிறிது நேரம் கவனித்தேன். மனம் ரஸிக்கவில்லை. உலகத்தில் எங்கு பார்த்தாலும் அதே பழங் கதை! சிலருக்குச் சந்தோஷம்; சிலருக்கு துன்பம். ஒருவன் நன்மை செய்தான்; மற்றவன் அதை அழிக்கிருன். அரசன் ஆண்டியாகிருன். ஆண்டி அரசு செலுத்துகிருன். இதிலெல்லாம் விசேஷமில்லை. ஏதாவது ஓர் அற்புத சிருஷ்டி செய்ய வேண்டும். உலகத்தில் அநேகர் உங்களை "என்னை ஏன் இவ்விதம் படைத்தாய் பிரமனே" என்று ஏங்கிச் சபிக்கிருர்கள். ஒரு சிலரையாவது தங்களைப் புகழும்வண்ணம் படைக்கலாகாதா?

பிரம்மா:—நன்று கூறினே! என் மனம் குளிர்ந்திருக்கிறது. மானிட சிருஷ்டிக்கு ஏற்ற பொருள்களைக் கொணர்ந்து வைக்கச் சொல்லு. உன் எதிரிலேயே உன் உதவி கொண்டே சிருஷ்டி செய்வேன்.

சரஸ்வதி:—நானு சகாயம் செய்வது? என்னுல் முடிந்தால் தங்களுக்கு ஏன் தொந்திரவு கொடுக்கிறேன்?

பிரம்மா:—எதற்குக் கோபம? நீ பேசாமல் பார்த்துக் கொண்டிரு. ஆனுல் உனது அருளைமட்டும் அந்த ஜீவனுக்கு அளி. உன்னுடைய உதவிகொண்டே நான் செய்யும் மனிதன் உயிர்பெற்று விடுவான்.

சரஸ்வதி:—என்ன தாங்கள் கலியுகத்தவரைப் போல் பேசுகிறீர்களே!

பிரம்மா:—ஆம். உன் அருள் கொடு.

பிரம்மா சிறிது நேரத்திற்குள்ளாக பஞ்ச பூதங்களினுல் பொம்மை தயாரித்தார். பின்பு வீரியம், அழகு, தயை, இரக்கம், அன்பு, கல்வி, புத்தி, பலம், மகிழ்ச்சி, துணிவு, ஆண்மை, கம்பீரம், முதலிய எல்லா நற்குணங்களையும் அதற்களித்தார். கடைசியில் வயதையும், யோகத் (அதிர்ஷ்டம்)தையும் அவன் தலையில் எழுதும் சமயம், வாணி, நான்முகனின் கையைப்பிடித்துநிறுத்தி, "வயது எத்தனை? அதிர்ஷ்டத்தில் என்ன எழுதுகிறீர்கள்? என்ருள்.

பிர்ம்மா:—அதனுல் உனக்கென்ன? உனக்கு விளையாட்டு தானே பார்க்கவேண்டும். கேள்! இவன் யோகத்தில் பயங்கரமான வறுமை, கஷ்டம், கவலை. இவனுக்கு வயது 20.

சரஸ்வதி:—ஐயோ! தாங்கள் என்ன விளையாடுகிறீர்கள்? எல்லா நற்குணங்களையும் அளித்து, அளிதப்போக்க கவலையை யளித்திருக்கிறீர்களே! இந்த சிருஷ்டியைப் பார்த்து ஜனங்கள் தங்களை வைவார்களா? வாழ்த்துவார்களா?

பிரம்மா புன்னகை புரிந்து, "இப்போது வேலை முடிந்தது. பேசாமல் நடப்பதைப்பார். இவனுக்கு ஆயுசு குறைய வைத்திருப்பது இவன் செய்யும் நற்காரியங்களினுல் உலகம் க்ஷேமமடையவும் நாம் அதிகநாள் காத்துக் கிடக்காமலிருக்கவுந்தான்."

"இவனை என்ன பெயரிட்டு அழைப்பது" என்று சரஸ்வதி வினவினுள். நான்முகன் பெருமிதத்தோடு "நாட்டூழியன்" என்ருர்.

திரிமூர்த்திகளும் அமரர்களும் மறுபடி உற்று பூலோகத்தை நோக்கும் சமயம் நம் நாட்டு ஊழியனுக்கு வயது 20. தேவர்களுக்கு ஒரு நாள், நமக்கு அநேக வருஷங்கள். எனவே சென்ற இருபது வருஷங்களும் தேவதைகளுக்கு சில நிமிஷங்கள் தான்.

பூலோகத்தில் யுத்தகளம் நம் நாட்டுப் படைகளும் எதிரிகளின் சைன்யங்களும், அணி வகுத்து நிற்கின்றன. நமது நாட்டு ஊழியன் தோளில் துப்பாக்கி, கையில் கத்தி முதலியவற்றுடன் யுத்த சன்னத்தனுக வருகிருன். நம் நாட்டுப் படையைச் சேர்ந்த ஒருவன் எதிரிப் படை வீரனேடு ஏதோ பேசினுன். அவர்கள் பேசியதிலிருந்து, ஏதோ தீங்கிழைக்கும் சதியாலோசனையென்று நாட்டூழியன் கண்டு பிடித்தான்.

நாட்டு ஊழியன்:—மூர்க்கா! நீ செய்த வேலை நன்று: தாய் நாட்டிற்குத் தீங்கிழைத்த உன்னைக் கொல்வேன். மரியாதையோடு மன்னிப்புக் கேட்டுக் கொள்.

போர்வீரன்:—கோபமும் அகம்பாவமும் கலந்த குரலில் 'அடே! ஜாக்கிரதையாய் பேசு நாடாம் நாடு! பிரமாதமாய்த் தெரிந்துவிட்டதோ உனக்கு நாட்டைப்பற்றி! இந்தா ஏற்றுக் கொள்.'

கத்தியை உருவி நாட்டூழியன் மார்புக்கு நேரே நீட்டினுன். தேச பக்தன் வாளுருவி துரோகியின் மார்பில் தாக்கினுன். க்ஷணத்தில் துரோகி கீழே விழுந்து மாண்டான் அந்த சமயம் எதிரிப் படையும் நம் நாட்டுப்படையும் கை கலக்க ஆரம்பித்தன. பீரங்கிகள் முழங்கின. நாட்டூழியன் கரத்தில் பிடித்த ஒரே துப்பாக்கியினுல் எதிரியின் சேனு சமுத்திரம் சிதறிப் போய்விட்டது. புயற்காற்றைப் போல் எதிரியின் சைன்யத்தைக் கலக்கினுன். மேலே தேவர் "சபாஷ்! சபாஷ்" என்றனர். மாந்தர்கள் "இதென்ன சாமர்த்தியம்! இந்த யுவனுக்கு! சம்ஹார ருத்ரனே? என்று வியந்தனர். இந்திரன் தன் உலகில் நாட்டூழியனை வரவேற்பதற்கு மகர தோரணம் கட்டி வைத்திருந்தான். சப்தமாதரும் தேசபக்தனை வரவேற்க முத்தாலத்தியேந்தி நின்றனர். எதிரியின் படையைப் புறமுதுகிட்டோடும்படி செய்து நாட்டூழியன் நின்ருன். அவனுடல் துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்டிருந்தது. உடல் சாய்ந்தது. நம் நாட்டு வீரனெருவன் படைத்தலைவனிடம் சென்று:—"தலைவரே வெற்றி நமக்குக் கிடைத்தது. ஆனுல், நம் நாட்டூழியன் இறந்தான்" எனவும் தலைவன்:—ஹா! என்ன சொன்னுய்? வெற்றி கிடைத்தது கூடப் பெரிய காரியமில்லை. அதுபோன்ற வீரன் கிடைப்பதல்லவா துர்லபம்? கடவுளே உன் திருவிளையாடல் நன்று, என்று ஏங்கினுன்.

டோங்ரே

பாலாமிருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு

விசேஷ பலத்தைக் கொடுத்து உதவக்கூடிய
சிறந்த மருந்துகள் இருக்கின்றன.

மதராஸ் டி. சி. என். கோல்டன் மெட்டல் ஜ்வல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.

கறுக்காது.

2-வருஷம் உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

பெரிய சைஸ் 2" அகலமும், அதற்கு மேற்பட்டதும் ஜதை ரூ.	3	12	0
மத்திய சைஸ் $1\frac{3}{4}$" முதல் 2"க்குள் ஜதை ரூ.	3	2	0
குழந்தை சைஸ் $1\frac{3}{4}$க்கு உட்பட்டது ஜதை ரூ.	2	8	0

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணு 8.

எமது கேட்லாக் இனம்.

டி. சி. நாகலிங்கப்பா & கோ.,

280, வால்டாக்ஸ் ரோடு :: பார்க் டவுன் :: மதராஸ்.

யுத்தத்துக்குப்பின்

★

(ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன்)

சூரியன் அஸ்தமிக்காத ஏகாதிபத்தியம்; அதற்கு இந்தியாவில் அடிகோலியவர் ராபர்ட் கிளைவ். பெரிய நவாப் போல கனத்த சுமையுடன் சுதேசம் திரும்பினர். அநியாயமாக சம்பாதித்த பணம் என்ற புகார் அங்கு எழுந்தது; கம்பெனி ஊழியருக்கு இவ்வளவுபணமா? என்ற காய்ச்சலும் ஏற்பட்டது. விரோதிகள் அவரை விசாரணைக்குக் கொண்டு வந்தனர். அவர் மனது மட்டும் சிறிதேனும் சளைக்கவில்லை. 'பொன்மலையிலிருந்து கொஞ்சம் தானே பெயர்த்துக்கொண்டு வந்தேன்" என்று அலக்ஷியமாகப்பதிலளித்தார். அந்த அலக்ஷியமே அவருக்குப் பெரிய துணையாயிற்று. விசாரணையில் விடுதலை பெற்ருர், அவரைச் சங்கடத்திற்கு ஆட்படுத்தியவர்களும் 'பெரிய சேவை செய்தவரை அனுவசியமாக ஆட்டி வைத்தோமே' யென்று வெட்கித் தலை குனிந்தனர்.

கிளைவ் பெயர் இன்றும் பிராபல்யமாகவே இருக்கிறது. அவரை வழிகாட்டியாகக் கொள்ளுகிருர்கள், பலரும். கிரான் போரனும், ஹார்லிபாக்ஸும், அமெரியும், மாரிஸனும் வந்து போயென்ன? கிளைவ் மனேபாவமே இன்றும் ஓங்கி நிற்கிறது. செய்த தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்து திருந்தும் வழி தேடுவோமேயென்னும் எண்ணம் கிடையாது; இந்த மட்டோடாவது விட்டிருக்கிருேமே யென்று பகட்டாகப் பேசுகிருர்கள். பரம்பரை தர்மத்தையன்ருே அனுஷ்டித்தோம்? இல்லையேல் எவ்வளவு தீங்கு இழைத்திருப்போம் தெரியுமா? வென்று வாய் வீச்சு வீசுகிருர்கள்.

ஆத்ம ஸ்துத்ய வழக்கம் பிரிட்டிஷாருக்கு அதிகமில்லை. ஆயினும் அதிக அடக்கத்தைக் காட்டிக்கொள்வதும் அபாயகரமானதில்லையா?

ஆதலால் வாயில்லாப் பூச்சிகளான குடியேற்ற நாட்டு மக்கள் உஜ்ஜீவிப்பதற்காகத் தாங்கள் நிறைவேற்றிவரும் தர்ம கைங்கரியத்தைப்பற்றி ராஜ தந்திரிகள் பிரமாதமாகச் சொல்லிக் கொள்ளுகிருர்கள். பிறந்தகத்து வளமையை உடன் பிறந்தானிடம் சொல்லிக் கொள்ளுவது போலிருக்கிறது இது! பிரிட்டிஷ் மகாஜனங்கள் இதை நம்புவது அதிசயமில்லை; அந்தப் பேதைகளன்ருே இது தர்ம கைங்கரியமென ஒப்பவேண்டும்? அங்கு தான் டிரஸ்டி பேச்சு ஏறுவதில்லை.

ஏகாதிபத்தியக் கொள்கையை நிர்ணயிக்கையில் சுய நலம் முன்னேங்காமலிருக்குமா? போகிற போக்கில் பொது நலத்துக்கும் வழியேற்பட்டால் அதுவே ஆதர்சமென்று பறை சாற்றுவது தகாது. அடிமை வியாபாரம் ஒழிந்தது உண்மையே; அடிமை வாழ்வு பரிகரிக்கப்பட்டது வாஸ்தவமே. ஆனுல் அதற்காக நிறுவப்பட்டதல்ல ஏகாதிபத்தியம்.

காலசேவகன் குடியேற்ற நாடுகளைத் தட்டி எழுப்பிவிட்டிருக்கிருன். பூர்வ ஸ்திதிக்கு ஹானியில்லாமலிருங்களென்று அவர்களிடம் இனி சொல்ல முடியாது. இப்பொழுது ஏகாதிபத்திய ஊழியர்களாக குடியேற்ற நாடுகளில் இருப்பவர் உண்மையில் பொதுஜன ஊழியர்களாக இருந்திருந்தால் இப்போதைய நிலைமை தோன்றியிராது. உலகமே திடுக்கிடும்படியான மாறுதல்களை அவர்கள் ஏற்படுத்திக் காட்டியிருப்பர்.

ஆனுல் வாய்ப்பந்தல் போடுவதில் மட்டில் குறைவில்லை. "சுயவாட்சிக்குப் பரி பக்குவதசைஅடையுங்கள்; அதிகாரத்தை உங்களிடம் ஒப்புவித்து விடுகிருேம்" என்று தான் ஒவ்வொரு குடியேற்ற நாட்டு மந்திரியும் உபசார வார்த்தை சொல்லுகிருர். உட்கார்ந்து எழுந்திருப்பதா? படுத்த படுக்கையிலிருந்து திடீரென்று எழும்பி நின்று விடுவதா? அதிகாரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மாற்றுவது சாத்தியம். அதையாவது செய்யுங்களேன் என்று மட்டும் நீங்கள் அதிகப் பிரசங்கித்தனமாகக் கேட்க வேண்டாம்! ராஜாங்கத் துவேஷிகளாகிவிடுவீர்கள்!

கட்டியாளுவோரின் பொருளாதார நிலையானது குடியேற்ற நாடுகளை அவிழ்த்துவிடுவதற்கு இடங் கொடுக்கவில்லை. வயிறு காய்ந்துவிடும்; இயந்திர ஓட்டம் நின்றுவிடும்; ஆடம்பர வாழ்வு மறைந்துவிடும். ஆகவே புதிய சகாப்தம் வரப் போகிறது என்று சொல்லிக்கொண்டே பழைய நிலைமையை ஊர்ஜிதப்படுத்த யுக்திகளைச் செய்து வருகிருர்கள்.

இந்த மனேபாவம் மாறினுலொழிய குடியேற்ற நாடுகளுக்கு விமோசனமில்லை. சுயேச்சைக்குக் குறைந்து எதுவும் இப்போதைய கேவல நிலைமையைப் பரிகரிக்க முடியாது.

அதற்கு மூன்று வழிகளுண்டு.

(1) பிரிட்டிஷார் ஆஸ்திரேலியா, கானடா முதலிய நாடுகளில் கையாண்ட முறையை ஓட்டி படிப்படியாக அதிகாரத்தை மாற்றுவது. இனத்தார் விஷயத்தில் அனுஷ்டித்த இந்தக் கொள்கையை வேறு ஜாதியினர் விஷயத்தில் இதுவரையில் அவர்கள் அனுஷ்டிக்க முன்வரவில்லை. வெள்ளையர் குடியேறியுள்ள இடங்களில் அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுத்ததுடனில்லாது இதர ஜாதியினரை அடக்கியாளவும் சுதந்திரத்தை கொடுத்திருக்கிருர்கள். வெள்ளையருக்குத்தான் தகுதியிருக்கிறது; மற்றவருக்கு இல்லை என்று மறைமுகமாகச் சொல்வதாயிருக்கிறது இது. நிறத்திமிரையும், நிறத்துவேஷத்தையும் விட்டொழிக்க வேண்டும். இந்த வழி நேரானது.

(II) ஸோவியத் ரஷ்யா கையாண்டு வரும் முறை மற்ருென்று. அங்கு குடியேற்ற நாடுகளையும் தாய் நாட்டுடன் இணைத்து விடுகிருர்கள். எல்லோரையும் ஒரு தரத்தில் வைத்து எல்லோருடைய அபிவிருத்திக்கும் பொதுவாகச் சர்க்கார் பணத்தை செலவிடுகிருர்கள். அபிவிருத்தியடையாத பிரதேசங்களில் முதலாளிகள் ஆதிக்கம் ஓங்காமல் தடுப்பதற்கு ரஷ்ய முறை சிறந்த வழியைக் காட்டுகிறது.

(III) குடியேற்ற நாடுகளை சர்வ தேசங்களின் ஆதீனத்துக்கு உட்படுத்துவது மற்ருெரு வழி. அதிலும் சர்வதேச சங்க "மான்டேட்" முறை கூடாது. ஆனுல் இது பல எஜமானர்களை ஏற்படுத்துகிறதே யென்று கேட்கலாம்; வேறு ஆட்சேபங்களையும் சுலபமாகச் சொல்லலாம். ஆனுல் பலரிருக்கும் நிலைமையில் அதிகத் திருவிளையாடல்களுக்கு இடமிராது.

இந்த மூன்றில் ஒன்றைப்பின்பற்ற வேண்டும். அப்படி செய்யாவிடில் இப்போதைய முறையை ஸ்திரப்படுத்துவதேயாகும்.

ஆறு கடக்கும் அமெரிக்கப்படையினர்

அமெரிக்கப் பாரசூட் படையைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு ஆற்றில் இறங்கி விமான நிலையத்துக்குச் செல்கின்றனர்.

யுத்தகால சேவை

ரயில்வே கை காட்டி மரத்தில் பொறுத்துவதற்காக 'ஸிக்னல்' விளக்குடன் 26 வயதுள்ள மிஸஸ் மோலி டெம்பர்லி என்ற ஸ்திரீ ஏணி மீது ஏறுகிருர். இவரது புருஷன் மத்தியக்கிழக்கில் சேவை புரிகிருர். பிரிட்டனில் புருஷர்கள் ராணுவ சேவைக்குச் சென்று விட்டதால் இப்போது 50,000 பிரிட்டிஷ் ஸ்திரீகள் ரயில்வேயில் சேவை புரிகின்றனர்.

மத்தியான ரகளை

சிறு கதை

★

கல்யாணி

“ஐயா, மணி என்ன ஆகிறது” என்றேன். “ஏம்மாமி, இப்பொழுது தான் ஒண்ணு அடிச்சுது. அதுக்குள்ளே காப்பி போடப்போகணுமா?”

“இல்லே, இன்னிக்கு இவா வேறெங்கேயோ போருளாம். காபி சாப்பிட வரமாட்டேன் என்று சொன்னு” என்றேன்.

எனக்கே தனி அதிர்ஷ்டம். இப்படி பேசிக்கொண்டிருக்கும் போது வாசற் கதவு திறக்கும் சப்தமும் பூட்ஸ் நடையும் கேட்டது. எனக்குப் பகீர் என்றது. சொல்லாமல் கொள்ளாமல் இப்படி திடும்திப்பென்று டிபன் சாப்பிட வந்தால் என்ன பண்ணுவது? ‘வரேன்’ என்று கட்டாயமாகச் சொன்ன நாட்களில் வருவதில்லை! வரமாட்டேன் என்று சொன்னுல் அன்று கட்டாயம் வந்துவிடுவார்! இவரை நம்பி ஒரு காரியமும் செய்ய முடிவதில்லை!

மடமட வென்று உள்ளே ஓடினேன். “ருக்கு, கொஞ்சம் தீர்த்தம் கொண்டுவா. யாராவது வந்தாளா? ஊரிலிருந்து கடிதம் வந்ததா? டிபன் பண்ணியாச்சா? அம்மா எங்கே?” என்று கேள்விகளைச் சரமாரியாகப் பொழிந்தார். எதற்குப் பதில் சொல்வது? புதுக் கோட்டையிலிருந்து வந்த கடிதத்தைத் தூக்கி அவரிடம் கொடுத்தேன். “மறுபடியும் உங்களுக்கு எப்போது போக வேண்டும்?” என்று கேட்டேன். “இரண்டு மணி”க்கு என்று சொல்லிவிட்டு கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்தார், ஒரு டம்ளரில் ஜலத்தைக் கொண்டு, அவர் அருகில் வைத்து விட்டு சமயலறைக்குச் சென்றேன்! அடுப்பை மூட்டிவிட்டு டிபன் என்ன பண்ணலாம் என்று கேட்பதற்காக வெளியே வந்தேன். வரும்பொழுது ஒரே கூச்சல்;

“ருக்கு” என்ருர்.

“இதோ வருகிறேன்” என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தேன். “ஷெல்பில் ஒரு கடிதம் வைத்திருந்தேனே! அது எங்கே?” என்ருர்.

“எனக்குத் தெரியாதே! அது என்ன கடிதம்?” என்று கேட்டேன். “என் கோட்டுப் பையில் இருக்கா பாரு” என்ருர். உடனே கோட்டுப் பையில் கைவிட்டேன், ஒரு கடிதம் அகப்பட்டது. அதை அவரிடம் கொடுத்தேன். வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தபடியே ஒரு கையில் அதை வாங்கிக்கொண்டார். “என்ன டிபன் பண்ணுகிறது?” என்றேன். “பஜ்ஜி” என்று பதில் வந்தது. எனக்குக் கொஞ்சம் பயம்தான். எதற்கும் உள்ளே சென்று மற்றவைகளைத் தயார் செய்துகொண்டிருந்தேன்.

திடீரென்று சமயலறைக்கு வந்தார். “கழுதை. இந்தக் கடிதத்தையா உன்னிடம் கேட்டேன்? நேற்று நான் வாடகை கொடுத்த ரசீதைக் கேட்டால் சாமான் ‘லிஸ்டை’க் கொடுக்கிருயே? ரசீது எங்கே? துலைத்து விட்டாயா?

“இல்லை, உங்கள், மணி பர்ஸில் போட்டிருக்கிறேன்” என்று சொன்னேன். அதைப் போய் கொண்டு வரச் சொன்ஞர். அப்படியே கடலைமா வாங்குவதற்கு இரண்டணு எடுத்து வைத்துக் கொண்டேன்.

எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்தவர் ‘காபி போட்டாய் விட்டதா?” என்ருர். “இதோ போடுகிறேன். கொஞ்சம் கடலைமா வாங்கி வருகிறீர்களா” என்று கேட்டேன்.

பார்க்கணுமே அப்பொழுது அவர் முகத்தை! “அசடு, காபி போடு என்ருல் கடலைமா வாங்கி வா என்கிருயே. கடலைமாக் காபி போடப் போகிருயா? பின் எதற்குக் கடலைமா?” என்று கடிந்து விழுந்தார். இப்படி சொல்லிக்கொண்டே சிரிக்கவும் ஆரம்பித்தார்.

“பஜ்ஜி வேண்டும் என்றேளே! காப்பிப் பொடியிலேயா பஜ்ஜி பண்றது? அதற்குத்தான் கடலைமாக் கேட்டேன்.” என்று பதில் சொன்னேன். ஒருதரம் முழித்துப் பார்த்தார். இந்தப் பார்வையைக் கண்டாலே எனக்குச் சற்று பயம்தான். கொஞ்சம் போன பின் அவர் முழி மாறி சிரிக்க ஆரம்பித்தார். “பஜ்ஜி இல்லாவிட்டால் வேண்டாம். வேறு ஏதாவது பண்ணித் தொலை” என்று சொல்லிவிட்டு வாசல் பக்கம் போனுர்.

குமட்டியை விசிற ஆரம்பித்தேன். திடீரென்று வாசலிலிருந்து அவர் குரல் கேட்டது. “ருக்கு” வாழைத்தண்டு வேணுமா, வாங்குகிறேன்.” “என்று கத்தினுர். நான் வெளியில் சென்று “வேண்டாம் நிறைய கறிகாய் இருக்கிறது. நாளைக்கு வாங்கலாம்” என்றேன். “இதை உள்ளேயிருந்து சொல்லக் கூடாதா? ஏன் இங்கு ஓடி வந்தாய்” என்று கேட்டார். அவருக்குப் பதில் சொல்லாமல் உள்ளே சென்றேன். உடனே அவரும் பின்னுலேயே வந்து “அம்மா வருகிருள்” என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் நுழைந்தார். அம்மாவும் வநதார்.

மறுபடியும் சப்தம். “அடியே ருக்குமணி! பெட்டிக்குள் என் சட்டை ஏதாவது இருந்தால் எடுத்துக்கொடு. கோடு போட்ட சட்டை வேண்டாம். வெள்ளைச் சட்டையாக எடு” என்று கூவினுர். அதற்குள் அம்மா “அவன் வந்தால் அவனுக்கு வேண்டியதை எடுத்துக் கொடு. என்னைக் கூப்பிடக் கூடாதோ? எதிராளாத்தில் தானே இருந்தேன்” என்று சொல்லி விசிறியை என்கையிலிருந்து வாங்கிக் கொண்டார்.

அவர் அறையில் நுழைந்ததும் எனக்குக் கோபம் வந்து விட்டது. பெட்டியிலிருந்த துணிகளெல்லாம் கீழே கிடந்தன. எல்லாவற்றையும் காலடியில் தான் அடுக்கி வைத்தேன். “என்ன அவசரம், நான்தான் வருகிறேனே” என்றேன். “சட்டையைக் காணவில்லை. எங்கே? என்ருர். “மேலாகத்தான் வைத்திருந்தேன். இப்படிக் கலைத்தால் ஒன்றுமே அகப்படாது. சற்று இருங்கள். நான் தேடி எடுத்துக் கொடுக்கிறேன்.” என்று கூறி அவர் அருகில் சென்று மெதுவாக ஒவ்வொரு சட்டையாக உள்ளே வைத்தேன். அவர் கேட்ட சட்டையையும் எடுத்துக் கொடுத்தேன். “எங்கேயாவது வைத்துவிட்டு பின் ஏன் இப்படி அவஸ்தைப்படுகிருய்” என்று அவர் சொன்ன வார்த்தையையும் கேட்டுக் கொண்டேன்.

ஐந்து நிமிஷம் ஓய்வு கிடைத்தது. அம்மாவிடம் பஜ்ஜியைப் பற்றிச் சொன்னேன். கொஞ்சம் கடலைப் பருப்பை வெந்நீரில் நனைத்து அரைத்துக் கொடுக்கும்படி சொன்னுர்.

“ருக்கு” என்று மறுபடியும் கூப்பிட்டார்.

“கொஞ்ச நாழியாவது விட்டால் தானே டிபன் ஏதாவது பண்ணமுடியும்? இப்படி ஓயாமல் ‘ருக்கு’ ஜபம் பண்ணிக் கொண்டிருந்தால் என்ன காரியந்தான் நடக்கும்? என்ன வேண்டும்” என்று சலிப்போடு பதில் சொன்னேன்.

“சரி, எனக்கு ஒன்றும் வேண்டாம் போ” என்ருர். “இல்லை சொல்லுங்கள். செய்து விட்டுப் போகிறேன்” என்றேன்.

“சொல்ல முடியாது”

“இதென்ன தொந்தரவு. வாயைத் திறக்கக்கூடாதா?

“எனக்கு தீர்த்தம் வேண்டும்.” “இதற்குத் தானு? வாசலில் நின்று வாழைத் தண்டு வேணுமா என்கிறது! உள்ளே இருந்து தீர்த்தம் என்று கேட்கக் கூடாதோ? இதற்கு என்னைக் கூப்பிட வேண்டுமாக்கும்.” என்று டம்ளரை எடுத்துக் கொண்டு சென்றேன். பின்னுலேயே வந்து அவரே தீர்த்தம் எடுத்து சாப்பிட்டு விட்டு, சமயலறையிலேயே உட்கார்ந்து விட்டார்!

‘சரியாய்ப் போச்சு. இனிமேல் டிபனும் காப்பியும் பண்ணினுல் போல் தான்!’ என்று நினைத்தேன். அப்போது யாரோ கூப்பிட அம்மா வெளியில் சென்றுவிட்டார்.

“ருக்கு” நான் பத்து நிமிஷம் தூங்குகிறேன். சரியாய் இரண்டடிக்கப் பதினைந்து நிமிஷத்திற்கெல்லாம் எழுப்பு” என்று சொல்லி விட்டுத் தன் அறைக்குச் சென்ருர். தலையணையைக் கீழே போடும் சப்தம் கேட்டது. “அப்பாடா” என்று ‘டிகாக்ஷனை’ ஓரமாக வைத்துவிட்டு கடலைமா அறைக்கச் சென்றேன். கல்லோரலடியில் உட்கார்ந்தது தான் தாமதம். “ருக்கு என்று கூப்பிட்டார்,” நான் பதில் சொல்லவில்லை. மறுபடியும் உரத்த குரலில் “ருக்மணி” என்ருர். அதற்கும் நான் பதில் சொல்லவில்லை. அடுத்த நிமிஷம் அவரே வெளியில் வந்து விட்டார். “என்ன” என்றேன். அம்மாவும் வந்தார். “ஏண்டி, அவன் கூப்பிடும் போது பதில் சொல்வதற்கென்ன? பேசாமல் உட்கார்ந்து கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? என்று கோபித்துக் கொண்டார். விதியே என்று எழுந்திருந்தேன். “என்ன வேண்டும்?” என்று கேட்டேன்.

(அடுத்த பக்கம்)



குண்டலகேசி

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

—நந்தையையும் எதிர் நோக்காதயான், அவரைப் பார்த்தேன்; என் உள்ளத்தையும் பறிகொடுத்தேன். கற்புக்குக் காவலாகிய நிறை, அவர் நோக்கத்தால் நிலை தளர்ந்து கெட்டது. அவரது, அழகுத் தோற்றம் என் உள்ளத்தை விட்டு அகலவில்லை. அது ஏனே?”

“பத்திரை, நீ கூறுவது உண்மையே; அதைத் தவருக நான் எண்ணவில்லை. உன் போன்ருேர் இவ்வாறு எண்ணுவதும் இயற்கையே. ஆடவர், மகளிர் மனத்தில் எளிதில் புகுவர். அதனுல், அவரை முழுவதும் நம்ப முடியுமா?”

பிரிக்க முடியுமா?

“நீ கூறுவது பொருந்தாது, என் உள்ளம்போல் அவர் உள்ளமும் வருந்தாது என்று எவ்வாறு கூற முடியும்? ஊழ்வினையை யாரால் உணர முடியும்? ‘கற்புடைய மகளிர் உள்ளம். ஆடவர் உள்ளத்தில், அவர் விரும்பாத நிலையில் புகாது. இருவருள்ளமும் ஒருங்கே, கலக்கும் இருவருள்ளமும் ஒருங்கே கலத்தல், அப் பிறவியில் மட்டும் அல்ல, தொடர்ந்து பிறவி தோறும் அவர் உள்ளம் ஒன்றுபட்டே இருக்கும் என்பது அறிஞர் கொள்கை. செம்மண் நிலத்தில் பெய்த மழை நீரைப் போல் அன்புடைய நெஞ்சம் தாமாகவே கலந்தால் பிரிக்க முடியுமா? அத்தகைய கற்புடையவர் வாழும் இந்நகரில் பிறந்த யான், நன்னெறியிலிருந்து வழுவேன்”

“பத்திரை, நீ கூறுவதெல்லாம் உண்மையே. அவரைப் பற்றி இன்னும் நன்ருக, உணர்ந்து கொள்ளும் வரையில், மன உறுதியை இழக்கலாகாது. புத்த தேவன் அருளால், எல்லாம் நன்மையாகவே முடியும் என்றே நம்புகிறேன்.”

“அவர் தோற்றத்திலேயே, உயர் குலத்து உதித்தவர் என்பது புலப்படுகிறது. எல்லாம் ஊழ்வினையைப் பொறுத்தது.”

“யான், உனக்கு ஏவல் செய்யும் தோழிதான். ஆனுலும் இளமையிலேயே தாயை இழந்த உனக்குத் தாய் போன்று சில வார்த்தைகளைக் கூறினேன்; அதைப் பொறுத்துக் கொள். உன்னுடைய அழகு, அறிவு, செல்வம் முதலியவற்றிற்கு ஏற்ற கணவன் வாய்க்க வேண்டும் என்றே போதி நாதனை நாள்தோறும் வேண்டுகிறேன்.

வசந்தி கூறிய வார்த்தைகளை அவள், முழுவதும் கேட்கவில்லை. எங்கேயோ உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். வாடியிருந்த அவள் முகம், பொலிவுடன் காணப்பட்டது. “வசந்தி, அதோ, பார்; அவர் தான் நிற்கிருர்” என்று தோழியின் காதில் மெள்ளக் கூறினுள்.

“ஆம். குதிரைக்கு அருகில் நின்று கொண்டிருக்கிருர்” என்று வசந்தி கூறினுள் யுவகனைப் பார்த்து. பத்திரை பரபரப்புற்ருள். அருகில் சென்று பேசி விடலாமா? என்று கூட நினைத்தாள். யுவகன், தன்னை நோக்குவதையும் உணர்ந்து உவகை” கொண்டாள்.

வழி பார்த்த விழிகள் பூத்தன

யுவகன் பத்திரையைப் பார்ப்பதற்கே அங்கு வந்தான். அவன் நோக்கம் முழுவதும் பத்திரையின் மேனி யழகில் ஈடுபட்டிருந்தது. ஜனங்களின் கூட்டத்தில் அவனை ஒருவரும் உற்றுக் கவனிக்க வில்லை. ‘மும்முடி நாய்கன், மகள் தான் இவள் இன்று வரையில் இவளை யான் பார்த்ததில்லை. இவளோடு நான் எவ்வாறு பேசுவது? இவள் என்னை மருண்டு, மருண்டு பார்ப்பதிலிருந்து, இவளது உள்ளக் கிடக்கையை யான் உணர்ந்தேன். எத்தனையோ அழகுள்ள மகளிரை, இந் நகரில் யான் பார்த்திருக்கிறேன்; இன்னும் பார்க்கிறேன். ஆனுல், என் மனத்தை இவள் கவர்ந்ததுபோல் எவரும் கவர வில்லை. மேன் மேல் வளர்கின்ற வேட்கையை என்உள்ளத்தில்உண்டாக்கியது இந் நங்கையின் வசீகரத்தோற்றமே; இவள் அருகில் இருக்கும் யுவதியை எங்கோ பன்முறை பார்த்திருக்கிறேன். எவ்வாறேனும் இவளை யான் அடைவேன் என்று எண்ணமிட்டான். யுவகனின் உள்ளம், பத்திரையோடு பேச முற்பட்டது. மானம் என்னும் திரை அதைத்தடைசெய்தது. சிறிது ஏங்கி நின்ருன். பத்திரை, வசந்தியுடன் பேசுவதும், யுவகனைப் பார்ப்பதுமாக உட்கார்ந்திருந்தாள். மாலைக் காலத்தில் மலர்ந்த காதல் நோய் பத்திரையின் உள்ளத்தையும் யுவகனுள்ளத்தையும் வருத்தியது. யுவகன் அதிக நேரம் அங்கு நிற்கவில்லை. மன உறுதியோடு குதிரையின் மீது தாவி உட்கார்ந்தான். பத்திரையின் உள்ளம் ஏங்கியது. குதிரையைப் பத்திரையிருக்கும் இடத்தை நோக்கிச் செலுத்தினுன். அப்போது பத்திரை சரேலென எழுந்து நின்ருள். கண் இமைப்பதற்கு முன், குதிரை மிகவேகமாக வந்தது. பத்திரையிருந்த இடத்தைத் தாண்டி, அவளுடைய கூடாரத்தையும் சுற்றிக்கொண்டு சென்றது யுவகன், பத்திரை இருந்த இடத்தை அணுகியபோது அவளைப்பார்த்தான். அவளும் பார்த்தாள். அப்புறம் அவள் திரும்பிப் பார்க்கவில்லை. சிறிது நேரத்தில் குதிரை மறைந்துவிட்டது. அந்த ஜனக்கூட்டத்தில் அவ்வளவு வேகமாகச் சென்றுவிட்டது யுவகனின், குதிரை. பத்திரையின் கண்கள் பூத்துப்போயின. யுவகன் சென்ற திசையை அவ்வாறு நோக்கினுள்.

“பத்திரை, நன்ருகப்பொழுது போய் விட்டது. இருள் பரவி விட்டது; மாளிகைக்குச் செல்வோம்” என்ருள் வசந்தி.

விதியை யார் வெல்லுவர்?

“வா, போவோம்” என்று கூறி விட்டுக் கலக்கமுடன் கூடாரத்திற்குள் புகுந்தாள் பத்திரை. கூடாரத்தைக் கலைக்கும்படி யவன வீரர்களிடம் கூறினுள் தோழி. யவன வீரர்கள் கூடாரத்தைக் கலைத்துக் கழிகளையும், திரையையும் சிவிகையில் வைத்தனர். பத்திரையும் வசந்தியும் சிவிகையில் உட்கார்ந்து கொண்டு மூடு திரையைப் போட்டனர். மல்லர்கள் சிவிகையைத் தாங்கிச் சென்றனர். நகர் முழுவதும் தீபாலங்காரத்தால் பொலிவுடன் விளங்கியது.

யுவகனை மீண்டும் எப்போது காண்போம் என்று ஏங்கினுள். எனினும் ‘அவரைக் காணச் செய்து காதல் மூட்டிய தெய்வம் மீண்டும் அவரைத் தரும் என்று தானகவே ஆறுதல் அடைந்தாள் அவள். பத்திரைக்கு எதிர்பாராது ஏற்பட்ட சம்பவத்தையும், அவள் உள்ளக்கிளர்ச்சியையும் வசந்தி நன்கு உணர்ந்தாள். யுவகனைக்கண்டது முதல் அவளுக்கு மட்டும் நல்லெண்ணம் உதிக்கவில்லை. அவனைப் பற்றிப்பலவாறு சிந்தனை செய்தாள் அவள். எவ்வளவோ முயன்றும் பத்திரையின் மனம் மாருததை குறித்து வசந்தி வருந்தினுள். அவள் வருந்தி என் செய்வது? விதியை வெல்ல யாரால் முடியும்?

(முன் பக்கத்தொடர்ச்சி)

“ஆவணி அவிட்டத்திற்கு முந்தி உனக்கு ஒரு கடிதம் எழுதினேனே, அதைக் கொஞ்சம் கொடு, ஒரு விஷயம் பார்க்க வேண்டும்” என்ருர். “ஏன் இப்படி தொந்திரவு படுத்துகிறீர்கள். என் பிராணன் போகிறது. அந்தக் கடிதத்தை இப்பொழுது எடுக்க முடியுமா? எல்லாக் கடிதங்களையும் ஒரு மூட்டையாகக் கட்டி வைத்திருக்கிறேன். ராத்திரி தேடித் தருகிறேன். கொஞ்ச நாழி படுத்துக் கொள்ளுங்கள்” என்றேன்.

திருப்தியடைந்தவர் போல் அவர் படுத்தார். நான் சென்று மறுபடியும் மா அரைக்க உட்கார்ந்தேன். ஒரு நிமிஷம் தான் சென்றது.

“உன் பெட்டிச் சாவியை இப்படிக் கொடு.” என்று என் அருகில் வந்து நின்ருர். கழுத்துச் சங்கிலியில் இருந்து சாவியைக் கழற்றிக் கொடுத்தேன். “நீ எடுத்துக் கொடுக்கக் கூடாதாக்கும்.” என்று சொல்லிக் கொண்டே சாவிசகிதம் அறைக்குச் சென்ருர்.

அவர் ‘நீ வந்து எடுத்துக் கொடுக்கக் கூடாதாக்கும்’ என்றது, அம்மாவின் காதில் விழுந்தது.

“ருக்மணி, நீ போடி! அவனுக்கு வேண்டியதை எடுத்துக் கொடு. நான் அரைத்துக் கொள்கிறேன்” என்று சொல்லி என்னை விரட்டி விட்டார்.

உள்ளே சென்றேன். என் பெட்டிக்குப் பிடித்தது சனியன்! புடவைகள் எல்லாம் நாலு பக்கமும் கிடந்தன. கடிதங்கள் எல்லாம் சிதறிப் பறந்தன. நடுவில் உட்கார்ந்து என் படத்தை வைத்துக் கொண்டு, அதைப் பார்த்துக்கொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும் சிரித்தார். இவரிடம் என்ன சொல்வது? நான் வாயைத் திறக்கவில்லை. அழுவதா? சிரிப்பதா? பேசாமல் எல்லாவற்றையும் மறுபடியும் உள்ளே எடுத்து அடைத்தேன்.

அறைத்ததும் அறைக்காததுமாகக் கொஞ்சம் பஜ்ஜி பண்ணினேம். இவர் வரமாட்டார் என்று சொன்னதால் பாலும் கொஞ்சமாகத் தான் எடுத்து வைத்திருந்தேன்.

“ருக்கு, எனக்கு நாழியாகி விட்டது. ஏதாவது கொடுப்பதானல் கொடு, இல்லாவிட்டால் ஐந்து மணிக்கு வந்து சாப்பிடுகிறேன்” என்று கத்தினுர்.

“இல்லேடா, அப்பா, இதோ எல்லாம் ஆயிடுத்து, கொண்டு வருகிறேன். கொஞ்சம் இரு” என்று அம்மா பதில் சொன்னுர்.

“அம்மா நீ ஏண்டி கஷ்டப் படுகிருய்? எல்லாம் ருக்குவைச் செய்யச் சொல்லு. அவள் பண்ணினது போதும். நீ பேசாமல் படுத்துக்கொண்டிரு உனக்குத் தள்ளாத வயசு” என்ருர்.

இதற்குள் வாசலில் ஒரு குரல் கேட்டது. என் கணவர் “யார், ராமஸாமியா! வா,! நல்ல வேளைக்கு வந்தாய்! உட்கார். இதோ நானும் வந்து விட்டேன். ருக்கு எங்க இரண்டு பேருக்கும் இங்கேயே டிபனும் காப்பியும் கொண்டுவா” என்று உத்தரவு போட்டார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இப்படியா நம்மை அவமானப்படுத்த வேண்டும்? கிருஷ்ணு! என்று இரண்டு தட்டில் பஜ்ஜியையும், கலந்த காப்பியில் கொஞ்சம் வெந்நீரையும், சர்க்கரையும் போட்டு அதையும் இரண்டு டம்ளரில் கொண்டு வைத்தேன்.

இருவரும் சாப்பிட்டுக்கொண்டே இருந்தனர். எனக்குப் புகழ் மாலை கிடைத்தது. “இல்லை, ராமஸ்வாமி ‘மதரு’க்கு உடம்பு சரியாயில்லை. என் மனைவிதான் எல்லாம் செய்தாள், அதுதான் சுமாராயிருக்கிறது” என்ருர் என் கணவர்.

“ஏண்டா அப்படிச் சொல்கிருய்? எல்லாம் நன்ருக இருக்கிறதடா. ‘பலேபேஷ்டா’ என்ருர் அவரது நண்பர். எனக்கு நடுக்கம் தீரவில்லை. “ருக்கு, இன்னும் கொஞ்சம் பஜ்ஜி” என்ருல் என் கதி அதோ கதிதான்! நல்ல வேளை கடவுள் காப்பாற்றினுர். சில நிமிஷங்களில் அவரும் ஆபீஸுக்குச் சென்ருர்.

நான் அவர் ரூமிற்குள் நுழைந்தேன். ‘வெரிச்’ என்றிருந்தது. வீட்டிலேயே சோபையில்லை. தனியாக எங்கேயோ காட்டில் விட்டதுபோலிருந்தது. மறுபடியும் எப்போது அவர் குரலைக் கேட்கப் போகிரேம் அவரைப் பார்க்கப் போகிரேம் என்று ஏங்கினேன்.

தாமரைப் பெண்

சுதர்சன் எழுதியது

இரவு நேரம். சந்திரிகை தன் இனிய கிரணங்களால் உலகை இன்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது. ஸ்ரீ கிருஷ்ண பகவான் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுக்கொண்டு "என் யோசனை கலைந்துவிட்டது" என்று கூறி மனதிற்குள் சிந்திக்கலானார்.

உலகில் சிரேஷ்டமான வஸ்து மனிதனல்ல. இதோ காற்றோடு விளையாடும் இந்தத் தாமரைப் பூவை விட மனதைக் கவரும் வஸ்து வேறொன்று இருக்கிறதா? ஆஹா! இதன் இதழ்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன! இதன் நிறம் கண்களுக்கு எவ்வளவு இனிமையாக இருக்கிறது. சௌந்தர்யத்தின் கடைவீதியில், உலகில் சிறந்த ரூபவதிகளையும் இந்த ஜீவனற்ற மலர் ஜயித்து விடும். உலகத்திலுள்ள சகல சௌந்தர்யங்களையும் ஒருங்கே திரட்டினாலும் கூட இதன் முன் அவை நிற்க முடியாது. இதைப்போலவே நான் ஓர் பெண்ணை உண்டாக்க விரும்புகிறேன். புஷ்பங்களில் தாமரை இருப்பது போல் மனிதர்களுள் அவள் இருப்பாள். உலகின் இருள் அவளால் பிரகாசமடையும். அதன் முன் சங்கீதமும் தலை வணங்கும்,

இவ்விதம் யோசித்து விட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு சட்டென்று தமது கையை உயர்த்தி "உயிரற்ற ஏ தாமரை மலரே, நீ உயிருள்ள அழகிய பெண்ணாகக் கடவாய்!" என்று கூறினார்.

ஜலத்தின் அலைகள் கரைகளில் சென்று மோதின. இரவு இன்னும் இனிமை கொண்டது. சந்திரிகையின் ஒளி அதிகரித்தது. குளத்தின் ஜலம் முத்துப்போல் தெளிந்தது. தூங்கிக் கொண்டிருந்த பக்ஷிகள் தங்கள் முழுக்குரலையும் கொண்டு பாடிவிட்டு மறுபடியும் மௌனமாயின. தாமரை மலர் தண்ணீருக்குள் மூழ்கியது. தாமரை இதழ் போன்ற துல்லியமான ஆடை அணிந்து அழகிய பெண்ணொருத்தி வெளியே வந்தது.

ஸ்ரீ கிருஷ்ணனின் உள்ளம் உவகையால் நிரம்பியது. அவர் தாமரைப் பெண்ணைப் பார்த்து நடுங்கும் குரலில் "நீ முன்பு உயிரற்ற தாமரைப் பூவாக இருந்தாய். இப்பொழுது தாமரை மலரிலிருந்து வந்த கமல குமாரியாகி விட்டாய். என்னுடன் பேசு!" என்றார்.

கமல குமாரி தலை குனிந்து கொண்டு பேச ஆரம்பித்தாள், காற்றில் ஸுகந்தம் பரவியது. "பிரபு! உங்கள் கட்டளையினால் நான் உற்பத்தியானேன். உங்கள் உத்தரவைப் பூர்த்தி செய்கிறேன். தயை கூர்ந்து சொல்லுங்கள் நான் எங்கே வாஸம் செய்ய வேண்டும்?" என்று கேட்டாள்.

ஸ்ரீ கிருஷ்ணன் சந்திரனைக் கண்கொட்டாமல் பார்த்தார். பிறகு "இந்தப் புஷ்பச் சோலையில்!" என்றார்.

"அங்கே காற்று புஷ்பங்களில் மோதி யடிக்கிறது!" என்றாள் கமல குமாரி,

"மலைச் சிகரங்களில் வசிக்க உனக்கு விருப்பமா?"

"அங்கே பனி அதிகம், குளிரால் என் உள்ளம் நடுங்கும்!"

"சரி, அப்படியானால் சமுத்திர ஜலத்தில் வசி, அங்கே மெழுகினால் உனக்கு மாளிகை அமைக்கிறேன்!"

"ஆனால் அங்கே ஆழம் அதிகமாயிற்றே?"

ஸ்ரீ கிருஷ்ணன் புன்னகையுடன் "பின்னே உன்னை எங்கே வைப்பது? ஹிமாலயத்தின் குகைகளிலா?" என்றார்.

தாமரைப்பெண் அங்கமெலாம் நடுங்க. "அங்கே இருள் அதிகமாயிற்றே!" என்றாள்.

"சரி, ஜனசஞ்சாரமற்ற வனத்தில் இருக்கிறாயா?"

"அங்கே தனிமையாயிற்றே?"

ஸ்ரீ கிருஷ்ணன் தலையைத் தடவிக்கொண்டார். அவர் மனம் குழம்பியது. அவர் தன் குழலை எடுத்து ஊதலானார்.

2

இரவு கழிந்தது. சூரியனின் கிரணங்கள் ஜலத்தின் மேல் நடனமிட்டன. மரத்திலுள்ள பறவைகள் தூக்கத்திலிருந்து விழித்தன. இயற்கை ஒரு புத்துயிர்கொண்டு திகழ்ந்தது.

"இவன் கவி!" என்றார் ஸ்ரீ கிருஷ்ணன்.

குளத்தின் ஜலத்தில் ஒரு நீண்ட நிழல் தென்பட்டது. காற்றில் வீணை ஒலிகேட்டது. பசும்புல்லின் மேல் யாரோ நடந்து வருவதைப்போல் தோன்றியது, சிறிது தூரத்தில் ஒரு வாலிபன் கையில் வீணை ஏந்தி வந்துகொண்டிருந்தான். ஸ்ரீ கிருஷ்ணன் அவனைப் பார்த்து மறுபடியும் "இவன் கவி" என்றார்.

கவி சமீபத்தில் வந்தான். தாமரைப் பெண்ணைப் பார்த்தான். அவன் கையினின்றும் வீணை நழுவியது. கால்கள் தள்ளாடின—அவைகளில் விலங்கு பூட்டப்பட்டதைப்போல. கிருஷ்ணன் தாமரை மலரை உயிருள்ள பெண்ணாகச் செய்தார். அந்தப் பெண்ணின் ஒப்புயர்வற்ற அழகு கவியை ஆச்சரியத்தில் ஆழ்த்தி மூர்ச்சையடையச் செய்து விட்டது.

"கவி. என்ன சேதி?" என்றார் ஸ்ரீ கிருஷ்ணன்.

கவி திடுக்கிட்டு வீணையை எடுத்துக்கொண்டு தலை குனிந்தபடி "நான் காதலிக்கிறேன். காதல் கீதத்தை இசைக்கிறேன். காதல் சங்கீதத்தைப் பாடுகிறேன். என் வாழ்க்கையில் ஒவ்வொரு அணுவையும் பிரேமைக்காக அர்ப்பணம் செய்து விட்டேன்!" என்று சொல்லிக் கொண்டே கவி தாமரைப் பெண்ணை ஆர்வத்துடன் நோக்கினான்.

ஸ்ரீ கிருஷ்ணன் எழுந்திருந்தார். "ஸுந்தரி, உனக்கு இடம் கிடைத்து விட்டது!" என்றார்.

"எங்கே?" என்றாள் கமல குமாரி.

"கவியின் உள்ளத்தில்!"

கவியின் ஹிருதயம் துடித்தது. அவன் தலை குனிந்து கொண்டான். அவன் வீணையின் நரம்புகளிலிருந்து ஒலி எழுந்தது, கமலகுமாரி கவியருகே வந்தவள் சட்டென்று பின்னடைந்தாள். அவளுடைய முகம் பனிபோல் வெளுத்தது.

ஸ்ரீ கிருஷ்ணன் ஆச்சரியத்துடன் "இங்குமா நீ பயப்படுகிறாய்?" என்றார்.

தாமரைப் பெண்ணின் கண்களில் கண்ணீர்ப் பெருகியது. அவள் தழுதழுத்துப் போய் "பிரபு! நீங்கள் எனக்காகத் தேர்ந்தெடுத்த இடம், வானத்தை முட்டும் மலைச்சிகரத்தை விட உயரமானது, அலை மிகுந்த கடலைக் காட்டிலும் ஆழமுள்ளது; சூனியமான வனத்தின் அமைதி, ஹிமாலயத்தின் குகைகள் யாவும் இங்கே இருக்கின்றன" என்றாள்.

"பயப்பட வேண்டாம்! சுந்தரி! உனக்கு ஆசனம் கவியின் உள்ளம் தான். அங்கே பனி இருந்தால் நீ சூரியனாகி அதை உருகச்செய். அங்கே சமுத்திரத்தின் ஆழம் இருந்தால் நீ நல் முத்தாகி அதை ஜ்வலிக்கச்செய். அங்கே தனிமை இருந்தால், நீ மதுர சங்கீதத்தை எழுப்பு, மௌனம் குலைந்து போகும், அங்கே இருள் இருந்தால் நீ தீபமாக ஒளி உண்டாக்கு. இருள் அகன்றுவிடும்?" என்றார்.

தாமரைப் பெண்ணால் இதை மறுக்க முடியவில்லை. அவள் கவியின் உள்ளத்தில் வாசம் செய்யலானாள்.

"ஜயம்"
மொழிபெயர்ப்பு

சீவக சிந்தாமணி

(முன் பக்கத்தொடர்ச்சி)

மொழியையும் சீவகன் முடிவு செய்ததையும் கேட்ட சுரமஞ்சரி தீயைப்போல் கொதித்தெழுந்தாள். அவளுடைய புருவங்கள் ஏறிட்டு வளைந்தன. சீவகனோடு போர் செய்யப் புறப்படுவது போல் அவள் தனங்கள் பெருமியெழுந்தன.

"குணமாலை! உன்னைக் காதலித்து என் வாசனைப்பொடியை இகழ்ந்த சீவகன், என்னை விரும்பி என் காலைத்தொழும்படி செய்வேன்" என்று வஞ்சினங் கூறிப் புனலாடாமல் கோபித்துக் கன்னிமாடம் புகுந்தாள்.

சுரமஞ்சரி கோபித்துச் சென்றமையால், குணமாலையும் புனலாடாது தன் மாளிகை சென்று கன்னிமாடத்தே வருந்தியிருந்து "கடும் நட்புப் பகை காட்டும்" என்ற பழமொழி சுரமஞ்சரி விஷயத்தில் உண்மையாயிற்றே. அருக தேவா! இப்பகையைத் தீர்த்து முன்பு போல் அவளுக்கும் எனக்கும் நட்பை உண்டாக்க வேண்டும்" என்று அருகனை வணங்கினாள்.

சீவகன் மீது கொண்ட கோபத்தால், 'ஆடவரைக் கண்டாலும் அவர்கள் பெயரைக் கேட்டாலும் உணவுண்ணேன்' என்று சபதம் செய்து கன்னி மாடத்தே நோன்பு பூண்டிருந்தாள் சுரமஞ்சரி. சுரமஞ்சரிக்கும் குணமாலைக்கும் நிகழ்ந்த பகையை கனகபதாகை மூலமாக அறிந்தாள் சுரமஞ்சரியின் தாயான சுமதி. குணமாலைக்கும் சுரமஞ்சரிக்கும் உண்டாகிய பகையையும், சுரமஞ்சரியின் கொடிய விரதத்தையும் சுமதி, தன் கணவன் குபேரதத்தனிடம் கூறி வருந்தினாள்.

குபேர தத்தன் சுரமஞ்சரிக்காக, அரசனிடம் சென்று பொருள் கொடுத்து அனுமதி பெற்றுச் சுரமஞ்சரி இருந்த வீதி முழுவதும் ஆடவரில்லாமலும் அவர்கள் பேச்சுக் கேட்காமலும் செய்து விட்டான். சுரமஞ்சரியின் விருப்பப்படி வீதிகளிலும் வீடுகளிலுமுள்ள ஆண் பிரதிமைகளைக் கூட அழித்துப் பெண் பிரதிமைகளாகச் செய்வித்தான். சீவகன் தன்னை விரும்பும் பொருட்டு விரதம் பூண்டிருந்தாள் சுரமஞ்சரி.

அடுத்த வாரம் :

பெண் உயிர் காத்த
பெரும் வீரம்

தூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

பரிசம் (பெண் விலை)

(தி. நா. சுப்பிரமணியன்)

கிராமங்களிலே நாட்டு மக்களிடையே வாய்மொழியாகவே வழங்கிவரும் நாடோடிப் பாடல்களைச் சேகரித்து அவை அழிந்து போகாமல் காப்பாற்ற வேண்டும் என்ற கிளர்ச்சி சிறிதுகாலமாக நடந்து வருகிறது. உலகத்தே வாழும் பலவேறு சமூகங்களைச் சேர்ந்த எல்லா மக்களிடையிலும் இந்த இயக்கம் தோன்றியிருக்கிறது. பிற பிரதேசங்களில் அவற்றைச் சேகரித்து ஆராய்ந்து வெளியிடுவதில் ஓர் அளவு வெற்றியும் அடைந்திருக்கிறார்கள்.

ஒருவகையாரிடையே வழங்கி வரும் இத்தகைய பாடல்களை ஆராய்ந்தால் அவர்களுடைய சமூக வாழ்க்கை கலையபிவிருத்தி முதலியவற்றை அறியலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுவர். எவ்வகையாலும் அந்தப்பாடல்களை நாம் நன்றாக அறிந்துகொண்டு ரஸிக்க வேண்டுமானால் அவை எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் யாரால் பாடப்படுகின்றன என்பதையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

உதாரணமாக:—

நம்மவர்களிடையே இப்போது வரதக்ஷிணை கொடுக்கும் பழக்கம் அதிகமாக இருக்கிறது. அது சமீப காலத்திலே ஏற்பட்டது. முன்னாளிலோ பெண்களுக்கே பணம் கொடுப்பது மரபு. கன்யா சுல்கத்தைப்பற்றி வேத நூல்களிலும் காணப்படுகின்றது, பண்டைத் தமிழ் நூல்களிலும் இது குறிக்கப்பட்டுள்ளது. இன்றைக்கும் உலகத்தே பெரும்பாலாரிடையில் வழக்கில் உள்ளது கன்யா சுல்கமே,

மத்திய இந்தியாவிலேமுண்டர்கள், கோண்டுகள், ஓரான்கள், பைகர்கள், என்று பல வகையான பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் பழந்தமிழ்க் குடிகளின் வழி வந்தவர்கள் என்றே ஆராய்ச்சியாளர் கருதுவர். அவர்களிடையே பெண்ணுக்குப் பரிசமாகப் பிள்ளை வீட்டார் சாதாரணமாக இருபத்தைந்து ரூபாய் கொடுக்க வேண்டும், அதிகம் கொடுப்பாரும் உண்டு. அது நிச்சயமாகி விட்டால் மணம் முடிந்தது போலத்தான், அதை அவர்கள் பேசி முடிப்பது ஒரு நாடகம் போல நிகழும். நேரடியாகப் பெண்ணைக் கேட்காமல் மறைபொருளாகப் பேசுவார்கள்.

'கோதூளி வேளை' என்று சொல்லப்படும் ஸந்தியாகாலம் பெண் வீட்டாருடைய ஸம்மதத்தை முன்னதாகவே பெற்றுக் கொண்ட பிள்ளை வீட்டார் நிச்சயதார்த்தம் செய்வதற்காக புறப்பட்டு வருகிறார்கள். கன்னிப் பெண் குளத்திலிருந்து தண்ணீர் தூக்கிக்கொண்டு வீடுவந்து சேருகிறாள். அவளைத் தொடர்ந்தே பிள்ளை வீட்டாரும் நுழைகிறார்கள்.

பிள்ளை வீட்டார்:—

மகளே மகளே
தண்ணி கொடு
மகளே மகளே
தண்ணி கொடு
காதவழி நடந்து
வந்தேன்
காதடைக்குது
நாவறட்டுது (மக)

பெண்:—

தண்ணி தரக்
கிண்ணியில்லை
தாகந் தீர்க்கப்
பாத்ரமில்லை
ஊற்றுக்குப் போய்த்
தண்ணி குடி
ஓடைக்குப் போய்த்
தண்ணி குடி

(அவர்களுக்குள் மணப்பெண் தண்ணீர் கொணர்ந்து கொடுக்கப் பிள்ளை வீட்டார் அதை வாங்கிக் குடிப்பதே நிச்சயதார்த்தம்.)

பிள்ளை வீட்டார்:—

காதவழி நடந்து வந்தேன்
நாவறட்டுது மகளே
கதவை ஏன் நீ மூடிக்கொண் [டாய்
திரையைப் போட்டு [விட்டாய்

பெண் வீட்டார்:—ஏ, குட்டி! என்ன அங்கே?

பெண்:—

போன தடவை
நடந்ததெல்லாம்
நினைத்துப் பார்த்தேன்
அப்பா
பொட்டெனவே
கதவை மூடித்
திரையும் போட்டு
விட்டேன்.

பெண் வீட்டார்:- [வெளியே வந்து திண்ணையில் உட்கார்ந்து] யார் நீங்கள்? சந்தி வேளையிலே வந்து தண்ணீர் கேட்கிறது?

பிள்ளை வீட்டார்:—நாங்கள் வழிப் போக்கர்கள்; தொலை தூரத்திலிருந்து வருகிறோம்.

பெ. வீ:—ஓஹோ!

பி. வீ:—ரொம்பக் களைப்பாயிருந்தது. இந்த ஊரிலே கொஞ்சம் தங்கிவிட்டுப் போகலாம் என்று நின்றுவிட்டோம்.

பெ. வீ:—எங்கே போகவேண்டுமோ?

பி. வீ:—இல்லை, பக்கத்திலே தான்......பசி காதை அடைக்கிறது.

பெ.வீ:—நாங்களும் அப்படித்தான் இருக்கிறோம். இரவுச் சாப்பாட்டுக்கே என்ன பண்ணுவது என்று யோசனை செய்கிறோம்.

பி. வீ:—எங்களிடம் அரிசி, உப்பு எல்லாம் இருக்கின்றன. தொட்டுக்கொள்ளத்தான் ஒன்றும் இல்லை. ஏதேனும் கறிகாய் கிடைக்குமாவென்று பார்த்தோம். இந்த வீட்டிலே சுரைக்காய் இருக்கிறது என்று கேள்விப்பட்டு வந்தோம்.

பெ. வீ:—என்ன, சுரைக்காயா? யார் சொன்னது?

பி. வீ:—ஏதோ ஒன்று கொடுத்தீர்களானால் ரொம்பப் புண்ணியம்,

பெ. வீ:—எங்கள் வீட்டிலே சுரைக்காயுமில்லை, பீர்க்கங்காயுமில்லை. எங்களிடம் சுரைக்காய் இருக்கிறதென்று யார் ஐயா சொன்னார்கள்?

பி. வீ:—இல்லை அண்ணே! கோபித்துக்கொள்ளாதீர்கள் நாங்கள் ஏழைகள்; பசியோடு இருக்கிறோம்

பெ வீ:—பின்னே என்ன? இல்லாததைக் கொண்டா என்றால்?

பி. வீ:—இங்கே இருக்கிறதே. நாங்கள் வரும் போது கூரையிலே பார்த்து விட்டுத்தான் வந்தோம்.

பெ. வீ:—அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் எதையோ பார்த்து விட்டு இப்படிப் பேசுகிறீர்கள். வேண்டுமானால் தொட்டுக்கொள்ளக் கறி ஏதேனும் கொடுக்கச் சொல்லுகிறோம்.

பி. வீ:—அது ஒன்றும் வேண்டாம். சுரைக்காயிலே எங்கள் மனத்துக்குப்பிடித்ததாக ஒன்று இருக்கிறது. அதைக் கொடுக்கத்தான் வேண்டும்.

பெ. வீ:—என்ன நீங்கள் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறீர்கள். இங்கே சுரைக்காய் இருக்கிறது நிஜம்தான். மழைக்கு முன்னே விதை நட்டோம். கொடி இப்போது நன்றாகவளர்ந்து காய்க்க ஆரம்பித்திருக்கிறது. ஆனால் எல்லாக் காய்களும் ஒரே கொடியில் காய்த்திருக்கின்றன. ஒன்றையும் பறிக்க முடியாதே.

பி. வீ:—கொடியைக் கலைக்காமல் பறித்து விடலாம்.

பெ-வீ:—எங்கே இருக்கிறது, நீங்கள் பார்த்தீர்களா? பார்வைக்கு எப்படித் தோன்றுகிறது.

பி-வீ:—அதோ கூரையிலே அந்த மூலையில் இருக்கிறதே அதுதான். வெளியிலே யிருந்து பார்த்தாலே தெரியும்.

பெ-வீ:—அது என்னவோ கூரைமேலே சுரைக்காய் இருப்பது நிஜம்தான். ஆனால் நாங்கள் இன்னம் அதைப் பார்க்கவில்லை, எப்படியும் நீங்கள் சொல்வது போல ஒன்று இருக்கிறதாகத் தெரியவில்லையே.

பி வீ:—அப்பழுக்கு இல்லாதே நல்ல வளர்த்தியாகவும் பார்வைக்கு லக்ஷணமாகவும் இருக்கிறது அது.

பெ-வீ:—ஓஹோ. அதோ பெரியதாக இருக்கிறதே அதுவா? கறிக்கு நல்லதாக இருக்கும்; அதுதானே வேண்டும்?

பி-வீ:—இல்லை, இல்லை, எங்களுக்கு அந்தப் பெரியது வேண்டாம். அது கறியைக் கெடுத்து விடும். நடுத்தரமாக இருக்கிறது தான் வேண்டும்.

பெ-வீ:— [இழுத்தாற்போல] அடடா, அதுவா...அதை நாங்கள் கொடுக்க முடியாதே. அது எங்களுக்கு வேண்டும். தவிர அதைப் பறிக்கவேண்டும் என்றால் கொடியையே கலைத்துத்தான் ஆகவேண்டும்.

பி. வீ:—உங்களுக்கென்ன எத்தனையோ காய்கள் வேண்டியன கிடைக்கும். துவையலுக்கு நன்றாக இருக்கும் அந்தக் காய். நாங்கள் ஏறிக் கொடியைக் கலைக்காமல் சந்தடி பண்ணாமல் பறித்துக்கொள்ளுகிறோம். நீங்கள் ஒரு வார்த்தை சொன்னால் போதும்.

பெ வீ:— அப்படி யெல்லாம் திடீர் என்று சொல்லிவிட முடியுமா? வீட்டுப் பயிர்: அதை நம் பெண் பிள்ளைகளைக் கேட்காமல் தொடுக்கலாமா......(உள்ளிருக்கும் பெண்ணின் தாயாரைக்கூப்பிட்டு) ஏய், இவர்கள் கேட்கிறார்களே?.........

பெண்ணின் தாயார்:—அதென்ன, நீங்கள் அப்படிச் சொல்லி விடுகிறீர்களே, எவ்வளவு கஷ்டப்பட்டு அதை நட்டு வைத்தோம்.

பெ. வீ:—ஆமாம் ஆமாம். விலைக்குத் தான் அந்தக் காயை விட்டு வைத்தோம்.

பெ. தாயார்:—விதையை ஊன்றி. பாத்தி கட்டி, தினம் தண்ணீர் ஊற்றி எப்படி உழைத்தோம். கொடி தளதளவென்று வந்ததா? அதற்குக் கொழுகொம்பு நட்டு, தோட்டக்காரன் ஒருவனையும் தனியாகப் போட வேண்டியிருந்தது. தழை வைத்து எருப்போட்டு ஆடு மாடுகள் கடித்து விடாமல் காப்பாற்றிக் கூரை மேலே ஏற்றி விட்டோம். பூக்க ஆரம்பித்த பிறகே ரொம்ப சிரமமாகப் போய்விட்டது. களவாளிகள் கொண்டு போகாமல் பந்தோபஸ்தாகப் பார்த்துக்கொண்டோம். சும்மாக் கொடுக்க முடியுமா?

பி. வீ:—நீங்கள் சொல்வது சரிதான். நாங்களும் சும்மாக் கொடுக்கச் சொல்லவில்லையே. ரூபாய், கொடுக்கிறோம்' என்று சொல்லுகிறோமே?

பெ. வீ:—சரி, எவ்வளவு கொடுப்பீர்கள்?

பி. வீ:—வழக்கப்படி என்ன உண்டோ அது இரண்டரைப் பத்துதானே.

பெ. வீ:—அடே, அப்பா. என்ன ஊர் வழக்கம் தெரியாமல் சொல்லுகிறீர்களே: நாலு பத்துக்குக் குறைந்து யார் கொடுப்பார்கள்?

பி. வீ:—அதற்கு மேலே எங்களால் முடியாது நாங்கள் ஏழைகள் நீங்கள் எப்படியாவது அதற்கு ஒப்புக்கொண்டு, கொடுத்தே ஆக வேண்டும்.

பெ. வீ:—[பெண்ணின் தாயாரைப் பார்த்து] ஏய், எப்படி?

பெண்ணின் தாயார்:—அவர்கள் அப்புடிப் பிடிவாதமாக இருக்கும்போது நாமும் சொல்லிப் பிரயோஜனம் என்ன? அவர்களும் வந்து கேட்கிறார்கள். நாமும் எப்படித் தட்டி விடுவது? அவர்கள் இஷ்டப்படியே விட்டு விடுங்கள். இவை யாவும் விட்டுப் பிடிக்க வேண்டிய காரியங்கள்......ஏன் இப்போது சரிதானே?

பிள்ளை வீட்டார்:—

ஊற்றுக்குப் போனேன்
வற்றிப் போச்சு

ஓடைக்குப் போனேன்
　　மணல்தான் ஓடுது
மகளே நீ தான்
　　தண்ணி கொடு
மகளே நீ தான்
　　தண்ணி கொடு

பெண்:—

அப்படியானல்
　　தாழ்வாரத்திலே
வாசற்படியிலே
　　உட்காருக

பிள்ளை வீட்டார்:—

நூறு வருஷம்
　　அளப்பதெல்லாம்
நொடிப் பொழுதிலே
　　முடிவாச்சு

பெண்:—

ஆரோ வந்து
　　தண்ணி கேக்கரு
அவருக் கென்ன
　　சொல்லுறது
நீரோ மோரோ
　　கொடுக்க வேணும்
நீக்குப் போக்குத்
　　தெரியல்லே
பாவம் தாகமென்று
　　சொல்லுகிருர்
பசியும்
　　வந்து விட்டதாம்
சாவம் இவழ்
　　கொடுத்து விட்டாழ்
தலையில்
　　சுமக்க வேணும் பார்
திண்ணியிலே
　　தண்ணி வெச்சேன்
கிழவனுரைக் கூப்பிடு
　　தண்ணி கேட்டுத்
தவிச்ச வாய்க்குத் தராமல்
　　எப்படி இருப்பது?

பெ. வீ:—ஆமாம்; நீங்கள் புறப்பட்டு வரும்போது என்ன என்ன பார்த்தீர்கள?

பி. வீ:— அதுவா? நாங்கள் விடியற்காலையில் கறுக்கல்போதிலேயே கிளம்பினேம். அப்போது கட்டுக்கழுத்திகள் (சுமங்கலிகள்) எட்டு பேர் குளத்திலிருந்து தண்ணீர் மெண்டுகொண்டு எதிர் வந்தார்கள். அவர்களோடு சிறிது நேரம் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருந்தோம். அப்போதுதான் கிழக்கே சூரிய உதயமாயிற்று; 'தகதக'வென்று தங்கம்போல இருந்தது. அப்பாலே கொஞ்ச தூரம் வந்தால் யானை, குதிரை, பல்லக்கு இவைகளுடன் ராஜகுமாரன் ஒருவன் எதிரே வந்தான். வேறே பாம்பு பல்லி ஒன்று குறுக்கிட்டுவரவில்லை. இங்கே வரும்போது ஒரு பெண்-நல்ல அழகாக இருந்தாள்-தண்ணீர் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தாள் நாங்களும் அவள் பின்னலேயே வந்தோம்.

பெ. வீ:—அப்போது சரிதான். நல்ல சகுனந்தான் ஆகியிருக்கிறது.

(உள்ளிருக்கும் பெண்ணைப் பார்த்து) ஏ குட்டி, கொஞ்சம் தண்ணி கொண்டா.

பெண்:—(தண்ணீர் கொணர்ந்து வைக்கிருள். பிள்ளை வீட்டார் அதை எடுத்துக் குடிக்கிருர்கள்.)

அம்மா அம்மா
　　தண்ணி குடிக்கிற

நோயற்ற வாழ்வு

(12-ம் பக்கத்தொடர்ச்சி)

யிருந்து, அப்பழக்கத்தினுல் நாம் சௌக்கியமாயிருந்து வந்தோம். அவ்வுணவைச் சிறுகச் சிறுக நாம் விலக்கிக் 'காப்பிக் குடி நீரைக் காலையில் பருகும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டோம். காபிநீர் ஸாத்மியமாய் விட்டது. இப்பொழுது பழையது நமக்குச் சிறிதும் பிடிககவில்லை. அது பெரும்பாலோருக்கு ஒத்துக்கொள்வதும் கஷ்டமாயிருக்கிறது. ஆகவே நாம் இயற்கையாகவோ செயற்கையாகவோ செய்துவரும் பழக்க வழக்கங்களைக் கொண்டு முன்பு ஸாத்மியமாயிருந்த பழையதை அஸாத்மியமாகவும், அஸாத்மியமாயிருந்த காபிக்குடிநீரை ஸாத்மியமாகவும், செய்து கொள்ள முடிந்துவிட்டது. இனி இக்குடிநீரைப் பருகாமல திடீரென்று விட்டுவிடுவதும், பழையதை உண்ண முயல்வதும் ஆவ்வுளவு எளிதான காரியமல்ல.

"பாதே நாபத்ய மப்யஸ்தம் பாத-பாதேந வாத்ய ஜேத், நிஷேவேதஹிதம் தத்வத் ஏக-த்வி-த்ரியந்தரீக்ருதம்" என்கிருர் வாக் படர். அஸாத்மியம் என்பதுதான் அபத்தியம். அபத்தியமான வஸ்துவை உபயோகித்து அது வழக்கமாய்விட்டால், அதைத் திடீரென விட்டுவிடக் கூடாது; விடவும் முடியாது; ஆகவே அவ்விதம் வழக்கமாய் விட்ட அஸாத்மிய பதார்த்தத்தை முதலில் சில நாள் சிறுகச் சிறுக (கால் அல்லது அரைப் பங்கு வீதமாய்) குறைத்து உபயோகித்து வந்து, பிறகு கிரமமாக அதை முற்றிலும் பூரிகரித்து விடவேண்டும். அவ்விதமே உபயோகத்தில் இல்லாத ஸாத்மிய வஸ்துவையும் உடனே அதிகமாய் உபயோகியாமல், சிறுகச்சிறுக (கால் அல்லது அரைப் பங்கு வீதம்) உபயோகித்து வந்து. முடிவாக அஸாத்மிய பதார்த்தத்திற்குப் பதிலாக ஸாத்மிய பதார்த்தத்தையே உபயோகிக்க வேண்டும். முன் உபயோகித்த பழையது தானே என்று அதையே திடீரென்று உட்கொள்ள முயலுவதும், இடையில பழக்கத்துக்கு வந்த காபிக் குடி நீரை. உடனே விட்டுவிடுவதும் முறையல்ல. இதன் உண்மையைத்தான் "பாதேநாபத்யாமப்யஸ்தம்" என்ற ச்லோகத்தில் வாக்படர் விளக்கியிருக்கிருர். இதே முறையில் எட்டிக் கொட்டை போன்ற மிகவும் அஸாத்மியமான விஷச் சரக்குகளைக்கூடச் சிலர் கிரமமாக உபயோகித்து ஸாத்மியமாகச் செய்துகொள்கிருர்கள். மிகவும் விஷ குணமுள்ள சரக்குகளையும், அவை எவ்வளவு அஸாத்மியமாயிருந்தபோதிலும், சாஸ்திரத்திற் கூறிய முறைப்படி கிரமமாக உபயோகித்துவந்தால் சில நாட்களில் அவை தேகத்திற்கு மிகவும் ஸாத்மியமாகப் போய் உடலுக்குக் கெடுதி செய்யாதனவாக ஆவதுடன் வேறு விஷ பதார்த்தம் உடலிற் சேர்ந்தால் அதனுலும் கெடுதி நேரிடாதபடி தேகத்தைக் காக்கும் தன்மையும் அதனுல் ஏற்படுகின்றது.

வைசூரியெனப்படும் மஸூரிகையைத் தடுப்பதற்கும், வேறு சில ஸாங்கிராமிக ரோகங்களை (கொள்ளை நோய்களை)ப் பரவாமற் செய்யவும் இக்காலத்தில் நடந்தேறும் அம்மை குத்தும் முறை முதலியனவும் இந்த ஸாத்மியம் அஸாத்மியம் என்னும் தத்துவத்தை உணர்ந்துதான் ஏற்பட்டிருக்கிறது. ஆசார்ய வாக்படர் த்ரவ்யை ஸ்தைரேவ வா பூர்வம் சரீர ஸ்யாபிஸம்ஸ்க்ருதி:" என்று கூறியுள்ள விஷயம் இத்தத்துவத்தைக் குறிப்பிடுவதேயாம். எந்தச் சரக்குகள் அல்லது விஷங்கள் தேகத்தினுள் பிரவேசித்து வியாதிகளுக்குக் காரணமாகின்றனவோ, அப்பதார்த்தங்களையே அல்லது அவ்விஷங்களையே தகுந்த உபாயங்களால் தேகத்தினுட் செலுத்தி உடலை அவ்விஷச்சத்து தாக்காதபடி பக்குவப் படுத்திக் கொள்வதால் அவ்வஸ்து அல்லது விஷம் நமது தேகத்துக்கு உண்மையில் ஸாத்மியமாய் விடும் என்கிற விஷயத்தைத் தான் அந்த ச்லோகம் குறிப்பிடுகின்றது. ஸாத்மியம், அஸாத்மியம் என்னும் இந்த முக்கியமான விஷயத்தைக் குறித்து சரகரும், வேறு பல ஆயுர்வேத நூலாசிரியர்களும் வெகு விஸ்தாரமாகவும் தெளிவாகவும் கூறியிருக்கிருர்கள். உணவு வகைகளிலும் ஔஷதப் பிரயோகங்களிலும் மாத்திரமல்ல. ஆசாரக் கிரமங்களிலும் தேச காலாதி வேறுபாடுகளை அனுசரித்து நடக்க வேண்டிய வகைகள் அக்கிரந்தங்களிற் கூறியுள்ளவாறு தேகாரோக்கியத்தைக் காக்கவும், வியாதி நிவாரணம் செய்யவும் மிகவும் இன்றியமையாதவையாம்.

அவசரத்தைப் பாரடீ
எம்மா வேகம்
　என்ன ஆசை இதுக்குள்
　காலி பண்ணிட்டார்
[கல்யாணம் நிச்சயம் ஆகி விட்டது.]

கலைமகள் பிரசுரம்

முருகன் ஓர் உழவன்	1	8
முகுதினி	1	8
மாயா விநோதினி	1	8
பைரவி	1	8
விதியின் செயல் முதலிய கதைகள்	6	0

ஷாப்புகளில் கிடைக்கும்.

வைத்திய ரத்னம் பண்டித
எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஏ. கே. ஏ. ஸி:
ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய அவர்களுடைய மேற்பார்வையில் தயார் செய்யப்படும் சித்தௌஷதங்கள்.

ஸித்தயோக ரஸம்
ஸ்தூல தேஹம், பிளட் பிரெஷர் (High Blood-Pressure) என்னும் வாதரோகம், நீரிழிவு ஆகிய ரோகங்களுக்கு 100 மாத்திரை ரூ. 11. 50 மாத்திரை ரூ. 6.

மாதுலுங்க ரஸாயனம்
பசியின்மை, அரோசகம், பித்தக் கோளாறுகள், கர்ப்பிணிகளின் பித்த விகாரங்கள், குமட்டல் முதலியதை தீர்ப்பதில இணையற்றது. குழந்தைகளும்பசிதீபனத்திற்குக் குளிர்ச்சிக்கும் அருந்தக்கூடியது. தேன்போன்றது. 1 பவுண்ட் ரூ. 5. 6 அவுன்ஸ் ரூ. 2.

ஹரீதக்யாதி லேஹ்யம்
எவ்வித மலபந்தத்தையும் நிவ்ருத்திக்கும் ஸங்கடமுமில்லாமல் நாள்தோறும் மலத்தை வெளிப்படுத்தும். இரத்தமூலம், வயிற்றில் உப்பஸம் இவற்றிலும் மிக்க உபயோகமானது. குழந்தைகர்ப்பிணிஅனைவரும்உபயோகிக்கலாம். 1 பவுண்டு புட்டி ரூ. 3.

லோஹாஸவம்
இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும் இன்றியமையாத அயத்திராவகம். பாண்டு ரோகம், பலயீனம், சொறி, சிரங்கு முதலிய சர்மரோகங்கள் இவற்ருல்வருந்துபவர் அவச்யம் உபயோகிக்கக்கூடியது. 1 பவுண்டு ரூ. 4.

இராஜாம்ருகாங்கம்:
க்ஷயரோகத்தைத் தீர்ப்பதற்குச் சாஸ்திரத்திலும் அனுபவத்திலும் மிகப் பெயர்பெற்றது. பல க்ஷயரோகிகள் வேறு சிகித்ஸைகளால் குணமடையாமல் இதனுல் சுகமடைந்திருக்கிருர்கள். 100-மாத்திரை ரூ. 10. 50 மாத்திரை ரூ. 5—8—0.

ஸித்த மகரத்வஜம்
தாது புஷ்டியை விருத்தி செய்ய ஆண், பெண் இருபாலரும் உபயோகிக்கக் கூடிய சாஸ்திரப் பிரஸித்தமான சித்தௌஷதம், தங்க பஸ்மம் கலந்த ஆர்யன் பார்மஸியாரின் ஸித்த மகரத்வஜமே மிகவும் நம்பிக்கையுள்ளது. 1 தோலா செந்தூரம் ரூ. 25. மாத்திரையுருவாக 100மாத்திரை ரூ. 15. 50 மாத்திரை ரூ. 8. 25மாத்திரை ரூ. 4-8-0

சர்மரோகாந்தக லேபம்
எச்சில் தழும்பு, மேகப்படைகள், சொறி, சிரங்கு முதலிய தோலைப்பற்றிய கடுமையான வியாதிகளை சீக்கிரத்தில் நிச்சயமாகவும், திருப்திகரமாகவும் தீர்க்கக்கூடியது நூற்றுக் கணக்கானபேர்சுகமடைந்திருக்கிருர்கள். பெரிய டப்பி ரூ. 1—4—0 சிறிய டப்பி அணு 12.

குறிப்பு:—எதற்கும் தபால் சார்ஜ் பாக்கிங் சார்ஜ் முதலியது வேறு.

வேறு சாஸ்த்ரீய ஔஷதங்களும் கிடைக்கும்.
(வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன்)
"ஆர்யன் பார்மஸி — "ஆர்ய கிருஹம்"
11, ஆதியப்ப முதலித் தெரு :: வேப்பேரி போஸ்டு :: மதராஸ்

சிறுவர் பகுதி

வறுமையும் நாணயமும்

(ஸ்ரீ டி. பி. கே.)

பழனிக்கு வயது பனிரெண்டு. அவன் தகப்பனுர் ரயில் ஒர்க்ஷாப்பில் மாதம் இருபத்தைந்து ரூபாய் சம்பாதித்து வந்தார். குடும்பம் மிகவும் கஷ்ட ஜீவனமாகவே நடந்து வந்தது. ஆயினும் பழனி மிகவும் புத்திசாலியானதால் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து வாசிக்க வைத்தார்.

திடீரென்று பழனியின் தகப்பனுருக்குக் கொடிய ஜுரம் வந்தது. இரண்டு மூன்று நாடகள் படுபடுக்கையாகக் கிடந்து இறந்தார். பழனியும் அவன் தாயாரும் திக்கற்றவர்களாக விடப்பட்டனர். பழனியும் பள்ளிக்கூடத்தை விட்டு வேலை தேட ஆரம்பித்தான். முதல் சில தினங்களில் அவனுக்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு கோமுட்டி செட்டியிடம் மாதம் ஆறு ரூபாய் சம்பளத்தில் வேலைக்கு அமர்ந்தான். காலை எட்டு மணி முதல் இரவு எட்டு மணி வரை சரியாக வேலை வாங்கிவிட்டுத் தான் செட்டியரர் பழனியை வீட்டுக்கு அனுப்புவார். வேலை கடினமாயிருந்தாலும் கொஞ்சமும் மனம் தளராது பழனி வேலை செய்து வந்தான்.

ஒரு நாள் செட்டியார் கொத்தவால் சாவடிக்கு பழனியை அழைத்துச் சென்ருர். மறு நாள் அவர் வீட்டில் ஏதோ விருந்தானபடியால் வழக்கத்தை விட அதிகமாகவே சாமான்கள் வாங்கினுர். ஒரு வீசை தக்காளிப் பழம், 4, 5 முட்டை கோஸ் மற்றும் பல்வகை பங்களூர் காய்கறிகள் வாங்கி கூடையில் வைத்துக்கொண்டு கையில் ஒரு வீசை எண்ணெயுடன் பிடி வீடு நோக்கிப் புறப்பட்டான். ஏதோ காரியமாக செட்டியார் சற்று முன்னதாகவே புறப்பட்டு போய்விட்டார். மார்க்கெட்டின் வாயிலண்டை வந்ததும் ஜன நெருக்கம் ஜாஸ்தியாக இருந்தது. அங்கே கூட்டம் கலையும் வரை சற்று தாமதித்தான். அந்த சமயம் வெளியிலிருந்து ஒரு கனவான் ஜரிகைக் குல்லாயுடனும் தங்க கெடியார சங்கிலியுடனும் மார்க்கெட்டுக்குள் நுழைந்தார். அவரும் அதிகமாக காய்கறிகள் வாங்க வேண்டியவர். வழக்கம்போல் நாலைந்து கூலியாட்கள் "சாமி, சாமி, கூலி வேணுமா, நான் வரேன், நான் வரேன்" என்று ஒருவர் மீது ஒருவர் மோதிக்கொண்டு அக்கனவானைச் சுற்றிக்கொண்டு ஓடி வந்தனர். அவர்களிலொருவன் கனவானின் முகத்துக்கு நேராக போய் தன்னை வைத்துக் கொள்ளும்படி கேட்க நினைத்து மற்றவர்களை ஒதுக்கிக்கொண்டு வேகமாக நடந்தான். அவன் வந்த வேகத்தில் பக்கத்திலிருந்த பழனி கையில் பிடித்த எண்ணெய் சொம்பின்மேல் மோதி அதை கீழே உருட்டிவிட்டான். எண்ணெய்ச் சொம்பு விழுந்த அதிர்ச்சியில் தலையிலிருந்த கூடையும் கீழே விழுந்தது. காய்கறிகளில் சில பக்கத்திலிருந்த கால் வாயில் விழுந்தன. சொம்பில் துளி எண்ணெய்கூட இல்லாமல் சிந்தி விட்டது. பழனிக்கு இன்னது செய்வதென்று புரியாமல் தன் யஜமானனிடம் ஏப்படிச் செல்லுவது என்று எண்ணி, "ஓ" வென்று அழத் தொடங்கினுன். ஜனங்கள் பலர் பையனை வேடிக்கை பார்த்துக்கொண்டும் கூடைக்காரர்களை வைது கொண்டும் நின்றனர்.

சாமான் வாங்கச் சென்ற கனவான் சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த வழியாக வந்தார். வழியில் கூட்டத்தைக் கண்டு என்னவென்று விசாரித்தார். தன்னைச் சுற்றிக் கொண்டு வந்த கூடைக்காரர்கள்தான் அதற்கு காரணம் என்பதை தெரிந்து கொண்டு பையனை கூப்பிட்டார். "அடே, அழாதே ஏதோ தவறுதலாய் உன் மீது அவன் மோதி விட்டான். நீ யார் வீட்டு பையன்?" என்று விசாரித்தார். பழனி அழுதுகொண்டே" தனபால் செட்டி வீட்டில் வேலை செய்கிறேன். எனக்கு தகப்பனுர் கிடையாது" என்று சொன்னுன்.

"அடாடா தனபால் செட்டியா, மகா கோபிஷ்டனுச்சே. உனக்கு என்ன சம்பளம் என்ருர்?

"மாதம் ஆறு ரூபாய் கொடுக்கிருர்" என்ருன் பழனி விம்மிக்கொண்டே.

போனுல் போகிறது. இந்தா ஐந்து ரூபாய் நோட்டு சாமான்களை வாங்கிக்கொண்டு சீக்கிரம் வீட்டுக்குப்போ" என்று தைரியம் கூறி ஒரு ஐந்து ரூபாய் நோட்டை நீட்டினுர்.

பழனிக்கு சந்தோஷம் வந்தாலும் அக்கனவானுடைய அனுதாபத்தை அளவுக்குமேல் உபயோகப்படுத்திக்கொள்ள உத்தேசமில்லை.

"ஐயா, உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனுகிறேன். சாமான்களின் விலை இரண்டு ரூபாய் மூணு அணுதான். அது மட்டும் தாங்கள் கொடுத்தால்போதும்" என்று வணக்கமாக பதிலளித்தான். கனவான் எதிர் பாராதபடி பழனி பதில் சொல்லவே, அவனுடைய நாணயத்தை மிகவும் மெச்சியவராய் "பரவாயில்லை. இந்தா ஐந்து ரூபாய்நோட்டு மீதியை உன் செலவுக்கு வைத்துக் கொள்" என்று கூறி வற்புறுத்தினுர். போகும் போது உனக்கு ஓழிந்த போது, "நீ என்னை வந்து இந்த அட்ரஸில் பார்" என்று கூறி ஒரு விஸிடிங் கார்டையும் கொடுத்துச்சென்ருர்.

அடுத்த தினமே பழனி அவரைப்போய் பார்த்தான். "பையா, உனக்கு சம்மதமானுல் நீ என்னிடம் வந்து வேலை பார். உனக்கு ரூ. 25—சம்பளம் தருகிறேன்". தவிர நீ பள்ளிக்கூடத்திலும் சேர்ந்து வாசிக்க ஏற்பாடு செய்கிறேன். உன் தாயாரைக் கேட்டு, "அவளையும் இங்கு அழைத்து வா" என்று சொன்னுர். பழனி இதை முற்றிலும் எதிர் பார்க்கவில்லை. தாயாரின் சம்மதத்தின் பேரில் கனவானிடம் வேலைக்கு அமர்ந்து பள்ளிக்கூடத்திலும் சேர்ந்து வாசித்தான். எல்லா வகுப்பிலும் முதலாகத் தேறிக்கொண்டே வந்து மெட்ரிகுலேஷனிலும் ராஜதானியில் முதலாக தேறினுன்.

கனவான் அவனுடைய புத்திசாலித்தனத்தைப் பெரிதும் மெச்சி தன் ஒரே மகளையும் அவனுக்கு மணம் செய்விக்க விரும்பினுர். பழனி தன்னை அன்போடு வளர்த்து வந்த கனவானுடைய இச்சைப்படியே மணம் முடித்துக் கொண்டு வயது வந்ததும் அவருடைய சொத்தையும் மேல் பார்வை பார்த்து வந்தான். மனிதனுக்கு நாணயம் எவ்வளவு இன்றியமையாதது என்பது எவ்வளவு தெளிவாகத் தெரிகிறது பாருங்கள்.

எதிரியைக் குறி பார்க்கிருர்!



எதிரியின் கடல் விமானங்கள் இறங்காமல் தடுக்கும் பொருட்டு பிரிட்டிஷ் உள் நாட்டு காவற் படைக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப படைக்கு பலவிதமான சாதனங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இப் படையைச் சேர்ந்த ஒருவர் படகில் பீரங்கியுடன் குறி பார்க்கிருர்.